# 2015 ஆம் நிதி ஆண்டிற்கான
# காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின்
# செயலாற்றுகை அறிக்கை

## ***காணி அமைச்சு***

மாண்புமிகு. எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தன
காணி அமைச்சர்

கலாநிதி. ஐ.எச்.கே. மஹாநாம
செயலாளர், காணி அமைச்சு

## ***காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்***

திரு. ஆர். பி. ஆர். ராஜபக்ஷ
காணி ஆணையாளர் நாயகம்

திருமதி. பி.டி.இந்திகா எல். விஜேகுணவர்தன
காணி ஆணையாளர் (காணி)

திருமதி. டபிள்யு. டபிள்யு. ஏ. சந்திரா
காணி ஆணையாளர் (அபிவிருத்தி)

திரு. டி. ஏ. அசந்த குணசேகர
காணி ஆணையாளர் (நிருவாகம்)

திரு. பி. ஆர்.சேனாரத்ன
காணி ஆணையாளர் (நீதி)

திரு. எப்.எச்.எல்.எம். பி.த. சில்வா
பிரதம கணக்காளர்

திரு. ஏ. ரி. சிவபாதசுந்தரம்
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

## பிராந்திய அலுவலகங்கள்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம்- அநுராதபுரம்

திரு. ஈ. எம்.எம். ஏகநாயக்க
பிரதிக் காணி ஆணையாளர்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - பொலொன்னறுவ

ஆர். எம். டி. பி. புஷ்ப குமாரி
பிரதிக் காணி ஆணையாளர்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - அம்பாரை

டி. டி. எஸ். தக்ஷிலா குணரத்ன
உதவி காணி ஆணையாளர்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் – தெபரவெவ
திரு. டபிள்யு. சி. எஸ்.கே. ரத்னாநாயக்க (பதில்)
பிரதிக் காணி ஆணையாளர்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் – மஹியங்கன

திரு. ஆர். எம்.என்.சி. ஹேமகுமார
உதவிக் காணி ஆணையாளர்

பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - திருகோணமலை

திரு. கே. ஜி. ஏ. கே. பளுகஸ்வெவ
உதவிக் காணி ஆணையாளர்

உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம் - மொணராகல
திரு. டபிள்யு. சி. எஸ்.கே. ரத்னாநாயக்க
பிரதிக் காணி ஆணையாளர்

உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம் – கந்தளாய்
திரு. கே. ஜஹன்நாத்
உதவிக் காணி ஆணையாளர்

## திணைக்களத்தின் நோக்கு

" அரச காணிகளின்

முகாமைத்துவத்தில்

முன்னோடியாகச்

சிக்கலற்ற நிலத்திற்குச்

சொந்தமான

சமூகமொன்றைத்

தோற்றுவித்தல் "

## திணைக்களத்தின் செயற்பணி

" தேசிய கொள்கை பணிச்சட்டத்தினுள்
சிறந்த ஒருங்கிணைப்புடன் அபிவிருத்தியின்
நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்திய
வண்ணம் அரசாங்கக் காணிகளை
உச்ச மட்டத்தில் பயன்படுத்தி,
சிக்கலற்ற நிலத்தின் உரிமை
உறுதி செய்யப்படுகின்ற முறையான
முகாமைத்துவமொன்றைப்
பேணிச் செல்லல் "

## பெறுமதிக் கணிப்புக்கள்

01. சேவை நாடுநரை முதன்மையாகக் கவனித்தல்
02. சேவை நாடுநருக்கு இலகுவான சுற்றுச்சூழலை அமைத்தல்
03. கூட்டுப் பங்கேற்பு ஊடாக வினைத்திறனுடனான சேவையை வழங்குதல்
04. தகவல் தொழில் நுட்பம் ஊடாக சேவையின் வினைத்திறனை அதிகரித்தல்
05. திருப்தியடைகின்ற பணியணியினர்

**திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் அவற்றைச் சாதிப்பதற்கான உபாய வழி முறைகள்**

| நோக்கங்கள் | உபாய வழி முறைகள் |
|---|---|
| 1. காணிகளற்ற மக்கள் காணி உடைமை கொள்வதை வலுவாக்குதல் | I. காணிக்கான உரிமையை உறுதி செய்தல்<br>II. அரச காணிகள் தொடர்பாக விதிமுறையான தரவுகள் முறைமை ஒன்றைப் பேணி நடத்துதல் |
| 2. முதலீட்டுச் சந்தர்ப்பங்களை விரிவாக்குதல் | I. முதலீட்டுச் சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்கு வசதியாக அரச காணிகளைப் பயன்படுத்துதல் |
| 3. அரச காணிகளைப் உச்ச மட்டத்தில் உபயோகித்தல் | I. அரச காணிகளைப் உச்ச மட்டத்தில் அபிவிருத்தி செய்தல்<br>II. அரச காணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்தல்<br>III. அரச காணிகளைப் உச்ச மட்டத்தில் பயன்படுத்துதல் |
| 4. திணைக்களத்திற்கு சொந்தமான வளங்களை உச்சமட்டத்தில் முகைமை செய்தல் | I. மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்<br>II. பௌதீக வளங்களை உற்பத்திதிறன் மிக்கவையாக பயன்படுத்துதல்<br>III. நிதி சார்ந்த வளங்களை முறையாக முகாமை செய்தல் |
| 5. அரச வருமானத்தை அதிகரிக்கச் செய்ய பங்களிப்பு வழங்குதல் | I. காணிகள் தொடர்புடைய வருமானத்தை இனங்காணல், மற்றும் மதிப்பீடுசெய்தல்<br>II. காணிகள் தொடர்புடைய வருமானத்தை முறையாகவும் வினைத்திறனுடனும் சேகரித்தல்<br>III. நிலுவையில் உள்ள வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்குச் சட்டரீதியான படிமுறைகளை மேற்கொள்ளுதல். |

## உள்ளடக்கம் பக்க இலக்கம்


**01.அத்தியாயம் - அறிமுகம்** 15 - 25

1.1 காணி நிர்வாகத்தில் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் பணிகள்

1.2 திணைக்களத்தின் வளர்ச்சி

1.3 2015 இல் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் பின்னைடைவுகள்

**02.அத்தியாயம் - காணியற்ற மக்களின் காணி ஆட்சியை வலுப்படுத்துதல்** 27 - 55

2.1 அறிமுகம்

2.2 காணிகளைப் பகிர்ந்தளித்தல்

2.2.1 காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்

2.2.2 அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலக் குத்தகை முறிகள் வழங்குதல்

2.2.3 "பிம்சவிய" வேலைத்திட்டத்தின் கீழ் காணிகள் பகிர்ந்தளித்தல்

2.3 அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்

2.3.1. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்கள் வழங்கல்

2.3.2. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்

2.3.3. இலவச அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்

2.3.4. பூஜாபூமி அளிப்புக்கள் வழங்குதல்

2.3.5. சுனாமி அளிப்புக்கள் வழங்கள்

2.3.6. காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணிகள் வழங்குதல் (ஆதனவளிப்புச் சாதனப்பத்திரம் வழங்குதல்)

2.3.7.வழங்கப்பட்டுள்ள காணிகளைக் கைமாற்றம் செய்தல், ஈடுவைத்தல் மற்றும் கீழ்க் குத்தகைக்கு விடுதல்

2.3.8. திணைக்களங்களுக்குக் காணிகளை விடுவித்தல்

2.4 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் யுத்தத்திற்குப் பின்னுள்ள காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் விசேட வேலைத்திட்டம் (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய)

2.4.1 இந்த வேலைத்திட்டம் குறித்து மக்களுக்கு அறிவூட்டுதல்

2.4.2 வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்

2.5 காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்குதல்

2.5.1 பகுதி நாள் பரிசோதனைகள்

2.5.2 நடமாடும் சேவைகள்

2.5.3 மாகாணங்களுக்கு இடைப்பட்ட நீர்ப்பாசன காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மாகாண சபைகள் மட்டத்தில் அரச காணிகள் தொடர்புடைய பிரச்சினைகளைத் திர்த்துவைக்கும் வேலைத்திட்டம்

2.6 அரச காணிகள் தொடர்புடைய தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை

2.6.1 அறிமுகம்

2.6.2 அரச காணிகள் முகாமைத்துவ செயற்படுத்தல் முறையை மீள்பொறியியல் ஆக்கல்

2.6.3 அரச காணிகள் தொடர்பான தகவல் முகாமைத்துவ முறைமையைச் செயற்படுத்துதல்

2.7 அரச காணிகளின் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் நடவடிக்கைகளை எடுத்தல்
2.7.1. பிரதேசச் செயலாளர்களுக்குச் சுற்றறிக்கைகளை வழங்குதல்

03. **அத்தியாயம் - முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்காக அரச காணிகளை உயோகித்தல்** **57 - 60**
3.1 அறிமுகம்
3.2 முதலீட்டு நடவடிக்கைகளுக்காகக் காணிகளை வழங்குதல்
3.3 வெளிநாட்டவர்களுக்கு அரச காணிகள் சாட்டுதல் செய்வதை மட்டுப்படுத்துகின்ற சட்டத்தை செயற்படுத்துதல்.
3.3.1 அறிமுகம்
3.3.2. வெளிநாட்டவர்களுக்கு அரச காணிகளை சாட்டுதல் செய்வதை மட்டுப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்த அடிப்படை கோட்பாடுகள்
3.3.3. காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் பணிகளை நிறைவு செய்தல்

04. **அத்தியாயம் - அரச காணிகளை மிகச் சிறந்த முறையில் உபயோகித்தல்** **61 - 63**
4.1 அறிமுகம்
4.2 அரச காணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்
4.3 சுற்றுச் சூழல் கொள்கைகள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தும் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டகள் சம்பந்தமாக பங்களிப்பு வழங்குதல்
4.3.1. அறிமுகம்
4.3.2. சுற்றுச்சூழல் கொள்கைகள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்துதல் சம்பந்தமாக பங்களிப்புச் செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்

05.**அத்தியாயம் - வருமானத்தை முகாமைத்துவம் செய்தல்** **65 - 68**
5.1 அறிமுகம்
5.2 காணி குத்தகை வருமானத்தை மதிப்பிடுதல் மற்றும் சேகரித்தல்
5.3 நிலுவையில் உள்ள குத்தகை வருமானத்தை அறவிடுதல்

06.**அத்தியாயம் - மனித வள முகாமைத்துவம்** **69 - 76**
6.1 அறிமுகம்
6.1.1. அலுவலகப் பணியணியினரின் கட்டமைப்பு
6.1.2. இட மாற்றங்கள்
6.1.3. ஓய்வு பெறுதல்
6.2 தாபன நடவடிக்கைகள்
6.2.1. பதவி உயர்வு பெறுதல்
6.2.2. பணியணியினரின் நலனோம்பு
6.3 மனித வள அபிவிருத்தி

07.**அத்தியாயம் - பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல்** **77 - 81**
7.1 அறிமுகம்
7.2 பௌதீக வளங்களை உயோகித்தல்,மற்றும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்,மற்றும் வழங்குதல் நடவடிக்கைகள்,மற்றும் பொருள்களை அகற்றுதல்
7.3 களஞ்சிய முகாமைத்துவம்

08.**அத்தியாயம் - நிதி முகாமைத்துவம்** **83 - 87**
8.1 அறிமுகம்
8.2 வரவு - செலவு முகாமைத்துவம்
8.3 அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு “பி”
8.4 கணக்காய்வு நடவடிக்கைகள்

**இணைப்பு** **89 - 130**

# 1. அத்தியாயம் - அறிமுகம்

## 1.1 காணி நிருவாகத்தில் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் பணிகள்

காணி முகாமைத்துவத்தில் முன்னோடியாக விளங்கும் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், அரசாங்கக் காணிகளைக் கையுதிர்த்தல் செய்யும் பணியின் போது மிக முக்கிய பணியை நிறைவேற்றி வருகின்றது.

1. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, காணி அபிவிருத்தித் திட்டங்களை முகாமை செய்தல்.
2. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குடியேற்றத் திட்டங்களைத் திட்டமிடுதலும் செயற்படுத்துதலும், பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் சார்பில் அளிப்புப் பத்திரங்களை விநியோகித்தலும்.
3. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித்தல். இதன் கீழ் -
    - வீடமைப்பு,கைத்தொழில், விவசாயம், வர்த்தக நோக்கங்களுக்காக நீண்டகால அனுமதிப் பத்திரங்களின் கீழ் காணிகளை வழங்குதல்.
    - விசேட மற்றும் இலவச அளிப்புப் பத்திரங்களை வழங்குதல்.
    - பௌத்த விகாரைகளுக்காக பூஜா உறுதிகளை வழங்குதல்.
    - அரச திணைக்களங்கள், நியதிச்சட்டச் சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் முதலான நிறுவனங்களுக்குத் தேவையான காணிகளை விடுவித்தலும், குத்தகைக்கு விடுதலும் உடைமையாக்குதலும்.
4. காணி அளிப்பு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித்தலும், அளிப்புப் பத்திரங்களை வழங்குதலும்.
5. அரசாங்கக் காணிகள் (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் அரசாங்கக் காணிகளையும், ஒதுக்கங்களையும் பேணிப் பாதுகாத்தல்.
6. குடியேற்றத் திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
7. மாகாணங்களுக்கிடையிலான காணி அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு வெளியே அரசாங்கக் காணிகளின் நிருவாகம் தொடர்பில், மாகாணக் காணி ஆணையாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.
8. பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கும், திட்டமிடல்களுக்கும் தேவையான காணித் தரவுகளை வழங்குதல்.

9. அரசாங்கக் காணிகள் தொடர்பான முகாமைத்துவ முறையைப் பேணிச் செல்லல்.

10. அரசாங்கத்தின் வரி வருமானத்தை பலப்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரங்கள் மீது அறவிடப்படுகின்ற வரி வருமானத்தை அறவிடும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தல்.

11. மனிதவள அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்.

**12.** நிலச்சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அரச காணிகளுக்கான உரிமைபத்திரங்களை வழங்குதல்

**13.** அரச காணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்தல்

**14.** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிப்பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளைச் செயற்படுத்தல்.

**15.** காணி தொடர்பான பிணக்குகளைத்தீர்த்து வைத்தல் மற்றும் இணக்கத்தை ஏற்படுத்துதல்.

## 1.2 திணைக்களத்தின் வளர்ச்சி

இலங்கையின் நிர்வாக ஆதிபத்தியத்தைப் பிரித்தானியர் நீண்ட காலமாக தம் வசம் வைத்திருந்தனர். அந்தக் காலக்கட்டத்தில் மலைநாட்டில் தேயிலை உற்பத்தியை ஆரம்பம் செய்தல், உலர்வலயத்தின் நீர்ப்பாசனத் திட்டங்கள் வீழ்ச்சி அடைதல், மக்கள் கூட்டம் தென்மேற்கு ஈரவலயங்கள் நெடுகிலும் குடியமர்தல்,நெல் உற்பத்திற்கு உரிய இடம் வழங்கப்படாமை, சுய தேவையைப் பூர்த்தி செய்கின்ற பொருளாதாரத்திற்குப் பதிலாக வர்த்தகப் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்தமை, முதலாம் உலக மகா யுத்தத்தின் போது உணவுத்தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளுக்கு இந்நாட்டு மக்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்தது. இந்தக் காரணங்களால், அன்றைய அரச சபையில் பதவிகள் வகித்த இந்நாட்டுப் பிரதிநிதிகள் இது தொடர்பாக விசேட கவனத்தை மேற்கொண்டமை, உணவு உற்பத்தியை விரைவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமை, தென்மேற்குப் பகுதிகளில் குடியமர்ந்திருந்த மக்களை, இலங்கையின் ஏனைய பகுதிகளில் குடியமர்த்துவதற்கான தேவை எழுந்தமை - இந்த அனைத்துப் பணிகளுக்கும் தீர்வுகண்டு செயற்பாடுகளை விதந்துரைக்கும் பொருட்டு 1927 இல் இலங்கையில் முதல் முறையாகக் காணி விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் விதப்புரைக்கு அமைய 1931 இல் காணி ஆணையாளர் திணைக்களம் நிறுவப்பட்டதுடன், இலங்கையின் முதலாவது காணி ஆணையாளராக சி.வி. பிரேன் என்பவர் நியமிக்கப்பட்டார். அரசுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரப் பொறுப்புக்கள் இந்தத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டன. பாரிய விவசாயக் குடியேற்றங்கள், மேட்டு நில அபிவிருத்திக் திட்டம், கிராம விரிவாக்கல் திட்டம், இளைஞர் யுவதிகளுக்கான திட்டம், மத்திய வகுப்பினருக்கான திட்டம் என ஐந்து பெரும் திட்டங்கள், அறிமுகம் செய்ததுடன் காணிக் கச்சேரிகளை நடத்திக் காணி பெறுநர்களைத் தேர்ந்தெடுத்தல், காணிகளைப் பகிர்ந்தளித்தல், ஆகிய பணிகளும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டன. 1931 இல் “காணிகள் நிர்ணயம் செய்யும் கட்டளைச் சட்டம்” அரச காணிகள் மற்றும் தனியார் காணிகளை வேறுபடுத்தி அடையாளம் காணும் பொருட்டு நிறைவேற்றப்பட்டது 1935 இல் “காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்” சட்ட வாக்கம் செய்யப்பட்டு, இதன் ஊடாக அரசுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளின் நம்பிக்கைப் பொறுப்பாண்மை அவற்றைப் பகிர்ந்தளித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய அனைத்துத் தத்துவங்களும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உடைமையாக்கப்பட்டன.

வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும், வதிவிடம் அமைப்பதற்காகவும் காணித் துண்டுகளை வழங்குதல், பலவேறு தேவைகளுக்காக காணிகளை ஒதுக்கீடு செய்தல்,கரையோரங்கள், எரிகள் மற்றும் அருவிகள் உள்ளிட்ட அரச காணிகளை இலகுவாக நிருவாகம் செய்தல் ஆகிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய " அரச காணிகள் கட்டளைச் சட்டம்" 1947 இல் சட்டவாக்கம் செய்யப்பட்டு இந்தப் பணிகளுக்கான தத்துவங்களும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உடைமையாக்கப்பட்டன.

"1972 ஆம் ஆண்டு 01 இலக்கக் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டம்" சட்டவாக்கம் செய்யப்பட்டு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்தச் சட்டம் ஊடாக, 50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட அனைத்துக் காணிகளின் உரிமை ஆணைக்குழுவிற்கு உடைமையாக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் சட்டவாக்கம் செய்யப்பட்ட " காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம், காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உடைமையாக்கப்பட்ட காணிகள் மீளவும் அரசுக்கு உடைமையாக்கப்பட்டு, பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய, பாரிய பணியும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உடைமையாக்கப்பட்டது.

அரசு காணிகளில் அத்துமீறல் செய்து ஆட்சி செய்யும் அல்லது வசிக்கும் நபர்களை அப்புறப்படுத்தி குறித்த காணிகளின் உடைமையை அரசுக்குப் பெற்றும் கொள்ளும் பொருட்டு 1979 இல் "அரச காணிகளின் ஆட்சியை" மீளப் பெறுதல் சட்டம்" சட்டவாக்கம்' செய்யப்பட்டு, இச்சட்டத்தின் மூலமான தத்துவங்களும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 11 ஆம் அட்டவணையின் பிரகாரம், காணி நிர்வாக விடயங்களில் ஒரு பகுதி மாகாண சபைக்கு மாற்றப்பட்டது. இந்தத் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கிடைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்புடைய காணிகளின் நிருவாகம், காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உடைமையாக்கப்பட்டன. மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதேசங்களாகக் கருதப்படுகின்ற அனுராதபுரம், புத்தளம், குருநாகல், மன்னார், வவுனியா, திருகோணமலை, பொலொன்னறுவ, மாத்தளை, கண்டி, பதுளை, அம்பாறை, மட்டக்களப்பு, மொணராகல, ஹம்பந்தொட்ட மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள், அனுராதபுரம் வலயம் 01 , அனுராதபுரம் வலயம் 02, பொலொன்னறுவ வலயம், மஹியங்கன வலயம் தெபரவெவ வலயம் மற்றும் அம்பரை

வலயம் என ஆறு வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டு நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிருவாக நடவடிக்கைகளுக்கு வசதியாகப் பிரதிக் காணி ஆணையாளர்கள், உதவிக் காணி ஆணையாளர்கள், குடியேற்ற அலுவலர்கள், வெளிக்கள உபதேசகர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2014.09.03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இதுவரையிலும் காணி ஆணையாளர் திணைக்களம் என அறியப்பட்டு வந்த இந்தத் திணைக்களம், 2004.09.15 ஆம் திகதி தொடக்கம் "காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்" எனத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது இதன் பிரகாரம் காணி ஆணையாளருக்கு இது வரையிலும் இருந்த தத்துவங்கள் "காணி ஆணையாளர் நாயகத்திற்கு" உடைமையாக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்திண் வளர்ச்சி

1927 இல் காணி ஆணைக்குழு நியமித்தல்

1931 இல் காணி ஆணையாளர் திணைக்களம் ஸ்தாபித்தல்

1931 இல் காணி நிர்ணயம் செய்யும் கட்டளைச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்படுதல்

1935 இல் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்படுதல்

1947 இல் அரச காணிகள் கட்டளைச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்படுதல்

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்படுதல்

1979 இல் அரச காணிகள் ஆட்சியை மீளப்பெறும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஏற்றுக்கொள்ளப்படுதல்

1979 இல் காணிகள் ஆட்சியை மீளப்பெறும் சட்டம் ஏற்றுக் கொள்ளப்படுதல்

1978 ஆம் ஆண்டின் அரசிலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைய காணி தொடர்பான தத்துவங்களின் ஒரு பகுதி மாகாணசபைக்கு உடைமையாக்குதல்

2004.09.15 ஆந் திகதி காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் என தரம் உயர்த்தப்படுதல்

## 1.3. 2015 இல் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள்

### I. அறிமுகம்

திணைக்களத்தில் சில காலமாக இருந்து வந்த பணியணியினரின் வெற்றிடங்கள், 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கணிசமான அளவு நிரப்பப்பட்டிருந்தன. பட்டதாரிகளை அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், 200 புதிய பதவிகள் திணைக்களத்தினுள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், இந்த எண்ணிக்கையில் அதிக அளவு நிரப்பிக் கொள்ள முடியுமாக இருந்தது. மேலும், இலங்கை நிருவாக சேவையில் ஏற்பட்டிருந்த அனேக வெற்றிடங்கள், புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களைக் கொண்டு நிரப்பிக்கொள்ள முடியுமாக இருந்தது. திணைக்களத்தினால் மேற்கொள்ள்ளப்படுகின்ற கருமங்கள் அதிகரித்தமை இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்தன எனக்குறிப்பிடுதல் வேண்டும். இருப்பினும் திணைக்களத்தின் மட்டத்தில் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத காரணிகளால் சில பிரிவுகளின் முன்னேற்றம் குறைவடைந்து அவை பின்னடைவுக்கு உட்ப்பட்டுள்ளன என குறிப்பிடுதல் வேண்டும்.

### II. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக் ஆணைக்குழுவின் விதப்புரைளைச் செயற்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தின் மூலமாகப் பெற்றுக் கொண்டுள்ள வெற்றி

2013 சனவரி தொடக்கம் செயற்பாட்டுக்கு உட்படுத்திக் கொண்டு வந்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக் ஆணைக்குழுவின் விதப்புரைளை செயற்படுத்திக், கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகளுக்குப் பின்னரான அரச காணிகள் தொடர்பான பிணக்குகளுக்குத் தீர்வுகள் காணும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ், 2014 ஆம் வருடத்தை விடவும் அதிக முன்னேற்றத்தை 2015 ஆம் வருடத்தில் அடைந்துக் கொள்ள முடியுமாக இருந்தது. 100 நாட்கள் வேலைத்திட்டத்தின்கீழ் 10,000 இடம்பெயர்ந்தவர்களுக்குக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அனுமதி மற்றும் அளிப்புப்பத்திரங்கள் வழங்க முடிந்தது.

அதிமேதகு சனாதிபதியின் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் ஒரு செயற்குழு, இந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளைச் செயற்படுத்துகின்ற தேசிய

வேலைத்திட்டம் தொடர்புடைய பின்னூட்டல் தகவல்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கின்றது, இந்தப் பின்னூட்டல் தகவல்கள் சம்பந்தமான கலந்துரையாடலின் போது, ஏனைய அமைச்சுக்களினால் இந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளைச் செயற்படுத்தும் பணிகளின் முன்னேற்றத்துடன் ஒப்பீடு செய்யும் போது, இந்தத் திணைக்ளத்தினால் செயற்ப்படுத்தப்பட்டு அடைந்துள்ள முன்னேற்றம் அதிக உயர் மட்டத்தில் விளங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தை செயற்ப்படுத்தும் பொருட்டு, குறித்த இரண்டு மாகாணங்களின் காணி ஆணையாளர்கள் மற்றும் பிரதேசச் செயலாளர்களுடன் இந்த வேலைத்திட்டம் குறித்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள உதவிக் காணி ஆணையாளர்கள் ஆகியோரிடமிருந்து விசேட ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றது என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். இந்த வருடத்தினுள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 32,593 காணித் துண்டுக்களுக்கான அனுமதிப்பத்திங்கள் வழங்கியமை விசேட ஒரு நிகழ்வாகும்.

## III. காணியற்ற நபர்களுக்குக் காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கும் நாடு முழுவதற்குமான வேலைத்திட்டம்.

2005 ஆம் வருடத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்ற காணியற்ற நபர்களுக்குக் காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கும் நாடு முழுவதற்குமான வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டத்தை நிறைவு செய்து கொண்டு, 2009 ஆம் வருடம் ஓகஸ்த்து மாதம் தொடக்கம் இவ்வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மேலும் ஓர் இலட்சம் காணித்துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2014 ஆம் வருடம் இறுதி வரையிலும் 129,769 காணித்துண்டுகள் தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் வழங்க முடியுமாக இருந்ததுடன், 2015 ஆம் வருடத்தில் இந்த வேலைத்திட்டத்தைக் காணியற்ற நபர்களுக்கே காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கும் நாடு முழுவதற்குமான வேலைத்திட்டமாகத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செயற்படுத்தப்பட்டு 42,341 காணித்துண்டுகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியுமாக இருந்தது.

## IV. அரச காணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையைச் செயற்படுத்துதல்.

அரச காணிகளின் நிருவாகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த வினைத்திறன் இல்லாமை மற்றும் சேவைகள் வழங்குவதில் உண்டான தாமதங்கள் ஆகியவற்றிற்கு நல்ல பரிகாரமாகப், பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகளுக்கு ஒரு பலனாக அரச காணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் முகாமைத்துவம் முறைமையை

வெளிப்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது. இதன் முதல் கட்டமாக, காணிகள் தொடர்பான தகவல்களை வழங்குதல், காணிகள் பகிர்ந்தளித்தல், மற்றும் ஆவணங்கள் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொண்ட மென்பொருளை வெற்றிகரமாக இவ்வருடத்தினுள் செயற்படுத்த முடிந்தது. இது தொடர்பாக 116 பிரதேசச் செயலகங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கி செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடிந்தது. 2015 ஆம் வருடத்தில் இந்தக் கருத்திட்டம் ஊடாக ரண்பிம உறுதிகள் 450 வழங்குவதற்கு முடியுமாக இருந்தது.

## V. புதிய பதவிகளை உருவாக்குதல்.

2015 ஆம் வருடத்தில், காணி ஆணையாளர் (காணி முகாமைத்துவம்) பதவி 01, பிரதிக்காணியாளர் (ரண்பிம) பதவி 01, உதவிக் காணி ஆணையாளர் பதவிகள் 05, சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவிகள் 03 மற்றும் சுற்றுலாத் தொழிலாளர்கள் பதவிகள் 03 ஆகிய பதவிகளைப் புதிதாக உருவாக்கும் பொருட்டு, முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை 03/2014 க்கு ஏற்ப முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையிலும் அவற்றிற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை.

## VI. உற்பத்தித்திறன் முன்னேற்ற நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்.

2015 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 2014 ஆம் ஆண்டிற்கான திணைக்களங்களுக்கிடையிலான தேசிய உற்பத்தித்திறன் விழாப் போட்டியில் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களமும் பங்கேற்புச் செய்தது. இதன் பொருட்டு, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு ஒரு தனி அலகை அரம்பித்து, இணைப்பாளராக ஓர் உதவிக் காணி ஆணையாளரும் நியமிக்கப்பட்டார். இந்தப் போட்டியை இலக்கு வைத்து செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் குறிப்பாக “5 S” எண்ணக்கரு உயர்ந்த மட்டத்தில் செயற்படுத்தப்பட முடிந்தது. இந்தத் தேசிய உற்பத்தித்திறன் பரிசுக்கான போட்டியில் 2014 அரச பிரிவைப் பிரதிநிதிப்படுத்திக் கொண்டு தலைமை அலுவலகம், திணைக்களங்களுக்கிடையிலான பிரிவின்கீழ் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும், மஹியங்கனைப் பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் 2014 தேசிய உற்பத்தித்திறன் பரிசுக்கான போட்டியில் அரச பிரிவில் சிறிய அளவிலான அலுவலகங்களுக்கிடையில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெற்றி கண்டது. இதன் பிரகாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் அதிகமான வெற்றிப் பெறுபேறுகளைப்

பெற்றுக்கொண்டுள்ள சாதனையில் அனைத்துப் பணியனியினரின் பங்களிப்புக் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுக் கொள்ள முடியும்

**புகைப்படம் 01**




2014 தேசிய உற்பத்தித்திறன் பரிசளிப்பு விழாவின் போது, அரச பிரிவைப் பிரதிநிதிப்படுத்திக் கொண்டு, காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், திணைக்களங்களுக்கிடையில் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தை வென்றெடுத்தமைக்காக வழங்கப்பட்ட பரிசு மற்றும் சான்றிதழை காணி ஆணையாளர் நாயகம் அவர்கள் மற்றும் அலுவலர்கள் பெற்றுக் கொள்ளுகின்ற காட்சி.

**புகைப்படம் 02**



2014 தேசிய உற்பத்தித்திறன் பரிசுக்கான போட்டியில், அரச பிரிவில் சிறிய அளவிலான அலுவலகங்களுக்கிடையில் மூன்றாவது இடத்தை மஹியங்கனைப் பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகத்தினால் வென்றெடுத்த காட்சி.

## VII. தமிழ்மொழியில் பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற தாமதங்கள்

விசேடமாக யுத்தத்தின் பின்னர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகள் தொடர்பான அதிக அளவில் பிணக்குகளைத் தீர்க்கும் பணிகளில் இந்தத் திணைக்களம் ஈடுபட்டுக் கொண்டு வருகிறது. திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள், கடிதங்கள் மற்றும் மேன் முறையீடுகள் அனேகமானவை தமிழ் மொழியில் எழுதப்பட்டுக் கிடைக்கின்றன இருப்பினும், தமிழ்மொழியில் பணியாற்றும் பொருட்டு தேர்ச்சி பெற்றுள்ள அலுவலர்கள் காணி விடயங்கள் தொடர்பாகக் கடமை புரியக் கூடிய பதவி நிலை அலுவலர் ஒருவர் மட்டுமே உள்ளார். 2015 ஆம் வருடத்தில் தமிழ் மொழி மூலமான 04 முகாமைத்துவ உதவி அலுவலர்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. தமிழ்மொழி மொழிபெயர்பாளருக்கான வெற்றிடம் இருந்தும் நீண்ட காலமாக இது நிரப்பப்படவில்லை, இவ்வாறான நிலைமையில் நாளாந்தம் கிடைக்கப்பெறுகின்ற அதிக அளவிலான ஆவணங்கள் வெளிவாரி மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு மொழிமாற்றம் செய்யப்படுவதினால் ஏற்படுகின்ற தாமதங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது.

## VIII. திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம்.

2015 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பில் சிறிதளவிலான மாற்றம் ஏற்பட்டது. இதுவரையிலும் ரண்பிம அலகு காணிப் பிரிவின்கீழ் செயற்பட்டு வந்ததுடன், 2015 ஆம் வருடத்தில் இந்த அலகு அபிவிருத்திப் பிரிவின்கீழ் கொண்டு வரப்பட்டதுடன் இதன் மூலமாகச் சமமான விடயங்களை ஒரு இடத்திலேயே செயற்படுத்தக் கூடுமாகையால், பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது இலகுவாகியது.

## 02. அத்தியாயம் - காணியற்ற மக்களின் காணி ஆட்சியை வலுப்படுத்துதல்

### 2.1 அறிமுகம்

2008/04 ஆம் இலக்கச் சுற்றறிக்கை பிரகாரம், காணியற்ற மக்களை இனங்கண்டு, அவர்களைப் பிரதேசச் செயலாளர் பிரிவு மட்டத்தில் பதிவு செய்து கொள்வதற்கான ஒரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள மக்களில் அனேகமானோர் சிலகாலமாக அரச காணிகளில் அத்துமீறல் செய்து குடியிருந்து வருகின்ற ஆனால் காணிக்கான உரிமையைப் பெற்றிருக்காதவர்கள் ஆவர். இவ்வாறு அத்துமீறல் செய்யப்பட்டுள்ள காணிகள் மற்றும் பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமானவை என அடையாளம் காணப்பட்டுள்ள காணிகள் ஆகியவற்றைக் காணி அற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்கான விசேட வேலைத்திட்டம் 2006 ஆம் வருடம் முதல் செயற்படுத்தப்பட்டு அதன் முதலாவது கட்டம் 2009 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. இந்த வேலைத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் அதிலிருந்து மேலும் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான காணித்துண்டுகள் 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2015 ஆம் வருடத்தில் இது வேறு ஒரு தோற்றத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியில் 42,341 காணித்துண்டுகளைப் பகிர்ந்தளிக்க முடிந்தது.

### 2.2 காணிகளைப் பகிர்ந்தளித்தல்


காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், இலங்கையர்களான குறைந்த வருமானம் பெறுகின்ற வகுப்பைச் சேர்ந்த மக்கள் மற்றும் உழவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கி, வதிவிடம் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதுடன் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூடிய வருமானம் பெறுபவர்கள், நகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் விவசாயம், வதிவிடம், கைத்தொழில், மற்றும் வணிக நோக்கங்களுக்காகக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 2015 ஆம் வருட வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளுக்கு ஏற்ப, 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை

விடுக்கப்பட்டதுடன், அதில் நகரப் பகுதிகளில் வதிவிடத் தேவைக்காகக் காணித்துண்டுகள் வழங்கும் போது, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அதுவரையிலுமான நிலுவையிலுள்ள குத்தகை வருமானத்தை வெட்டி அகற்றி விடவும், மிகவும் குறைவாக வருமானம் பெறுபவர்களிடமிருந்து பெயரளவிலான பெறுமதியைச் செலுத்தி குடியிருப்பு நோக்கத்திற்காகக் காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது.

### 2.2.1 காணி அபிவிருத்திக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல். (காணியற்ற நபர்களுக்கு காணி வழங்கும் வேலைத்தட்டம்)

இந்தத் தலைப்பின் கீழ், 2006 சனவரி மாதம் தொடக்கம் 2009 ஆம் வருடம் வரையிலும் ஓர் இலட்சம் அனுமதிப் பத்திரங்களும் அதிலிருந்து 2015 ஆம் வருடம் இறுதி வரையிலும் மேலும் 172,110 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**காணி அற்றவர்களுக்கு காணி வழங்குதல் - 2013 - 2015**




2015 ஆம் வருடத்தினுள் காணியற்ற நபர்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் விடயத்தின் கீழ் , 25,000 அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு இலக்கு வைத்திருந்த போதிலும் 42,341 அனுமதிப் பத்திரகளை வழங்குவதற்கு முடியுமாக இருந்தது. இந்த நிலைப்பாடு, கடந்த வருடத்துடன் சார்பியலாக 1.1% குறைவைக்காட்டிய போதிலும் இலக்கைத் தாண்டிய மிக அதிக வளர்ச்சியாகும். அனுமதிப் பத்திரங்கள் பெறுபவர்களைத் தெரிவு செய்கின்ற செயற்பாடுகள் தொடர்பாகக் காணிக் கச்சேரிகளை ஏற்பாடு செய்து

நடத்துவதற்குச் சில மாகாண சபைகள் மற்றும் பிரதேசச் செயலகங்கள் வழங்கிய ஒத்துழைப்பு குறைந்தமை மற்றும் போதியளவு பணியணியினர் இல்லாமை, தேர்தல் காலப் பகுதியினுள் காணிக்கச்சேரிகள் நடத்துதல் இடைநிறுத்தியமையினால், கடமைகளை ஏற்றவாறு நிறைவு செய்வதற்கு முடியாது இருந்தமை, கடந்த வருடத்துடன் சார்புபடுத்தும் போது நடப்பு வருடத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்குக் காரணிகளாக இருந்தன.

### 2.2.2. அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலக் குத்தகை முறிகள் வழங்குதல்


அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கும், விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கும் விவசாயம், வதிவிடம்,கைதொழில் மற்றும் வர்த்தகத் தேவைகளுக்கு இந்தத் திணைக்களம் காணிகள் வழங்குகின்றது. 1995 அம் ஆண்டிலிருந்து இதிவரையிலும் 23,252 நீண்ட காலக் குத்தகை முறிகள் வழங்க முடிந்தது. அரச காணிகள் கட்ளைச் சட்டத்தின் கீழ் காணிகள் வழங்கி, நீண்ட காலக் குத்தகை முறிகள் அல்லது அளிப்புப் பத்திரங்கள் வழங்குவதற்கு 1995.06.15 ஆந் திகதிக்கு முன்னர், அரச காணிகளில் அத்துமீறல் செய்து குடியமர்ந்து இருந்தவர்களையும் தெரிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்து. 2008 ஆம் ஆண்டு இந்தச் செயற்பாடு இடை நிறுத்தம் செய்யப்பட்டுப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னர், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்பு அத்துமீறல் செய்திருந்தவர்களுக்குத் தொடர்ந்தும் காணிகள் வழங்கும் நடைமுறையை நிறுத்தி விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அத்துமீறல் செய்து ஆட்சி செய்யப்பட்டு வந்த காணிகளையும் காணிக்கச்சேரிகள் மூலமாகத் தெரிவுசெய்து வழங்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இந்தச் செயற்பாட்டில் இருந்த குறைபாடுகள் காரணமாக, குத்தகைக்கான அனுமதியைப் பெறுவதற்கு நீண்ட காலம் செலவிடப்பட்டமையினால் 2015 ஆம் வருடத்திலும் நீண்டகாலக் குத்தகைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதில் உள்ள இலக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலக் குத்தகை முறிகள் வழங்கும் செய்கை ஒழுங்குகள் மிக நீண்டவையாகும். ஏற்புடைத்தான அனைத்து ஆவணங்களும் பிரதேசச் செயலாளர்களினால் விதந்துரைக்கப்பட்டு, மாகாணக் காணி ஆணையாளர்கள் அல்லது மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் காணி ஆணையாளர்கள் ஊடாக

அனுப்பிவைக்கப்படுகின்றன அவை பரிசீலிக்கப்பட்டுக் காணி அமைச்சின் செயலாளர் ஊடாக மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஆட்சேபனைகளுக்காக உரிய தகவல்கள் அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விதித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குப் பின்பு, குத்தகைப் பணத்தை அறவிட்டுக் கொண்டு குத்தகை ஆட்சி கையளிக்கப்படுகின்றது. இதன் பின்பு, கோட்டு வரைபடம் பெற்றுக் கொண்டு குத்தகை முறியைத் தயாரித்துக் காணி அமைச்சின் ஊடாக, ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பிவைத்து குத்தகை முறியில் ஒப்பத்தைப் பெற்றுக் கொண்டு, பிரதேசச் செயலாளர் ஊடாகக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்துகொண்ட பின்னர் குத்தகை முறி வழங்கப்படுகின்றது.

**நீண்ட காலக் குத்தகை முறிகள் வழங்குதல்**

**2013 - 2015**




2015 ஆம் வருடத்தில் நீண்டகால அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் விடயத்தின் கீழ், அமைச்சுக்கு விதப்புரைகள் செய்து வழங்குவதற்கான இலக்கு 4000 ஆக இருந்ததுடன் 4125 அனுமதிப் பத்திரங்களுக்கான விதப்புரைகள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. காணிக்கான ஆட்சியை முறையாக வழங்குகின்ற விடயத்தின் கீழ் இலக்கு 2000 ஆக இருந்ததுடன் நீண்ட காலக் குத்தகையாக ஆட்சியை முறையாக வழங்கப்பட்ட அனுமதிப்


பத்திரங்களின் எண்ணிக்கை 2509 ஆகும். நீண்ட காலக் குத்தகை முறிகள் வழங்குகின்ற இலக்கு 500 ஆக இருந்ததுடன் 442 குத்தகை முறிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலைப்பாடு கடந்த வருடத்துடன் சார்புபடுத்தும் போது வளர்ச்சியாகும். இருப்பினும், நீண்ட காலக் குத்தகை வழங்குவதற்கான அங்கீக்காரத்திற்காக அமைச்சுக்கு விதந்துரைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் குறைந்த வேறுபாடு 2015 ஆம் வருடத்தில் காணக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக , ஆட்சியைக் கையளித்தலில் அதிகரிப்பு ஏற்பட்டு உள்ளது.

### 2.2.3. “பிம்சவிய’ வேலைத்திட்டத்தின் கீழ் காணிகள் பகிர்ந்தளித்தல்

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின், காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் மூலாதாரத்தைக் கொண்டு செயற்படுகின்ற காணிகள் தொடர்பான உரித்துக்களை வழங்கும் தேசிய வேலைத்திட்டமாக “பிம்சவிய” (காணி வலுவடையும்) வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்ய முடியும். இந்த வேலைத்திட்டம் 2008 ஆம் வருடம் தொடக்கம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற சில நிறுவனங்கள் மற்றும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் செயற்படுகின்றது. இது தொடர்பாக, காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் 2015 ஆம் வருடத்திலும் அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தியதுடன், இந்த வேலைத்திட்டங்கள். மாகாணக் காணி ஆணையாளர்கள், பிரதேசச் செயலாளர்கள் மற்றும் மாகாணங்களுக் கிடைப்பட்ட பிரதிக் காணி ஆணையாளர்கள் ஆகியோரின் உதவிகளைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் அடிப்படையில், அரச காணிகள் தொடர்பாக இந்த வேலைத்திட்டங்களின் கீழ் 2015 நிறைவு வரையிலும் 135,776 அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு முடியுமாக இருந்தது. இதற்கு மேலாக 23,790 நீண்ட காலக் குத்தகை அனுமதிப் பத்திரங்களும், 37,357 அளிப்புக்களும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டன.

**"பிம்சவிய" வேலைத்திட்டத்தின் கீழ் காணிகள் வழங்குதல்**

**2012 - 2015**




2015 ஆம் வருடத்தில் "பிம்சவிய" வேலைத்திட்டத்தின் கீழ், 36,000 அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு இலக்கு வைத்து, 28,929 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. 4,916 அளிப்புப் பத்திரங்களும் நீண்ட கால அனுமதிப் பத்திரங்கள் 4,240 உம் வழங்கப்பட்டுள்ளன. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்கள், அளிப்புப் பத்திரங்கள், நீண்ட கால குத்தகை முறிகளின் எண்ணிக்கை மட்டுமே இங்கே தரப்பட்டுள்ளன இதற்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள பூஜாபூமி அளிப்புக்கள், சுனாமி அளிப்புக்கள்,இலவச அளிப்புக்கள் உடைமையாக்கற் கட்டளைகள், ஆதனவளிப்புச் சாதனங்கள் ஆகியன ஒத்து மொத்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றின் எண்ணிக்கை சிறிதாகையால் முக்கிய வகைகள் மட்டும் மேலே எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிம்சவிய வேலைத்திட்டத்தின் கீழ், காணி பெறுநர்களின் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அளிப்புப்பத்திரங்கள் சம்பந்தப்பட்ட பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குத் திணைக்களத்தினால் முடியுமாக இருந்தது. இதன் பிரகாரம், 2015 ஆம் வருடத்தில் அனுமதிப் பத்திரம் சம்பந்தப்பட்ட 7824 பிணக்குகள் மற்றும் 3859 அளிப்புப் பத்திரங்கள் தொடர்பான பிணக்குகள் ஆக மொத்தம் 11,683 பிணக்குகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன.


## 2.3 அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்ததிற்கு ஏற்ப, அரச காணிகளின் முகாமைத்துவ நிருவாகம் சம்பந்தப்பட்ட சில அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அரச காணிகளின் உரிமையைக் கையுதிர்த்தல் செய்வதற்கான மேதகு ஜனாதிபதி அவர்களின் சட்டரீதியான தத்துவங்களைச் செயற்படுத்துவதற்கான விசேட செய்கை ஒழுங்குகள் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குத் கையளிக்கப்பட்டுள்ளன. அரச காணிகளின் உரிமையைக் கையுதிர்த்தல் செய்யும் போது, அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், ரண்பிம அளிப்புப் பத்திரங்கள், அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலவச அளிப்புப்பத்திரங்கள், விசேட அளிப்புப் பத்திரங்கள், பூஜாபூமி அளிப்புப் பத்திரங்கள், சுனாமி அளிப்புப் பத்திரங்கள், மற்றும் காணி அளிப்பு விசேட சட்டத்தின் கீழ் ஆதன அளிப்புச் சாதனப் பத்திரங்கள் ஆகிய பல பணிகள் தொடர்பான நடவடிக்கைகளை முக்கியமான பணிகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.3.1. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள காணிகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், நிரந்தர உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரண்பிம அளிப்புப் பத்திரங்கள் வழங்கும் பணிகள் இந்தத் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்டுவரும் முக்கிய பணியாகும். இந்தப் பணி சம்பந்தமாக குறித்த பிரிவின் 'ரண்பிம' அலகு செயற்படு பங்களிப்பை வழங்கி வருகின்றது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அரச காணிகள் தொடர்பாக அளிப்புப் பத்திரங்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று 1982 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2002 ஆம் வருடத்தின் ஆரம்பப்பகுதியில் 324,203 சுவர்ணபூமி அளிப்புக்கள், 672,955 ஜயபூமி அளிப்புக்களை ஆகியவற்றை உள்ளடக்கி, 997,158 அளிப்புக்கள் காணி பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த அளிப்புக்கள் நிபந்தனைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருந்தன. சுவர்ணபூமி அளிப்புக்களுக்கு மட்டும் கோட்டுப்படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுன். ஜய பூமி அளிப்புக்களில் பெருமளவு அளிப்புக்கள் நில அளவை வரைபடம் உள்ளடக்கப்படாமல் காணியின் நான்கு பக்க எல்லைகள் மட்டும் குறிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்தக் குறைபாடுகளைக் கவனத்தில் எடுத்துக்

கொண்டு, நிபந்தனைகள் இல்லாமல் கோட்டுப் படத்தையும் உள்ளடக்கி அளிப்புப் பத்திரங்கள் வழங்கும் நோக்குடன், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக, இந்தப் பணிகள் 2002 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2003 ஆம் வருடத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சட்டமூலம், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இந்தக் காரணத்தால், 2002 மற்றும் 2003 ஆம் வருடங்களில் அளிப்புப் பத்திரங்கள் வழங்கும் பணி தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டது. ஆனாலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த சட்டமூலம், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய, மேலும் திருத்தங்கள் செய்ய வேண்டி இருந்தமையால், மீள் பெறப்பட்டது. இதன் பின்னர், அளிப்புக்கள் வழங்குகின்ற பணிகள் வழமைபோன்று 2004 ஆம் வருடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம், 2004 ஆம் வருடம் தொடக்கம் 2015 ஆம் வருடம் நிறைவு பெறும் வரையிலும் 85,515 அளிப்புப் பத்திரங்கள் வழங்குவதற்கு முடியுமாக இருந்து.




2015 வருடத்தில் ரண்பிம அளிப்புப் பத்திரங்கள் 10,000 வழங்குவதற்குத் திட்டமிட்டு, வருட இறுதியில் 12,890 அளிப்புப் பத்திரங்கள் வழங்க முடிமாக இருந்தது. இது கடந்த வருடத்துடன் சார்பு படுத்தும் போது 29% வளர்ச்சியாகும்.


### 2.3.2. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிறைவு செய்யப்படவேண்டியவை, காணியற்ற உழவர் வகுப்பினருக்கு மட்டுமல்லாமல், ஓரளவு நிதிவளம் அல்லது மூலதன இயலுமை உள்ள பிரசைகளுக்கும் அரச காணித்துண்டுகளை வழங்கி, அக்காணித் துண்டுகள் அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் தேசிய உற்பத்தி வளர்ச்சிக்குச் செயற்படு பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதும் ஆகும். இதன் பிரகாரம், மத்திய வகுப்பினருக்கான அரச காணித்துண்டுகளை வழங்கும் போது, ஒருவருக்கு 10,25 அல்லது 50 ஏக்கர்கள் பரப்பளவுக் காணிகள் வழங்கப்படுகின்றன.

மத்திய வகுப்பினருக்கான திட்டத்தின் கீழ், அரச காணிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களில் மேற்கூறியவாறு காணிகள் முன்பு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றிற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பின்பு அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் சில காணிகளுக்கு இதுவரையிலும் அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. தற்போதுள்ள காணிகள் போதாமை காரணமாக, கொள்கை மட்டத்தில் மத்திய வகுப்பினருக்கான திட்டத்தின் கீழ், இவ்வாறு பெரும் பரப்பளவில் உள்ள காணிகள் வழங்கப்படுவதில்லை இருப்பினும், அனுமதிப் பத்திரங்களுடன் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்குத் தொடர்ந்தும் அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரங்கள் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நியதிகளுக்கும் முரண்படும் வண்ணம் கையுதிர்த்தல் செய்யப்பட்டிருந்தால், குறித்த அளிப்புப் பத்திரங்கள் காணிப் பதிவுத் திணைக்களத்தின் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த ஆவணங்களின் உண்மைத் தன்மைபற்றி திருப்திகொள்ளாத போது குறித்த ஆவணங்களை வெற்றும் வறிதுமானதாகச் செய்வதற்கு காணி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரங்கள் உண்டு.

**மத்திய வகுப்பினருக்கு அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்**
**2013 - 2015**





2015 ஆம் ஆண்டில் மத்திய வகுப்பினருக்கான அளிப்புப் பத்திரங்கள் 50 வழங்க இலக்கு வைத்திருந்த போலும் 18 அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய வகுப்பினரின் அனுமதிப் பத்திரக் காணிகள் தொடர்பாக அளிப்புப் பத்திரங்கள் பெறும்போது, காணியின் மொத்த பெறுமதியையும் செலுத்துதல் வேண்டும். இருந்தாலும் அனுமதிப் பத்திரக் காணிகளை உபயோகிப்பதில் தடைகள் இல்லை ஆனால் காணியைக் கைமாற்றம் செய்யும் போது அளிப்புப் பத்திரம் இருத்தல் வேண்டும். இதன் காரணமாக அனுமதிப் பத்திரக் காணிகளுக்கு அளிப்புக்கள் வேண்டப்படும் விண்ணப்பங்கள் அதிகரித்துள்ளன.

### 2.3.3 இலவச அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல் (அரச காணி கட்டளைச் சட்டத்தின்கீழ்)

நீண்ட காலக் குத்தகை முறி அல்லது ஆரம்பக் குத்தகைமுறியுடன் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கு நிரந்தர உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் இலவச அளிப்பாக பொது மக்களுக்கு இந்த அளிப்பு வழங்கப்படுகின்றது. ஆனால் வணிகத் தேவைகளுக்கு அதி முக்கிய காரணிகள் தவிர்ந்த இவ்வாறு அளிப்புக்கள் வழங்கப்படமாட்டாது.





2015 ஆம் வருடத்தினுள் 250 இலவச அளிப்புக்கள் வழங்கத் திட்டமிட்டிருந்ததுடன் 113 இலவச அளிப்புக்கள் வழங்க முடியுமாக இருந்தது.

### 2.3.4 பூஜாபூமி அளிப்புக்கள் வழங்குதல்

பௌத்த மத வணக்கஸ்தலங்களை நிர்மாணித்துப் பேணிநடத்தும் நோக்கத்திற்காக அளிப்புப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் ஒன்றாகும், நடப்பு வருடத்தில் இவ்வாறான அளிப்புக்கள் வழங்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்படுகின்றன. இதுவரையிலும் பூஜாபூமி அளிப்புக்கள் 1,700 வழங்கப்பட்டுள்ளன.

**பூஜாபூமி அளிப்புக்கள் வழங்குதல் 2012 - 2015**




2015 ஆம் வருடத்தில் 40 பூஜாபூமி அளிப்புக்கள் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், 82 பூஜாபூமி அளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் அனைத்து பௌத்த வணக்கஸ்த்தலங்களுக்கும் பூஜா பூமி அளிப்புக்கள் வழங்குதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தமையினால் இந்த வளர்ச்சி பெறப்பட்டது

### 2.3.5 சுனாமி அளிப்புக்கள் வழங்கல்.

சுனாமி பேரழிவு காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு மாற்றுக்காணிகளுக்கு இலவச அளிப்புக்கள் வழங்கும் வேலைத்திட்டம் 2007 ஆம் வருடம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இதுவரையிலும் 6,127 சுனாமி இலவச அளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**சுனாமி அளிப்புக்கள் வழங்குதல் 2013 - 2015**

| விபரங்கள் | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள அளிப்புக்களின் எண்ணிக்கை | 1004 | 689 | 1067 |


2015 ஆம் வருடத்தில் 1000 சுனாமி அளிப்புக்கள் வழங்கத் திட்டமிட்டிருந்த போதிலும், 1,067 அளிப்புக்கள் வழங்குவதற்கு முடியுமாக இருந்தது. இது கடந்த வருடத்துடன் சார்பு படுத்தும்போது 38% வளர்ச்சியாகும்.

### 2.3.6. காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணிகள் வழங்குதல் (ஆதனவளிப்புச் சாதனப்பத்திரம் வழங்குதல்)

1979 ஆம் வருடத்திலிருந்து இந்தச் சட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இந்தச் சட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்ற காணிகள், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உடைமையாக்கப்பட்ட காணிகளிலிருந்து, காணியற்ற மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக அரசுக்கு விடுவிக்கப்பட்ட காணிகளாகும். எந்த ஒரு காணித்துண்டும் உரிமை இல்லாத வறுமையான மக்களுக்கு இவ்வாறு காணி பகிர்ந்தளிக்கப்படுகின்றது. 1979 ஆம் வருடத்திலிருந்து இதுவரையிலும் இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை 77,903 ஆகும். காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள கொள்கை அளவிலான தீர்மானத்துக்கு அமைய சமீப காலத்திலிருந்து, இந்தச்சட்டத்தின் கீழ் காணி விடுவிக்கப்படுவதில்லை. காணியற்ற குடுபங்களுக்கு காணிகள் வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான உற்பத்தித்திறன் அற்ற காணிகளை அடையாளப் படுத்தும் போது, காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்கி, கிராம விரிவாக்கல் நோக்கத்திற்காக மட்டுமே எடுக்கப்படவேண்டும் என்பதாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் புதிய காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை என்பதுடன் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்த காணிகள் தொடர்பாக மட்டுமே தொடர் நடவடிக்கைகள் முடிவு பெறும்வரை எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஆதனவளிப்புச் சாதனப் பத்திரங்கள் வழங்குதல்**


**2013 - 2015**



2015 ஆம் வருடத்தில் காணி அளிப்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தன் கீழ், 250 ஆதனவளிப்புச் சாதனங்கள் பத்திரங்கள் வழங்கத் திட்டமிட்டிருந்தும் 127 பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.3.7 பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளைக் கைமாற்றம் செய்தல், ஈடுவைத்தல் மற்றும் கீழ்க் குத்தகைக்கு விடுதல்.

காணிகளைக் கைமாற்றம் செய்தல், ஈடுவைத்தல் மற்றும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் ஆகியவை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தும்போது காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறுதல் வேண்டும். 2015 ஆம் வருடத்தில் காணிகளைக் கைமாற்றம் செய்தல், ஈடுவைத்தல் மற்றும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்ட முறை கீழே தரப்படுகின்றது.




2015 ஆம் வருடத்தினுள் காணிகளைக் கைமாற்றம் செய்தல், ஈடுவைத்தல் மற்றும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் தொடர்பான 82 நிகழ்வுகள் இடம் பெற்றன.

### 2.3.8 திணைக்களங்களுக்குக் காணிகளை விடுவித்தல்.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால், பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களின் தேவைகளுக்காகக் காணிகளை விடுவித்தல் வருடந்தோறும் இடம் பெறுகின்ற நிகழ்வாகும். கடந்த சில வருட காலப் பகுதியில் இந்நிகழ்வு நிறைவு செய்யப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**திணைக்களங்களுக்குக் காணிகள் விடுவிக்கப்பட்டமை 2013 - 2015**

| விபரங்கள் | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| இலக்கு | 75 | 25 | 100 |
| முன்னேற்றம் | 471 | 293 | 154 |

திணைக்களங்களுக்குக் காணிகளை விடுவித்தல் 2014 ஆம் வருடத்துடன் சார்புபடுத்தும் போது 2015 ஆம் வருடத்தில் எண்ணிக்கையில் குறைந்து இருந்த போதிலும் குறித்த வருடத்திற்கான இலக்கைத் தாண்டி வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள திணைக்களத்தினால் முடியுமாக இருந்தது.

### 2.4. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் யுத்தத்திற்குப் பின்னுள்ள காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் விசேட வேலைத்திட்டம் (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துகின்ற தேசிய செயல்திட்டத்தின் (எல்.எல்.ஆர்.சி அறிக்கை) விதப்புரைகளுக்கு அமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய முரண்பாடுகளை முடிவுக்குத் கொண்டுவந்த பின்பு, இந்த மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மிகவும் விரைவாக தீர்த்துவைக்கப்படவேண்டிய பிரச்சினைகளாக இந்த மாகாணங்களில் உள்ள காணிப்பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கு அமைவாக, இந்தப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கி, குறித்த பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்துவைப்பதற்குக் காணி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் விசேட வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி உள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு அமைய நீண்ட காலமாக உரிமையைப் பெற்றிருக்காத ஆட்சி செய்யப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமையை வழங்குதல், மீள் குடியேறிய காணிகளுக்கான உரிமையை வழங்குதல், யுத்தகாலத்தில் செயற்படுத்தப்பட்டதவறான நிர்வாக முறையினால் தோன்றி உள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், தவறவிட்ட அல்லது நாசமடைந்துள்ள காணி தொடர்புடைய ஆவணங்களை புனருத்தாபனம் செய்தல் ஆகிய கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.1. இந்த வேலைத்திட்டம் குறித்து மக்களுக்கு அறிவூட்டுதல்,

இந்த விடயங்கள் தொடர்பான LLRC விதப்புரைகள் கீழே உள்ளவாறு செயற்படுத்தப்பட்டுள்ளன.

**சுற்றறிக்கைகள் வெளியிடுதல்**

| வேலைத்திட்டத்திற்கான (LLRC விதப்புரை) | நடவடிக்கைகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 9.104 மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ள இடம் பெயர்ந்த நபர்களுக்குக் காணியின் சட்டபூர்வமான உரிமையை வழங்குதல் | உரிமையை வழங்குதல் வலுப்படுத்துகின்ற சுற்றறிக்கைகள் /வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் | 2013 /01 அம் இலக்கச் சுற்றறிக்கையை வெளியிடுதல் மற்றும் அதன் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் |

**பல்வேறு நடவடிக்கைகளை கடைப்பிடித்தல்**

| வேலைத்திட்டத்திற்கான விதப்புரை | நடவடிக் கைகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 9.106மக்களுக்குமீண்டும் குடியமர்வதற்கான இடங்கள் பற்றிய கொள்கை விளக்கம் மற்றும் உள்ள மாற்று வழிகள் தொடர்பாகத் தேவையானவர்களுக்கு விளக்கிக் கூறுதல் | அறிவூட்டு ம் நிகழ்ச்சிக ளை நடத்துதல் | ஊடகக் கலந்துரையாடல்கள், பத்திரிகை அறிவித்தல்கள், வலை அமைப்புக்களில் வெளியிடுதல், இலங்கை வெளிநாட்டுத் தூதரங்கள் மூலமாக பிரசாரம் மேற்கொள்ளுதல், துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுதல்,கிராமங்கள் மட்டத்தில் அறிவூட்டும் வேலைத்திட்டங்களை நடத்துதல் |

### 2.4.2. வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்

| வேலைத்திட்டத்திற்கான LLRC விதப்புரை | நடவடிக்கைகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 9.124 (3) அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்தல் | சட்டங்களின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்தல் | செயற்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவூட்டல், பயிற்சி நெறிகள் நடத்துதல் |

2015 ஆம் வருடத்தினுள் இந்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது ஒவ்வொரு பிரிவிலும் உச்ச முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.
அவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**பயிற்சி வேலைத்திட்டங்கள் நடத்துதல் - 2015**

| மாகாணம் | நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை | பயிற்சியை நிறைவுசெய்த அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **வ. மாகாணம்** | **20** | **1750** |
| **கி. மாகாணம்** | 18 | **1275** |
| **மொத்தம்** | 38 | **3025** |

**காணிக்கச்சேரிகள் நடத்துதல் - 2015**

| மாகாணம் | நடத்தப்பட்டகாணிகாணிக்கச்சேரிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வ. மாகாணம் | 1710 | 32,593 |
| கி. மாகாணம் | 02 | அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை |
| **மொத்தம்** | **1712** | **32,593** |

**நடமாடும் சேவை வேலைத்திட்டங்கள் மற்றும் பகுதிநாள் கூட்டம் நடத்துதல்.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இனங்கண்டு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முன்னுரிமையை வழங்கி, அவற்றிற்குத் தீர்வுகள் காணும் பொருட்டு பகுதிநாள் கூட்டங்களை நடத்தும் வேலைத்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகளை நடத்தும் வேலைத்திட்டங்கள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டன.

**நடமாடும் சேவைகள் மற்றும் பகுதிநாள் கூட்டங்கள் நடத்துதல் - 2015**

| மாகாணம் | நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட பகுதிநாள் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வடக்கு மாகாணம் | **06** | **-** |
| கிழக்கு மாகாணம் | **14** | **238** |
| மொத்தம் | **20** | **238** |

**காணிகள் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.**

**வடக்கு மாகாண முன்னேற்றம் 2015**

| பிரச்சினைகள் | 2015 ஆம் வருடத்தினுள் | | 2015 ஆம் வருடம் வரையிலும் | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை |
| காணி பெறுவதற்கான விண்ணப்பங்கள் | 2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில் லை | 67.078 | 122,113 | 117,027 |
| காணி தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தல் | | 6,877 | 20,455 | 19,239 |
| வேறு பிரச்சினை | | 9,338 | 25,210 | 24,557 |
| **மொத்தம்** | | 83,293 | 167,778 | 160,823 |

( 2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 2014 ஆம் வருடத்தினுள் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.)

**காணிகள் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.**

**கிழக்கு மாகாண முன்னேற்றம் 2015**

| பிரச்சினைகள் | 2015 ஆம் வருடத்தினுள் | | 2015 ஆம் வருடம் வரையிலும் | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை |
| காணி பெறுவதற்கான விண்ணப்பங்கள் | 2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில் லை | 3,088 | 5,035 | 4,114 |
| காணி தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தல் | | 1,823 | 8,293 | 3,719 |
| வேறு பிரச்சினை | | 512 | 4,568 | 1,761 |
| **மொத்தம்** | | 5,423 | 17,896 | 9,594 |

(2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 2014 ஆம் வருடத்தினுள் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.)

**காணிகள் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குமான மொத்த முன்னேற்றம் 2015**

| பிரச்சினைகள் | 2015 ஆம் வருடத்தினுள் | | 2015 ஆம் வருடம் வரையிலும் | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை | தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை |
| காணி பெறுவதற்கான விண்ணப்பங்கள் | 2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில்லை | 70,166 | 127,148 | 121,141 |
| காணி தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தல் | | 8,700 | 28,748 | 22,958 |
| வேறு பிரச்சினை | | 9,850 | 29,778 | 26,318 |
| **கூட்டு மொத்தம்** | | 88,716 | 185,674 | 170,417 |

(2015 ஆம் வருடத்தில் பிரச்சினைகள் புதிதாக பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 2014 ஆம் வருடத்தினுள் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.)

2015 ஆம் வருடத்தில் இந்த வேலைத்திட்டத்தின் மூலமாகக் காணிகள் தொடர்புடைய 50,000 பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்குவதற்கு இலக்கு வைத்த போதிலும் 88,716 பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்க முடியுமாக இருந்தது. இந்த நிலை கடந்த வருடத்துடன் சார்பு படுத்தும் போது உயர்ந்த வளர்ச்சியாகும். 2015 ஆம் வருடத்தின் பின்பு இந்த வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதால் இவ்வாறு துரிதமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்க வேண்டி ஏற்பட்டது. இந்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென, LLRC அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டவாறு போதியளவு பணிஅணியினர் மற்றும் பௌதீக வளங்கள், 2013 ஆம் வருட ஆரம்பத்திலிருந்தே எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிதி ஏற்பாடுகள் தவிர்நத ஏனைய வளங்கள் (மனிதவளம் மற்றும் வாகனங்கள்) கிடைப்பதில் நீண்ட தாமதங்கள் உண்டாகின. இது அமைச்சினாலோ அல்லது திணைக்களத்தினாலோ கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு காரியமாக இருந்தது. ஆகையினால், முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் குறித்த காலப் பகுதியினுள் தீர்த்துவைப்பதற்கு முடியாமல் இருந்தமையினால் , வழங்கப்பட்டிருந்த வளங்களுக்கு ஏற்றவாறு வருடாந்த இலக்கை நிறைவு செய்யப்பட்டது இந்த வருடாந்த இலக்கை 2013 ஆம் வருடத்திலிருந்து பூர்த்தி செய்வதற்கு முடிந்தது, இதன் பிரகாரம், முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுள் இன்னும் எஞ்சியுள்ள பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டவாறு 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களில் மட்டும் முடியாது ஆகையினால், 2015 ஆம் வருடத்திலும் இந்த வேலைத்திட்டத்தை

நீடித்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுசெய்யப்பட்டிருந்த பிரச்சினைகள் அனைத்தும் LLRC விதப்புரைகளுடன் நேரடி தொடர்புடைய காணிப் பிரச்சினைகள் அல்ல என வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தப்படும் போது விளங்கிக்கொள்ள முடிந்தது. இவ்வாறு நேரடித் தொடர்பில்லாத பிரச்சினைகளை வேறுபடுத்துமாறு பிரதேசச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், அது நடை முறைப்படுத்திக் கொள்வதற்குத் கடினமான விடயமாக இருந்ததினாலும், குறித்த பிரச்சினைகள் அனைத்தும் அந்தப் பிரதேச மக்களின் உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளாக இருந்தமையினாலும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணவேண்டிய நிலைமை உண்டாகியது. இந்த வேலைத்திட்டத்துடன் நேரடித் தொடர்புடைய பிரச்சினைகளாக முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் 60% பிரச்சினைகள் காணப்பட்டன.


## 2.5 காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்குதல்

காணிகளைப் பெற்றுள்ளவர்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கவும் பகுதி நாட்கள் பரிசோதனைகள் மற்றும் நடமாடும் சேவைகள் நடத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக மாகாண சபைகள் மற்றும் மாகாணங்களுக்கு இடைப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக சட்ட ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன.

### 2.5.1. பகுதி நாள் பரிசோதனைகள்

காணிகளைப் பெற்றுள்ளவர்களின் காணி உரித்து தொடர்புடைய பிரச்சினைகளை குறித்த இடத்திலேயே தீர்த்துவைப்பதற்காகப் பகுதி நாள் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. கடந்த மூன்று வருட காலப் பகுதியினுள் பகுதி நாள் பரிசோதனைகளை நடத்தி பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பகுதி நாள் பரிசோதனைகள் நடத்துதல்**
**2013 - 2015**





2015 ஆம் வருடத்தினுள் மாகாணங்களுக்கு இடைப்பட்ட மட்டத்தில் 695 பகுதி நாள் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இங்கே 8,929 பிரச்சினைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 6,494 பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக 2016 ஆம் வருடத்தினுள் தீர்வுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 2.5.2. நடமாடும் சேவைகளை நடத்துதல்.

காணிகள் பெற்றுள்ளவர்களின் காணி தொடர்புடைய பிரச்சினைகளை, அரச அலுவலர்களின் பங்கெடுப்புடன் பிரதேச மட்டத்தில் தீர்த்துவைக்கின்ற செயல்முறை நடமாடும் சேவையெனக் கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் கடந்த மூன்று வருட காலப் பகுதியினுள் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை, சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை, அவற்றிற்கு தீர்வுகள் வழங்கியமை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நடமாடும் சேவைகளை நடத்துதல் 2013 - 2015





\

2015 ஆம் வருடத்தினுள் மாகாணங்களுக்கிடைப்பட்ட மட்டத்தில் 20 நடமாடும் சேவைகளை நடத்தத் திட்ட மிடப்பட்டிருந்ததுடன் 15 நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன அப்போது 1,811 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டிருந்தன, அவற்றினுள் 1,012 பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகள் வழங்கப்பட்டன. 197 பிரச்சினைகள் வேறு பிரிவுகளுக்குச் சார்பு படுத்தப்பட்டன எஞ்சியுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்த பின்பு திர்வுகள் வழங்கப்படும். 2015 ஆம் வருடத்திற்கு முன்னர் ' தேசத்திற்கு மகுடம் ' அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அனேக விசேட நடமாடும் சேவைகள் நடத்தப்பட்ட காரணத்தால் 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களில் அதிகளவு முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. ஆனால் 2015 ஆம் வருடத்தில் சாதாரனமாக நடமாடும் சேவைகள் மட்டும் நடத்தப்பட்ட காரணத்தால் முன்னைய வருடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளை விடவும் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன் தீர்வுகள் வழங்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

### 2.5.3 மாகாணங்களுக்கு இடைப்பட்ட நீர்ப்பாசன காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மாகாண சபைகள் மட்டத்தில் அரச காணிகள் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் வேலைத்திட்டம்.

மாகாணங்களுக்கிடைப்பட்ட மற்றும் மாகாண சபைகள் மற்றும் பிரதேசச் செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் காணிகள் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது, பொது மக்களிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகச் சட்டரீதியான ஆலோசனைகள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் வழங்கி அந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பணிகள் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன 2015 ஆம் வருடத்தினுள் குறித்த பிரச்சினைகள் தொடர்பாகச் செயற்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது




2015 ஆம் வருடத்தில் 4924 காணி தொடர்பான பிணக்குகள் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றில் 3408 பிணக்குகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன. மேலும் 1516 பிணக்குகள் எதிர்வரும் காலத்தில் தீர்வுகள் வழங்க இருக்கின்றன என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தீர்வுகள் காண வேண்டியவை தொடர்பாக அறிக்கைகள் கோரப்படுதல், விடயக் கோப்புக்கள் பரிமாற்றம் செய்தல், விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் ஆகிய பல

விடயங்கள் கையாளப்பட வேண்டி உள்ளமையால், அதிக கால நேரம் செலவிடப்பட வேண்டி இருப்பதினால் எதிர்வரும் காலத்தில் அவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படும்.

## 2.6. அரச காணிகள் தொடர்புடைய தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை

### 2.6.1 அறிமுகம்

அரச காணிகளின் முகாமைத்துவப் பணிகளை இலகுவாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அரச காணிகள் தொடர்புடைய தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை ( State Land Informatim Management System) ஒன்றைத் தோற்றுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, அரச காணிகள் தொடர்புடைய தகவல்களைப் பிரதேசச் செயலாளர்கள் பிரிவுகள் மட்டத்தில் இந்த முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆவணங்கள் வழங்குதல் மற்றும் வருமானத்தைச் சேகரிக்கின்ற நடைமுறைகள், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை செய்கின்ற பணிகள் ஆகியவற்றை இந்த முறைமை ஊடாக மேற்கொள்வதற்கு முடியுமாக உள்ளது 2013 ஆம் வருடத்தில் மேற்கு மாகாணத்திலுள்ள 40 பிரதேசச் செயலாளர் பிரிவுகள் மற்றும் 2014 ஆம் வருடத்தில் தீவு முழுதிலும் 61 பிரதேசச் செயலாளர் பிரிவுகள் ஆகியவற்றுடன் இந்த முறைமையைச் செயற்படுத்த முடிந்தது. 2015 ஆம் வருடத்தில் மேலும் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் இந்த முறைமை செயற்படுவதுடன் இதன் பிரகாரம் நாடு முழுவதிலும் 116 பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் இந்த முறைமை செயற்பட்டு வருகின்றது.

### 2.6.2. அரச காணிகள் முகாமைத்துவ செயற்படுத்தல் முறையை மீள்பொறியியல் ஆக்கல்.

இந்த முறைமையைத் தோற்றுவிப்பதற்குக் காணி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், மேற்கு மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம், மற்றும் நீர்கொழும்பு, கடுவெல,வலல்லாவிட்ட ஆகிய பிரதேசச் செயலகங்கள் பங்களிப்பு வழங்கின. இந்த முறைமையைத் தோற்றுவிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் 2008 ஆம் வருடத்தில் எடுக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட பல வேலைமுகாம்களின் பின்பு இந்தத் தகவல் முறைமையைத் தோற்றுவிக்க முடிந்தது. இதற்கான நிதி மற்றும் தொழிநுட்ப

உதவி, இலங்கைத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப ஏஜன்சியினால் (ICTA) வழங்கப்பட்டது, அரச காணிகள் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுத்தாமல் நடைமுறையில் உள்ள செயல்படுத்தல் வழிமுறைகளில் மட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டன இது "அரச செயல்படுத்தல் முறையை மீள் பொறியியல்" (Government Process Re-Engineering) எனத் தோற்றுவிக்கப்பட்டது இந்த செயல்படுத்தல் முறையை மீள் பொறியியல் ஆக்கலின் கீழ் கீழே தரப்பட்டுள்ள முக்கிய செயல்படுத்தல் முறைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன;-

செயல்படுத்தும் முறை A = அரச காணிகளை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் கையுதிர்த்தல் செய்யும் செயல்படுத்தும் முறை

செயல்படுத்தும் முறை B = கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகளை மேற்பார்வை செய்கின்ற செயல்படுத்தும் முறை

செயல்படுத்தும் முறை C =கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகள் சம்பந்தப்பட்ட தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் செயல்படுத்தும் முறை

இந்த முக்கிய செயல்படுத்தும் முறை மூன்றுடன் பல உபசெயல்படுத்தும் முறைகள் தொற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டத்தின் கீழ், கீழே தரப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவுசெய்து கொள்வதன் ஊடாக, நடைமுறையில் உள்ள அரச காணிகளின் முகாமைத்துவ நடைமுறைகளில் காணக்கூடிய குறைபாடுகள் மற்றும் வினைத்திறன் இன்மை ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

i. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான தரவுகள் முறைமை ஒன்றைத் தோற்றுவித்தல்
ii. நடைமுறைகளைச் செயற்படுத்துகையில் செலவிடுகின்ற கால நேரத்தைக் குறைத்தல்
iii. கருமங்களின் துல்லியத்தன்மையை மேம்படுத்தல்
iv. செய்பணிகள் மற்றும் மதிப்பிடுதல் ஆகிய பணிகளை இலகுவாக்குதல்
v. ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கான இயல்புகளைக் குறைத்தல்

### 2.6.3 அரச காணிகள் தொடர்பான தகவல் முகாமைத்துவ முறைமையைச் செயற்படுத்துதல்

2015 ஆம் வருடத்தில் அரச காணிகள் தொடர்பான தகவல் முகாமைத்துவ முறைமையை 116 பிரதேசச் செயலகங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் இது சம்பந்தமாகச் செயற்பட்ட விதம் கீழே தரப்படுகின்றது.

**அரச காணித்துண்டுகளின் தகவல்கள் தரவுகளை முறைமையில் உள்ளடக்குதல்**

| விபரங்கள் | 2015 ஆம் வருடத்தினுள் நிறைவு செய்துள்ள முன்னேற்றம் | 2015 வரையிலும் முன்னேற்றம் |
|---|---|---|
| காணி ஆவணங்களிலுள்ள தகவல்கள் முறைமையில் உள்ளடக்குதல் (ஆவணங்களின் எண்ணிக்கை) | 116,909 | 152,743 |
| சுவடுவரைபடங்களுடன் காணிகளின் களத் தகவல்களை தரவுகளை முறைமையில் உள்ளடக்குதல் (காணித்துண்டுகளின் எண்ணிக்கை) | 25,015 | 37,755 |
| மொத்தம் | 141,924 | 190,498 |

2015 ஆம் வருடத்தினுள் அரச காணிகள் தொடர்பான தகவல் முகாமைத்துவ முறைமையில் 80,000 காணி ஆவணங்களை உள்ளடக்குவதற்கு இலக்கு வைத்து, 141,924 ஆவணங்களை உள்ளடக்குவதற்குத் திணைக்களத்தினால் முடியுமாக இருந்தது. அளிப்புப் பத்திரங்கள், வருடாந்த அனுமதிப் பத்திரங்கள், நீண்ட காலக் அனுமதிப் பத்திரங்கள் ஆகிய அனைத்து ஆவணங்களையும் இந்த முறைமையை உபயோகித்து அச்சிட்டுக் கொள்வதற்கும் இந்த வருடத்தில் ஆரம்பம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 450 அளிப்புப் பத்திரங்கள் இந்த முறைமையின் ஊடாக வழங்குவதற்கு முடியுமாக இருந்தது.

## 2.7 அரச காணிகளின் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் நடவடிக்கைகளை எடுத்தல்.

அரச காணிகளை முகாமைத்துவம் செய்கின்ற பணிகளில் முதன்மை இடத்தை வகிக்கின்ற இந்தத் திணைக்களம், அரச காணிகள் தொடர்பான முகாமைத்துவப் பணிகளை ஒழுங்கு படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கு இவ்விடயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்திப் பேணிக்கொள்ளும் பொருட்டுப் பல்வேறு

படிமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. இவற்றினுள் முக்கியமான சில கீழே தரப்படுகின்றன.

I. பிரதேசச் செயலாளர்களுக்குச் சுற்றறிக்கைகளை விடுத்தல்
II. மாகாணங்களுக்கிடைப்பட்ட அதிகாரப் பிரதேசங்களிலுள்ள காணிகளை முகாமைசெய்கின்ற அலுவலர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல்
III. பிரதேசச் செயலாளர்களுடன் பல்வேறு வேலைத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான கலந்தாலோசித்தல் ஆகியவற்றை நடத்துதல்.
IV. பிரதேசச் செயலகங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் காணி அணையாளர்கள் அலுவலகங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல்
V. மாகாணக் காணி ஆணையாளர்களுடன் இணைப்புக் கூட்டங்களை நடத்துதல்.

### 2.7.1. பிரதேசச் செயலாளர்களுக்குச் சுற்றறிக்கைகளை விடுதல்

2015 ஆம் வருடத்தில் கீழே உள்ளவாறு சுற்றறிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

I. **.சுற்றறிக்கை இல 2015//01 - நகரப் பகுதிகளில் வதிவிட நோக்கத்திற்காக அரச காணிளை வழங்கும் போது நிவாரணம் ஒழுங்கு செய்தல்.**

2015 ஆம் வருடத்தின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் இந்தச் சுற்றறிக்கையின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. நகரப் பகுதிகள் அல்லது அதிக முன்னேற்றம் அடைந்துள்ளவை எனக் கணிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிக்கின்ற நபர்களுக்கு, வதிவிட நோக்கத்திற்காக அரச காணிகளை வழங்கும் போது அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலக் குத்தகை முறி அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் அளிப்புப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறாகக் காணித் துண்டுகளை வழங்கும் போது, குறைந்த வருமானம் பெறுகின்ற நபர்களினால் அதிக அளவு குத்தகைப் பணம் செலுத்துவதற்கு முடியாது உள்ளதாகத் தொடர்ந்து காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றின் பிரதிபலிப்பாக அவ்வாறான நபர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் இந்தச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. 2015/01 (i) மற்றும் (ii) என்று அந்தச் சுற்றறிக்கைக்குத் திருத்தச் சுற்றறிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன. இச்சுற்றறிக்கைகள்

ஊடாக வருமான எல்லைகளுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்ற குத்தகை விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தை வெட்டி அகற்றி விடுதலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 01 முதல் 13 வரையிலும்)

**ii. சுற்றறிக்கை இல 2015/02 - உரித்துரிமையை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ், அரச காணிகளைப் பதிவு செய்தல் மற்றும் உரிமைச் சான்றிதழ் வழங்குதல்.**

அரச காணிகளின் உரித்தை நிர்ணயம் செய்கின்ற விடயத்திற்கு உதவுதல் இந்தச் சுற்றறிக்கையின் முக்கியமான நோக்கமாகும். இதில் துண்டு பிரிக்கும் வரைபடத்துடனான அளிப்புப் பத்திரங்கள் / அனுமதிப் பத்திரங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய முறைகள், துண்டு பிரிக்கும் வரைபடம் இல்லாமல் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரங்கள் / அனுமதிப் பத்திரங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய முறைகள் குறித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அரச காணிகள் வழங்கப்பட்டுள்ள முறைகளுக்கு ஏற்றவாறு உரித்தைப் பதிவு செய்து கொள்ளல் தொடர்பாகப் பின்பற்றப்பட வேண்டிய செயல் முறைகள் பற்றி பிரதேசச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதும் இந்தச் சுற்றறிக்கையின் இரண்டாவது நோக்கமாகும்.

**iii. சுற்றறிக்கை இல 2015/03 - அளிப்புப்பத்திரங்கள் தயாரிப்பதற்காக e-slims முறைமை மூலமாக விதப்புரைகள் சமர்ப்பித்தல்.**

அரச காணிகளின் முகாமையை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் நோக்கத்துடன் தகவல் தொழில்நுட்பத்தை உபயோகித்து அரச காணிகள் தொடர்பான தகவல் முகாமைத்துவ முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் வருடத்தில் காணித் துண்டுகள் தொடர்பான தகவல்களை முறைமைக்கு உட்செலுத்துவதற்கு மேலதிகமாக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், வழங்கப்படுகின்ற அளிப்புப் பத்திரங்களைத் தயாரிப்பதற்கான விதப்புரைகளை e-slims முறைமையின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இது தொடர்பாகச் செயற்பட வேண்டிய நடைமுறைகள் பற்றித் தேவையான அறிவுறுத்தல்கள் பிரதேசச் செயலாளர்களுக்கு வழங்குவதற்காக இந்தச் சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 05)

( 2015/04 சுற்றறிக்கை வரைதல் செய்யப்பட்ட போதிலும் அது வழங்கப்படவில்லை )

**iv. சுற்றறிக்கை இல 2015/05 - காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையை வழங்கும் வருமான எல்லையைத் திருத்தம் செய்தல்.**

காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையை வழங்கும் வருமான எல்லையை (குடும்பத்தின்) தற்போதைய காலகட்டத்திற்குப் பொருந்தும் வண்ணம் திருத்தம் செய்வதற்கென இந்தச் சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், இந்தச் சுற்றறிக்கையின் திகதியிலிருந்து வலுவுக்கு வரும் வண்ணம், இந்தச் சட்டத்தின்கீழ் அளிப்புப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்குக் காணியைப் பெறுபவரின் குடும்பத்தின் வருமான எல்லை மாதம் ஒன்றுக்கு ரூபா 12,000/- க்கு மேற்படல் ஆகாது. (பின்னிணைப்பு 06)

**v. சுற்றறிக்கை இல 2015/06 - காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ், கொள்விலையை அறவிட்டுக் கொண்டு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது, காணியைப் பெறுமதி மதிப்பீடு செய்தல்.**

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ், கொள்விலையை அறவிட்டுக் கொண்டு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது கொள்விலையைத் தீர்மானிப்பதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்து கொள்ளப்பட வேண்டும். ஆனாலும், குறித்த மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் எதிர்பார்த்திருக்கும் இலக்கை அடைந்து கொள்வதில் தடைகள் இருக்கும் ஆதலால் குறித்த மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் அண்ணளவான மதிப்பீட்டைச் செய்து அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காகப் பின்பற்ற வேண்டிய செயல்முறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் இந்தச் சுற்றறிக்கையின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு 07)

**vi.சுற்றறிக்கை இல 2015/07 - விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு அரச காணிகளை வழங்குதல்.**

அபூர்வமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடியான முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு அரச காணிகளை வினைத்திறனுடனும் விரைவாகவும் வழங்குதல் தொடர்பாக இந்தச் சுற்றறிக்கை விடுக்கப்படுகிறது. இதன் ஊடாகக் குறித்த செய்முறையுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய முறை மற்றும் ஒவ்வொரு நிறுவனத்துடனும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அதிக காலப் பகுதியை ஈடுபடுத்தும் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2012/06 ஆம் இலக்கச் சுற்றறிக்கை இதன் மூலம் முழுமையாகத் திருத்தப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 08)

**vii.சுற்றறிக்கை இல 2015/08 - காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரங்கள் தொடர்பான பின் நடவடிக்கைகள்.**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரங்கள் தொடர்பான பின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் 2007/3 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. அதில் அளிப்புப் பத்திரங்களின் மரபுரிமையாளர்களுக்கு உரிமையை பதிவு செய்யும் போது மற்றும் வாழ்க்கைத் துணைக்கு ஆயுள் நல உரித்தைப் பதிவு செய்யும் போது ஏற்படுகின்ற தவறுகளை திருத்துவதற்கான நடைமுறைகள் இதன் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு 09)

**viii.சுற்றறிக்கை இல 2015/09 - அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வதிவிட நோக்கத்திற்காகக் காணித்துண்டு வழங்கும் போது, அதே சமயத்தில் அளிப்புப் பத்திரத்தை வழங்குதல்.**

இதுவரையிலும் நடைமுறையில் இருந்து வருகின்ற செய்முறை, விண்ணப்பதாரருக்கு முதலில் நீண்ட காலக் குத்தகை முறியை வழங்கி சில காலத்திற்குப் பின்னர், அளிப்புப் பத்திரம் வழங்குதல் ஆகும். இருப்பினும், இந்த நடைமுறையைப் பின்பற்றிக் கொண்டு வதிவிட நோக்கத்திற்காகக் காணித்துண்டை வழங்கும் போது நீண்ட காலம் எடுக்கின்ற காரணத்தால் சேவை பெறுநர்கள் சிரமங்களுக்குள்ளாக்கப்படுவதுடன் ஒரே பணிக்காகச் சிக்கலான இரண்டு நடைமுறைகள் பின்பற்றப்படுதல், நிருவாக முறையிலும் இடையூறு உள்ளதாதலால் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக வதிவிட நோக்கத்திற்காக மட்டும் அதே சமயத்தில் அளிப்புப் பத்திரம் வழங்குவதற்காகப் பொருத்தமான மூலப்பிரமாணங்களைத் தளர்த்துவதற்கான அறிவுறுத்தல்கள் இதன் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு 10)

## 03 அத்தியாயம் - முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்காக அரச காணிகளை உயோகித்தல்.

### 3.1 அறிமுகம்


காணிகள் தொடர்பான முகாமைத்துவத்தில் அதிமுக்கியமான அம்சம், அரச காணிகளை மிகவும் சிறந்த முறையில் உபயோகித்தல் ஆகும். பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான முதலீட்டு நடவடிக்கைகளுக்கு முக்கியமாக காணிகள் உபயோகிக்க வேண்டியது அவசியமாகும். பல்வேறு அபிவிருத்தி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்குக்கென காணிகளை வழங்கும்போது, அனுசரிக்க வேண்டிய நடவடிக்கைகள் முறைசார்ந்தவையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளும் போது இந்தப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

### 3.2 முதலீட்டு நடவடிக்கைகளுக்காகக் காணிகளை வழங்குதல்

மட்டுப்படுத்தப்பட்ட காணி வளத்தைக் கொண்டுள்ள தேசமான இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காகக் காணிகளை வழங்குதல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாகப் பங்குகொள்ளும் ஒரு நடவடிக்கை ஆகும். இந்த அடிப்படையில், இந்தத் திணைக்களம் தோற்றுவிக்கப்பட்ட காலம் தொடக்கம் நீண்ட காலம் வரையிலுமாக, விவசாய நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வண்ணம் தேவையான காணிகளை வழங்குவதில் முன்னுரிமையுடன் செயற்பட்டு வந்துள்ளது. தற்போது நம்முடைய நாடு, நெல் உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றுள்ளது. தற்போதைய பொருளாதாரக் கட்டமைப்பு, கைத்தொழில் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குதல் ஆகிய துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இதன் பிரகாரம் இவ்வாறான துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகக் காணிகளுக்காக தேவை அதிகரித்துள்ளது. ஆகையினால், நீண்டகாலக் குத்தகை திட்டத்தின் கீழ் குறித்த துறைகளுக்குக் காணிகளை வழங்க வேண்டிய தேவையின் முக்கியத்துவம் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. மத்திய கால மற்றும் நீண்ட கால முதலீட்டு முயற்சிகளுக்காக அரசுக்குச் சொந்தமான காணிகள் வழங்கப்படுகின்றன. இதன் ஊடாக பொருளாதார, சமூக, உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் ஒத்துமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு இவை உதவுகின்றன. 2015 ஆம் ஆண்டினுள் முதலீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காகக் காணிகளை வழங்கும் திட்டத்தின் கீழ், காணிகளை வழங்குதல் தொடர்பாகக் காணி அமைச்சுக்கு விதப்புரைகளை வழங்கும்

பணிகளில் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் அதி சிறந்த முறையில் செயற்பட்டுள்ளது.

**முதலீட்டு முயற்சிகளுக்குக் காணிகளை வழங்குதல் - 2014 - 2015**




2015 ஆம் ஆண்டினுள், முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தும் நோக்குடன் விசேட அபிவிருத்தி முதலீட்டு கருத்திட்டங்களுக்கென நீண்ட காலக்குத்தகையில் காணிகள் வழங்குதல் தொடர்பாகக் காணி அமைச்சுக்கு 50 விதப்புரைகள் வழங்கத் திட்டமிட்டிருந்தபோதிலும், விண்ணப்பங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்ததினால் 11 விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## 3.3 வெளிநாட்டவர்களுக்கு அரச காணிகள் சாட்டுதல் செய்வதை மட்டுப்படுத்துகின்ற சட்டத்தை செயற்படுத்துதல்.

### 3.3.1 அறிமுகம்

உள்நாட்டில உள்ள தனியார் மற்றும் அரச காணிகளின் முற்றுரிமை சொந்தத்தை வெளிநாட்டவர்களுக்கு மற்றும் கம்பனிகளுக்கு சாட்டுதல் செய்வதை மட்டுப்படுத்தும் கொள்கையை செயற்படுத்துவதற்க்கு அரசினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப 2013.01.01 ஆந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வண்ணம், காணிகள் கையளித்தல் மட்டுப்படுத்தும் சட்டம் சட்டமாக்குதல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை செயற்படுத்தும்போது நிதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு சில அதிகாரங்கள்

உரித்தாகுவதுடன், அரச காணிகள் தொடர்பாக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தும்போது காணி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கும், அரச காணிகளை நிர்வாகம் செய்கின்ற குறித்த அலுவலர்களுக்கும் திடமான பணிகள் சாட்டப்பட்டுள்ளன.

### 3.3.2 வெளிநாட்டவர்களுக்கு அரச காணிகளை சாட்டுதல் செய்வதை மட்டுப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்த அடிப்படை கோட்பாடுகள்.

I. சட்டத்தின் பொருள் கோடலுக்கு அமைந்தவாறு வெளிநாட்டவர்களுக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகள் அல்லது நிறுவனங்களுக்கு உள்நாட்டில் உள்ள காணிகளின் முற்றுரிமைச் சொந்தத்தை சாட்டுதல்செய்ய முடியாது.

II. அவ்வாறான தனி நபர்கள் அல்லது நிறுவனங்களில் கீழே தரப்பட்டுள்ள சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சில நிறுவனங்களுக்கு இந்தத்தடை நீக்கப்பட்டுள்ளது. (உதாரணம் வெளிநாட்டுச் தூதரகச் சலுகைகள் கொண்ட நிறுவனங்கள்)

III. முற்றுரிமைச் சொந்தத்தை சாட்டுதல் செய்வதற்க்கு உரிமை இல்லாத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஆகக்கூடிய 99 வருட வரையறுத்தலுக்கு உட்பட்டு நீண்ட கால குத்தகை முறையின் கீழ் காணிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

IV. நீண்ட கால குத்தகையில் காணி பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைய நபர்கள் அல்லது நிறுவனங்கள், முதலில் உரிமையாக்கிக்கொள்கின்ற விசேட குத்தகை முறிக்கான வரிக்கு உட்படுதல் வேண்டும். இந்த வரி சில நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு மொத்தக் குத்தகைப் பெறுமதியின் 15% ஆகும். சில நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு இந்த வரி 7 1/2% சலுகை வரியாக இருக்கும். சில நபர்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த வரியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

V. சில உள்நாட்டு முதலீடுகளுக்கு காணி வரி தொடர்பாக 25% தள்ளுபடி உரிமையாகும்.

VI. குத்தகை வரி, காணிக்குரிய வரிக்கு மேலதிகமாக அறவிடப்படுவதுடன், இந்த வரி காணியின் உரிமையை பதிவுசெய்யும்போது அறவிடப்படும். குத்தகை வரி உள்நாட்டுத் இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அறவிடப்படும்.

### 3.3.3 காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் பணிகளை நிறைவு செய்தல்.

இந்த புதிய சட்டரீதியான ஏற்பாடுகளைச் செயற்படுத்தும்போது, அரச காணிகள் தொடர்பான பொறுப்பு கூறும் பணி இந்த திணைக்களத்திற்கு இருக்கும். இதன் அடிப்படையில் குறித்த வகைப்படுத்தலின் கீழ் செய்யப்படுகின்ற விண்ணப்பங்களை இனங்காணுவதற்கும், அவற்றிற்கேற்ப பிரதேசச் செயலார்களிடமிருந்து விதப்புரை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்க்கும் அவற்றினுள் முற்றுரிமை சொந்தம் சாட்டுதல் தொடர்பாக தடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படுவதைத் தவிர்ப்பதற்க்கும் விசேட படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் குத்ததகை வரி அறவிடப்படவேண்டிய குத்தகை வழங்கல்களை இணங்கண்டு, காணிப் பதிவாளர் அலுவலகத்திற்க்கு தெரியப்படுத்துவதும் இங்கே முக்கியத்துவம் பெறுகின்றது.

## 04 அத்தியாயம் - அரச காணிகளை மிகச் சிறந்த முறையில் உபயோகித்தல்

### 4.1 அறிமுகம்


அரச காணிகளை சிறந்த முறையில் உபயோகித்து முழுமையான பயன்பாட்டைப் பெறுவதை உறுதி செய்யும் நோக்குடன், பல்வேறு கொள்கையளவிலான உபாய முறைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. அரச காணிகளை அத்துமீறல் செய்து பிடித்துக் கொள்ளும் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துதல், சுற்றுச் சூழலையும் சூழல் ஜீவிகளையும் பற்றிய கொள்கைகள் மற்றும் நீதி ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்துதல், காணி தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான சட்ட ஆலோசனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாகத் திணைக்களம் பாரிய பங்களிப்பை வழங்குவதன் மூலமாக, அரச காணிகள் சிறந்த முறையில் உபயோகப்படுத்தப்படுவதை உற்சாகப்படுத்துவதற்குத் திணைக்களம் பிரயத்தனம் எடுக்கின்றது.

### 4.2 அரச காணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்

அரச காணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, அரச காணிகள் அத்துமீறல் செய்து பிடிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில், பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் ஒன்றிணைந்து, நாட்டிலுள்ள அனைத்து மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேசச் செயலகங்களுடன் கூட்டாக ஒரு தேசிய வேலைத்திட்டம் 2013 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் HAF/03/ADMIN/002 ஆம் இலக்க 2013.07.05 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும், ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவிலும் அத்துமீறல்கள் செய்து பிடித்துக்கொண்டுள்ள அரச காணிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்குடன், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் தலைமையில், பாரிய அளவிலான புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் ஊடாக அத்துமீறல் செய்து கொண்டுள்ள நபர்களை இனங்கண்டு குறித்த அரச காணிகளிலிருந்து வெளியேற்றுதல் மற்றும் அவ்வாறு வெளியேறாதவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடர்தல் ஆகிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2014 மற்றும்

2015 ஆம் வருடங்களில் மேற்கோள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரச காணிகள் அத்துமீறல்கள் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தல் - 2014 -2015**




2014ஆம் ஆண்டினுள் 2226 அத்துமீறல்கள் செய்யப்பட்ட நிகழ்வுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அவற்றினுள் 479 பேர்கள் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் 98 நபர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. 1630 அத்துமீறல்கள் செய்தவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து செயற்ப்படுத்தப்பட்டு வருகின்றது. 2015 ஆம் வருடத்தில் 3126 அத்துமீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுள் 746 நபர்களைக் காணிகளிலிருந்து வெளியேற்றவும், 163 நபர்களுக்கெதிராக வழக்குகள் தொடரவும் முடிந்தது. அத்துமீறல்கள் செய்துள்ள 2217 நபர்கள் தொடர்பாகத் தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 4.3 சுற்றுச் சூழல் கொள்கைகள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தும் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டகள் சம்பந்தமாக பங்களிப்பு வழங்குதல்.

### 4.3.1 அறிமுகம்

சுற்றுச் சூழலுக்கு பொறுப்பான அமைச்சு, வனங்கள் பாதுகாப்புத் திணைக்களம், வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, காணி பயன்பாட்டுக் கொள்கைகள் திட்டமிடல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால்

நேரடியாகவும் மற்றும் குறித்த நிறுவனங்களுடன் தொடர்புடைய பல்வேறு தேசிய மட்டத்தினாலான கருத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அரச காணிகள் சம்பந்தப்பட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்களை திட்டமிடும்போதும் அவற்றைச் செயற்படுத்தும் போதும் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ள நிறுவனம் என்ற வகையில், இந்த திணைக்களம் செயற்படு பங்களிப்பை வழங்கியுள்ளது.

### 4.3.2 சுற்றுச்சூழல் கொள்கைகள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்துதல் சம்பந்தமாக பங்களிப்புச் செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்

இதன் கீழ், 2015 ஆம் வருடத்தினுள் கீழே தரப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக இந்தத் திணைக்களம் செயற்படு பங்களிப்பை வழங்கி உள்ளது.

I. காணி பயன்பாட்டுக் கொள்ளைகள் திட்டமிடுதல் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், காணி அமைச்சுக்கான பாராளுமன்ற ஆலோசனைச் செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாகச் செயற்படுத்தப்படுகின்ற நீரேந்தும் பகுதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக தேசியக் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் ஆகிவற்றைத் தயாரிக்கும் வேலைத்திட்டம்.

II. சுற்றாடல் அமைச்சின் தலைமையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள சுற்றாடலுக்குச் சேதம் விளைவித்தலைக் குறைத்தல் சம்பந்தமான பயனுறிதியான நடைமுறைகளை செயற்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம்.

# 05 அத்தியாயம் - வருமானம் முகாமைத்துவம் செய்தல்

## 5.1 அறிமுகம்

அரச காணி வளங்களைச் சிறந்த முறையில் முகாமைத்துவம்செய்வதன் ஊடாக, அரசின் குத்தகை வருமானத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துகின்ற பாரிய பணி, காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கே வதிவிடம் மற்றும் வணிக நோக்கங்களுக்காக அரச மற்றும் தனியார் துறையினருக்கும் தனி நபர்களுக்கும் அரச காணிகள் குத்தகையில் வழங்கப்பட்டு வருமானம் சேகரிக்கப்படுகின்றது.

மாகாணங்களுக்கிடைப்பட்ட விவசாய குடியேற்ற பகுதிகளில், காணிகளின் குத்தகை வருமானம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினாலும் ஏனைய பிரதேசங்களுக்கான குத்தகை வருமானம், மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களத்தினாலும் வெவ்வேறாக சேகரிக்கப்படுகின்றன. அடிப்படையாக, நீண்டகால குத்தகை, வருடாந்த அனுமதிப் பத்திரக் குத்தகை மற்றும் விளைச்சல் குத்தகை என்றவாறு இந்த குத்தகை வருமானம் கணக்கிடப்படுகின்றது. மாகாணசபை அதிகாரப் பிரதேசங்களிலுள்ள குத்தகை வருமானம் மாகாணசபைகளுக்காக என இருந்தபோதிலும், குறித்த காணி சம்பந்தமான குத்தகைக்கு வழங்கும் மற்றும் அதற்கான அனுமதி யாவும் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

## 5.2. காணி குத்தகை வருமானத்தை மதிப்பிடுதல் மற்றும் சேகரித்தல்


காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் வருடாவருடம் சேகரிக்கப்படுகின்ற குத்தகை வருமானம் தொடர்பான எதிர்வு கூறல் வருட ஆரம்பத்திலும் வருட மத்தியிலும் இடம்பெறுகின்றது. இந்த எதிர்வு கூறல் தொடர்பாக நோக்கும் போது வருடாந்தம் சேகரிக்க வேண்டிய காணி குத்தகை வருமானத்தின் அளவு அதிகரித்துள்ளது. இந்த நிலைமை அரச வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் சுபாவத்தைக் கொண்டுள்ளதாகவும் இருக்கிறது. காணி ஆணையாளர் நாயகத்தின் வருடந்தோறும் சேகரிக்கவேண்டிய காணிக் குத்தகை வருமானத்தை எதிர்வுகூறல் மேற்கொள்ளும் போது, புதிய குத்தகை வருமானம் சேகரித்தல் மற்றும் நிலுவையில் உள்ள குத்தகை வருமானம் சேகரித்தல் என்றவாறு வெவ்வேறாக கணக்கிடப்படுகின்றது.

ஒத்துமொத்தமாக இந்த இரண்டு குத்தகை வருமானங்களையும் ஒன்றாக கருதும் போது, சேகரிக்கவேண்டிய குத்தகை வருமானத்தின் அளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தச் சுபாவம் கடந்த சில வருடங்களில் குத்தகை வருமானம் சேகரித்தலை நோக்கும்போது விளங்கிக்கொள்ள முடிகின்றது. புதிய காணிகள் குத்தகை வழங்கப்படும் தொகை அதிகரித்தல், காணிகளின் விலைமதிப்பீடு அதிகரித்தல் ஆகியவை இதற்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றன. மேலும் பெயர் அளவிலான சலுகை அடிப்படையிலான குத்தகை வழங்கல்கள் குறைந்தமை, சேகரிப்பு அதிகரித்தமை ஆகியவையும் காரணங்களாக இருக்கின்றன.

**குத்தகை மதிப்பீடுகள் மற்றும் சேகரிக்கப்பட்டுள்ள குத்தகை வருமானம்**
**2013 - 2015**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| குத்தகை மதிப்பீடுகள் (ரூபா) | 35,000,000,00 | 45,000,000,00 | 45,000,000,00 |
| வருட குத்தகை வருமானம் (ரூபா) | 49,503,518.68 | 44,019,324.86 | 36,969,740.00 |

**காணி வருமானம் அறவிடல் 2013 - 2015 ( ரூபா)**




இங்கே சேகரிக்க வேண்டிய வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்ட போதிலும் 2014 ஆம் வருடத்துடன் சார்பு படுத்தும்போது, 2015 ஆம் வருடத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்

நூற்றுவீதம் 17% அளவு பின்னடைவைக் காட்டுகின்றது. இந்த நிலைமைக்கு பெருமளவில் காரணிகளாக இருந்தவை மாகாணங்களுக்கிடைப்பட்ட மற்றும் பிரதேசச் செயலக மட்டத்தில் குத்தகை வருமானத்தை சேகரிக்கும்போது தோன்றியுள்ள கள மட்டத்திலான குறைபாடுகள், குத்தகை வருமானம் சேகரிப்பதில் பயிற்சி பெற்றுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையில் குறைவு மற்றும் தேர்தல்கள் காலப்பகுதியில் குத்தகை அனுமதி வழங்குதலில் ஏற்பட்ட தாமதம் ஆகியனவாகும்.

குத்தகை எடுத்தவர்கள் மற்றும் குத்தகை வருமானம் தொடர்பான சரியான எதிர்வு கூறல் கிடைக்காதபோது, குத்தகை வருமானத்தின் தொகை மற்றும் வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற குத்தகை வருமானத்தொகை ஆகியவற்றிற்கிடையில் ஒத்திசைவு இல்லாமை காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை இல்லாதொழிப்பதற்கு காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் E- Slims முறைமையில் அமைந்த வேலைத்திட்டம் மிகவும் ஒழுங்கு முறையாக முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது புதியதொழில் நுட்ப வசதிகளை உபயோகித்துக்கொண்டு, ஏற்படுத்தப்பட்டடுள்ள இந்த முறைசார்ந்த வேலைத்திட்டத்தின் ஊடாகப் புதிய குத்தகை வழங்கல்கள், இதுவரையும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பயனாக குத்தகை வருமானம் சேகரிக்கும் பணி திறமையாக முன்னெடுக்கப்படுவதுடன், தகவல்கள் இற்றைப்படுத்தப் படுவதனால், குறைப்பாடுகளை அகற்றிக்கொண்டு, குத்தகை வருமானம் தொடர்பான முகாமைத்துவம் இலகுவாக்கப்படும். இதனுடாக எதிர்காலத்தின் குத்தகை வருமானம் சேகரிக்கும் பணி சிறப்பாக வலுவடையும்.

### 5.3. நிலுவையில் உள்ள குத்தகை வருமானத்தை அறவிடுதல்.

காணி அனுமதிப் பத்திரக்காரர்களினால் குத்தகைப் பணம் செலுத்துவதைத் தட்டிக் கழிக்கும் சந்தர்ப்பங்களில் நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தை அறவிடும் நோக்குடன் மாகாண மற்றும் மாகாணங்களுக்கிடைப்பட்ட மட்டங்களில், பிரதேசச் செயலாளர்கள், பிரதிக் காணி ஆணையாளர்கள் ஆகியோரினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குத்தகை எடுத்தவர்களினால் குத்தகைப் பணம் செலுத்துவதைத் தட்டிக் கழிக்கும் போது, குத்தகை எடுத்தவருக்கு நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் செலுத்தப்பட வேண்டுமென முதலாவது அறிவித்தல் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் பலன் கிடைக்காவிட்டால் குத்தகைப் பணத்தைச் செலுத்த வேண்டிய இறுதித்

தினத்தைக் குறிப்பிட்டு இரண்டாவது அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. இந்த அறிவித்தலுக்கும் வேண்டிய பதில் கிடைக்காவிட்டால் மூன்றாவது படி முறையாக குத்தகை முறி உடன்படிக்கையை இரத்துச் செய்து கொண்டு எமக்கு கிடைக்க வேண்டிய குத்தகைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறான வெவ்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதினால் நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் அறவிடுவதில் சிறந்த பலன் கிடைத்துள்ளத

## 06 அத்தியாயம் - மனித வள முகாமைத்துவம்

### 6.1 அறிமுகம்

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் மனித வளம் ஊடாக அதனுடைய குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு உச்சமட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 2014 ஆம் வருடத்தை விடவும் 2015 ஆம் வருடத்தில் பணியணியினரின் தொகை அதிகரித்துக் காணப்பட்டது குறிப்பாக ஆட்சேர்ப்புப் பணிகள் அதிகரித்தமை மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற அலுவலர்களின் எண்ணிக்கை குறைந்தமை திணைக்களத்தில் அலுவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமைக்கான காரணங்களாகும். இவ்வாறு அதிகரித்த 11 அலுவலர்களில் பதவிநிலை மற்றும் பதவி நிலையில் இல்லாத அலுவலர்கள் அடங்குவர். புதிய அலுவலர்களுக்கு காணி மற்றும் தாபனம் குறித்த கருமங்களில் பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகளும் 2014 ஆம் வருடத்தை விடவும் 2015 இல் அதிகரித்தன.

### 6.1.1. அலுவலகப் பணியணியினரின் கட்டமைப்பு

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், பிரதான அலுவலகம் மற்றும் 08 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ள தாபனமாகும். காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் பிரதான அலுவலராகப் பணிபுரிபவர், காணி ஆணையாளர் நாயகம் அவர்கள் ஆவர். தலைமை அலுவலகத்தில், காணிப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, நிருவாகப் பிரிவு, சட்டப்பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் பிரிவு என 06 பிரிவுகள் செயற்படுகின்றன. இவற்றில் 04 பிரிவுகளின் பிரதான அலுவலர்களாக காணி ஆணையாளர்கள் கடமை புரிவதுடன், கணக்கீட்டுப் பிரிவின் பிரதான அலுவலராகப் பிரதான கணக்காளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் சேவை செய்கின்றனர். காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் சேவைத் தேவைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, 2014 ஆம் வருடத்தில் காணி ஆணையாளர் (நிருவாகம்) மற்றும் காணி ஆணையாளர் (சட்டம்) ஆகிய இரண்டு பதவிகளுக்கான, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் வருடத்தில் காணி ஆணையாளர் (காணி முகாமைத்துவம்) பதவி 01, பிரதிக் காணி ஆணையாளர் (ரண்பிம) பதவி 01, உதவிக் காணி ஆணையாளர்கள் பதவிகள் 05, சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவி 01 மற்றும் சுற்றுலா விடுதித் தொழிலாளர்கள் பதவிகள் 03 உருவாக்குவதற்கு, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 03/2014 பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந்தும் இன்னும் அவை தொடர்பான அங்கீகாரம்

கிடைக்கவில்லை. மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களின் பிரதான அலுவலர்களாகப் பிரதிக்காணி ஆணையாளர்கள் அல்லது உதவிக் காணி ஆணையாளர்கள் கடமை ஆற்றுகின்றார்கள்

**அலுவலகப் பணியணியினரின் கட்டமைப்பு**

| தொடர் இல | அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2014 இல் அலுவலர்களின் எண்ணிக்கை | 2015 இல் இருந்த அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | காணி ஆணையாளர் நாயகம் | 01 | 01 | 01 |
| 02 | காணி ஆணையாளர்கள் | 03 | 03 | 02 |
| 03 | காணி ஆணையாளர் (சட்டம்) | 01 | 01 | 01 |
| 04 | பிரதான கணக்காளர் | 01 | 01 | 01 |
| 05 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 | 01 |
| 06 | உதவிக்/பிரதிக் காணி ஆணையாளர்கள் | 30 | 25 | 25 |
| 07 | கணக்காளர் | 03 | 02 | 04 |
| 08 | நில அளவையாளர் | 09 | 04 | 03 |
| 09 | சட்ட அலுவலர் | 01 | 00 | 00 |
| 10 | நிருவாக அலுவலர் | 02 | 01 | 01 |
| 11 | குடியேற்ற அலுவலர் (விசேட தரம்) | 31 | 10 | 08 |
| 12 | சிரேஷ்ட வேலை அத்தியட்சகர் | 02 | 01 | 01 |
| 13 | மொழி பெயர்ப்பாளர்கள் | 02 | 00 | 01 |
| 14 | சமூக விஞ்ஞானி | 01 | 01 | 01 |
| 15 | அபிவிருத்தி உதவியாளர் | 260 | 179 | 172 |
| 16 | வேலைகள் அத்தியட்சகர் | 21 | 06 | 06 |
| 17 | குடியேற்ற அலுவலர் | 204 | 90 | 112 |
| 18 | பட வரைஞர் | 01 | 00 | 00 |
| 19 | முகாமைத்துவ உதவியாளர் | 160 | 120 | 123 |
| 20 | வெளிக்கள உபதேசகர் | 22 | 29 | 22 |
| 21 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர் | 05 | 02 | 02 |
| 22 | ஆவணக் காப்பாளர் | 01 | 01 | 01 |
| 23 | சாரதிகள் | 32 | 26 | 25 |
| 24 | மோட்டார் பொறிவலர் | 01 | 01 | 01 |
| 25 | அலுவலப் பணி உதவியாளர் | 32 | 18 | 25 |
| 26 | அலுவலகப் தொழிலாளர் | 15 | 15 | 11 |
| 27 | சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 05 | 04 | 05 |
| 28 | சுற்றுலா விடுதிக் தொழிலாளர் | 05 | 05 | 04 |
| 29 | நில அளவை உதவியாளர் | 27 | 12 | 11 |
| 30 | களஞ்சியக் காப்பாளர் | 02 | 02 | 01 |
| 31 | காவலாளர் | 16 | 15 | 16 |
| | **மொத்தம்** | **896** | **575** | **586** |

பல பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் குறைவாகச் சேவையிலுள்ள அலுவலர்கள் இருந்தமையினால் குறித்த பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன'

இதன் பிரகாரம் காணி ஆணையாளர், நில அளவையாளர், குடியேற்ற அலுவலர், அபிவிருத்தி உதவியாளர், மோட்டார் பொறியியலாளர், ஆகிய பதவிகளில் 2015 ஆம் வருடத்தில் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஆதலால் சில பதவி வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன், திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2015 ஆம் வருடத்தில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் அதிகரித்ததுடன், அது எண்ணிக்கையில் 55 ஆக இருந்தது.

### 6.1.2. இட மாற்றங்கள்

2015 ஆம் வருடத்தில் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் சேவை ஆற்றிய 46 அலுவலர்கள் இடமாற்றங்கள் பெற்றுச் சென்றுள்ளதுடன் 32 அலுவலர்கள் இங்கே கடமை ஏற்க இடமாற்றங்கள் பெற்று வந்துள்ளார்கள். இவ்வாறாக இணைந்த சேவைகளில் வருடத்தில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கையை விடவும் இடமாற்றம் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற நிகழ்வாகும். பதிலீடாக அலுவலர் இல்லாமல் இடமாற்றம் வழங்குதல் மற்றும் பதிலீடாக அலுவலர் சேவைக்கு வராமல் இடமாற்றத்தை திருத்தி அமைத்தல் இதற்கான காரணங்களாகும். இந்த நிலைமையைத் தொடர்ச்சியாக பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தும், பதிலீடாக அலுவலர் இல்லாமல் இடமாற்றங்கள் வழங்கப்படுதல் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

**2015 இல் இடமாற்றங்கள் பெற்றுச் சென்றவர்கள் மற்றும் வந்தவர்கள் எண்ணிக்கை**

| பதவி / அலுவலர் | இடமாற்றங்கள் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை | இடமாற்றங்கள் பெற்றுச் சென்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதிக்காணி ஆணையாளர் | 01 | 02 |
| கணக்காளர் | - | 01 |
| அபிவிருத்தி அலுவலர் | 08 | 07 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 15 | 27 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 02 | 02 |
| சாரதி | 06 | 07 |
| **மொத்தம்** | 32 | 46 |

### 6.1.3 ஓய்வு பெறுதல்

2015 ஆம் வருடத்தில் அலுவலர்கள் சிலர் ஓய்வு பெற்றுள்ளார்கள் விபரங்கள் கீழே உள்ளன.

2015 ஆம் வருடத்தில் ஓய்வு பெறுதல்

| அலுவலர் | எண்ணிக்கை |
|---|---|
| குடியேற்ற அலுவலர் | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| வெளிக்கள உபதேசகர் | 01 |
| சாரதிகள் | 01 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 02 |
| அலுவலகத் தொழிலாளர் | 02 |
| மொத்தம் | 12 |

## 6.2 தாபன நடவடிக்கைகள்

2014 ஆம் வருடத்துடன் சார்பு படுத்துகையில் 2015 வருடத்தில் , தாபன நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது குறிப்பாகச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல், ஊதிய ஏற்றங்கள் வழங்குதல், கடன் அங்கீகரித்தல் ஆகியவற்றில் இந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

2015 ஆம் வருடத்தில் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் புதிய ஆட்சேர்ப்புக்கள் 55 இடம் பெற்றுள்ளன.

திணைக்களத்தின் பணியணியினரின் வருடாந்த ஊதிய ஏற்றம் வழங்கியமை 2014 ஆம் வருடத்துடன் சார்பு படுத்தும்போது 2015 ஆம் வருடத்தில் அதிகரித்துக் காணப்பட்டது இதன் பிரகாரம் 2014 ஆம் வருடத்தில் 354 அலுவலர்களுக்கு ஊதிய ஏற்றம் வழங்கப்ப்ட்டதுடன் 2015 ஆம் வருடத்தில் ஊதிய ஏற்றம் பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை 440 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கு மேலாக, இந்த வருடத்தில் 02 அலுவலர்களுக்குச் சேவையைக் கைவிட்டுச் சென்ற அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கையாக 03 அலுவலர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள். சேவை நீடிப்பு எதுவும் இடம் பெறவில்லை.

### 6.2.1. பதவி உயர் பெறுதல்

2015 ஆம் வருடத்தில் திணைக்களத்தில் 04 பதவிப்பிரிவுகளில் பதவி உயர்வுகள் இடம்பெற்றுள்ளன, பதவி உயர்வு பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை 45 ஆகும்.

| பதவி உயர்வு இடம்பெற்ற பதவிப்பெயர் | பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள் எண்ணிக்கை |
|---|---|
| குடியேற்ற அலுவலர் | 17 |
| மொத்தம் | 17 |

### 6.2.2 பணியணியினரின் நலனோம்பு

பணியணியினருக்கான நலனோம்புப் பணிகளில் அவர்களுக்குக் கடன் உதவி அங்கீகரிக்கும் பணி மிகமுக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாறு அங்கீகரிக்கப்படுகின்ற கடன் வகைகள் ஆதனக் கடன், வாகனக்கடன் மற்றும் இடர் கடன்களாகும். நடப்பு வருடத்தில் ஆதனக் கடன் 11 வழங்கப்பட்டுள்ளதுடன், இடர் கடன் 99 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. 2015 ஆம் வருடத்தில் மூவருக்கு மட்டுமே இடர்கடன் வழங்க முடியாமல் இருந்தது.

ஆதலால், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் தாபன நடவடிக்கைகள், 2014 ஆம் வருடத்துடன் சார்புபடுத்தும் போது, 2015 ஆம் வருடத்தில் ஆட்சேர்ப்பு செய்தல், சேவையில் நிரந்தரமாக்குதல், ஊதிய ஏற்றம் வழங்குதல், பதவி உயர்வுகள் பெறுதல் ஆகிய கருமங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 6.3 மனிதவள அபிவிருத்தி

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் மனித வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு பயிற்சி நெறி வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கேற்ப, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விசேடமாக இவ்வாறான பயிற்சிநெறிகள் ஊடாக பணியணியினரின் அறிவாற்றல், திறமை மற்றும் உளப்பாங்கு ஆகிய குணாம்சங்கள் மேம்படுத்தப்படுகின்றன.

இதற்கமைய, 2015 வருடத்தில் பயிற்சி நெறிகள் மற்றும் ஆற்றல் அபிவிருத்திக்கன விடயங்களுக்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபா 3,000,000/= ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதில் ரூபா 2,987,889/= செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், 2015 ஆம் வருடத்தில் திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ளவாறு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

2015 ஆம் வருடத்தினுள் இடம் பெற்ற உள்நாட்டுப் பயிற்சி வழங்கும் வேலைத் திட்டங்கள்

| விடயம் | திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிவேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட பயிற்சிநெறி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பயிற்சிக்குத் தயார்படுத்திய அலுவலர்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| திணைக்களத்தினால் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் | 08 | 02 | 780 | 60 |
| திணைக்களத்தின் அலுவலர்களை பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பிவைத்தல் | 03 | 03 | 20 | 05 |
| வெளிவாரி பயிற்சி நிலையங்களின் அனுசரனையுடன் | - | - | - | 54 |
| மொத்தம் | 11 | 05 | 800 | 119 |

2015 ஆம் வருடத்தில் நான்கு பதவிநிலை அலுவலர்கள் பட்டப்பின்படிப்புக் கற்கைக்காக அனுப்பப்பட்டதுடன் அரச முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கும் இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**புகைப்படம் 03**



காணி விடயம் தொடர்பான பயிற்சி முகாம் ஒன்றில் திணைக்கள அலுவலர்கள் பங்கேற்புச் செய்த காட்சி

**புகைப்படம் 04**



உளப்பாங்கு வளர்ச்சி தொடர்பான பயிற்சி முகாமில் திணைக்கள அலுவலர்கள் பங்கேற்புச் செய்த காட்சி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டுப் பயிற்சி நெறிகளுக்கு மேலதிகமாக மனித வள அபிவிருத்தியை மேலும் பயனளிக்கும் நோக்கத்துடன், அலுவலர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி பெறுகின்ற வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2015 ஆம் வருடத்தில் பணியணியினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள்

| தொடர் இல | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | பயிற்சிக் காலம் | பயிற்சி பெற்ற நாடு | விடய நெறி |
|---|---|---|---|---|
| 01 | திரு.ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ காணி ஆணையாளர் நாயகம் | 2015-05-10 - 2015-05-18 | தாய்லாந்து | International Programme Management Administration |
| 02 | திரு.ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ காணி ஆணையாளர் நாயகம் | 2015-10-09 - 2015-11-13 | அவுஸ்திரேலியா | Sharing Australia's Expertise Encourage Resilence in SriLanka |
| 03 | திருமதி. எஸ்.ஏ.ஏ.டபிள்யு.குலரத்ன பிரதிக் காணி ஆணையாளர் (அபிவிருத்தி) | மேலே உள்ளவாறு | மேலே உள்ளவாறு | மேலே உள்ளவாறு |
| 04 | திருமதி. பி.டி.ஐ.எல்.விஜேகுணவர்தன காணி ஆணையாளர் (காணி) | 2015-09-06 - 2015-09-16 | மலேசியா | Study visit to SLAS class (i) officers to Malaysia |
| 05 | திரு.டி.ஏ.ஏ.யு.குணசேகர காணி ஆணையாளர் (நிருவாகம்) | 2015-07-23 -2015-08-19 | சீனா | Seminar Emergency Communication Network Developing Countries |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | திரு.டபிள்யு.எஸ்.கே.ரத்னாயக<br>பிரதிக் காணி ஆணையாளர் (தெபரவெவ) | 2015-06-25<br>-<br>2015-07-15 | கொரியா | Land Developing Policy and Planning |
| 07 | திருமதி. டபிள்யு.ஏ.எஸ்.ஜயவர்தன<br>உதவிக் காணி ஆணையாளர் (காணி) | 2015-08-10<br>-<br>2015-08-28 | இந்தியா | Skill Development and Employment Generation |
| 08 | உதவிக் காணி ஆணையாளர் (நிருவாகம்), அபிவிருத்தி உதவியாளர் அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி அலுவலர்கள் 14 பேர் | 2015-02-25<br>-<br>2015-03-06 | இந்தியா | Emotional Balancing Higher Productivity |

## 07. அத்தியாயம் - பௌதீக வழங்களை முகாமைத்துவம் செய்தல்

### 7.1 அறிமுகம்

2015 ஆம் ஆண்டின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற நிலையான ஆதனங்கள பெற்றுக்கொள்ளுதல் அல்லது கொள்வனவு செய்தல குறைந்த அளவில் இருந்ததுடன், அரச காணிகள் தொடர்பான தகவலகள் முறைமையை நிர்மாணித்தல் சம்பந்தமான வேலைத்திட்டத்திற்குச் புதிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணினி இயந்திரங்கள் மற்றும் கணினி அச்சுப்பொறிகள் கொள்வனவு செய்வதற்காக மூலதனச் செலவின் கீழ் மேலதிக ஏற்பாடுகள் உபயோகிக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலையான ஆதனங்களில் பெரிதும் பரிமாண வேறுபாடு ஆண்டினுள் ஏற்படவில்லை என அவதானிக்கப்படுவதுடன் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனங்களை ஏலமிடுதல் அல்லது நீக்கிவிடுதல் மிகவும் குறைவாக இருந்ததினால் திணைக்களத்தின் பௌதீகம் தொடர்பான முகாமைத்துவம் சிறந்த முறையில் கையாளப்பட்டுள்ளது என்பது தரவுகளிலிருந்து தெளிவாகின்றது.

### 7.2 பௌதீக வளங்கள் கட்டமைப்பு, ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் வழங்குதல் நடவடிக்கைகள், பொருள்களை நீக்குதல் செய்தல்

அசைவற்ற ஆதனங்கள் பிரிவின் கீழ், புதிய கட்டடங்கள் நிர்மாணித்தல் மற்றும் திணைக்களத்தின் தேவைக்குக் கட்டடங்கள் கையேற்றங்கள் ஆகியவை இடம்பெறவில்லையாகையால், 2014 ஆம் ஆண்டில் உள்ளவாறே 2015 ஆம் ஆண்டிலும் அசைவற்ற ஆதனங்கள் பிரிவின் மீதி நிலையாக இருந்தது.

2015 ஆம் ஆண்டில்,அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பில் ஏல விற்பனைகளும் நீக்கல்களும் நிகழ்ந்தைமையினால் அசைவுள்ள ஆதனங்கள் சிலவற்றின் முன்னைய மீதியிலிருந்து தற்போதைய மீதி குறைவடைந்துள்ளது. . இருப்பினும் மரத்தினால் உருவாக்கப்பட்ட பொருள்களில் அதிக அளவு நீக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லையாதலால் இவற்றின் தொகை முன்னைய ஆண்டை விடவும் அதிகரித்துள்ளது.

E-Slims மற்றும் பிம்சவிய கருத்திட்டம் ஆகியவை தொடர்பாக, உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை இருந்தமையினால் கணினி இயந்திரங்கள் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்த காரணத்தால், ஆண்டினுள் நிலவிய மீதியைவிடவும் சிறிது அளவு அதிகரிப்புக்குட்டுகின்றது. இவை பற்றிய விபரங்கள் கீழே அசையா மற்றும் அசையும் சொத்துக்கள் தொடர்பான அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அசையா சொத்துக்கள்**

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏலத்தில் விடுதல் | உரித்தாக்கல் | |
| 1 | காணி (ஹெக்டொயர்) | 87.8511 | - | - | - | - | 87.8511 |
| 2 | கட்டிடங்கள் | 300 | - | - | - | - | 300 |
| 3 | நிர்மாணிப்பு | - | - | - | - | - | - |

**அசையும் சொத்துக்கள**

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள் வனவு | ஏலத்தில் விடுதல் | நீக்குதல் | |
| 1 | கேப் வாகனம் | 25 | - | 05 | - | 01 | 29 |
| 2 | மோட்டார் வாகனம்(ஜீப்) | 11 | 01 | - | - | - | 12 |
| 3 | வேன்கள் | 01 | - | 01 | - | - | 02 |
| 4 | சைக்கிள் | 10 | - | - | 01 | - | 09 |
| 5 | போட்டோப் பிரதி | 16 | - | 02 | - | - | 18 |
| 6 | கணனி | 103 | - | - | 04 | - | 99 |
| 7 | கணனி அச்சு இயந்திரம் | 62 | - | - | - | - | 62 |
| 8 | பெக்ஸ் இயந்திரம் | 14 | - | 05 | - | - | 19 |
| 9 | தட்டச்சு இயந்திரம் | 50 | - | - | 07 | - | 43 |
| 10 | பணக் காப்புப் பெட்டி | 05 | - | - | - | - | 05 |
| 11 | தொலைக்காட்சிப் பெட்டி | 10 | - | 03 | - | - | 13 |
| 12 | வானொலி இயந்திரம் | - | - | - | - | - | - |
| 13 | குளிர்சாதனப் பெட்டி | 07 | - | 02 | - | - | 09 |
| 14 | அலுமாரி(உருக்கு ,மரம்) | 226 | - | 15 | 36 | 02 | 203 |
| 15 | மேசைகள் | 464 | - | 50 | 08 | 02 | 504 |
| 16 | கதிரைகள் | 692 | - | 45 | 57 | 30 | 654 |
| 17 | றாக்கை | 228 | - | - | - | 01 | 227 |
| 18 | நிலைகோள் மின் விசிறி | 01 | - | 05 | - | - | 06 |
| 19 | றோனியோ அச்சு | 06 | - | - | - | - | 06 |
| 20 | மின் கேத்தல் | 12 | - | 04 | - | 01 | 15 |
| 21 | தண்ணீர் வடிகட்டி | 21 | - | 12 | 04 | 01 | 28 |
| 22 | ரைஸ் குக்கர் | 04 | - | - | - | - | 04 |
| 23 | எரிவாயு அடுப்பு | 06 | - | 02 | - | - | 08 |
| 24 | குளிரூட்டி இயந்திரம் | 25 | - | - | - | - | 25 |
| 25 | மின் அழுத்தி | 06 | - | - | - | - | 06 |
| 26 | தீ அணைப்புக் கருவி | 16 | - | - | - | - | 16 |
| 27 | பிலெண்டர் | 02 | - | 02 | - | - | 04 |
| 28 | கணிக்கும் இயந்திரம் | 149 | - | 17 | - | 08 | 158 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 29 | நிலத் தராசு | 10 | - | - | - | - | 10 |
| 30 | வக்கும் கிளீனர் | 04 | - | 01 | - | - | 05 |
| 31 | பொலிஷர் | 03 | - | - | - | - | 03 |
| 32 | புல் வெட்டும் இயந்திரம் | - | - | 02 | - | - | 02 |
| 33 | போட் வெட்டும் இயந்திரம் | 02 | - | - | - | - | 02 |
| 34 | கடதாசி வெட்டும் | 01 | - | - | - | - | 01 |
| 35 | கணினி மேசை | 77 | - | 50 | 01 | - | 126 |
| 36 | கணினிக் கதிரை | 87 | - | - | 02 | - | 85 |
| 37 | கைரேகை பதிவு இயந்திரம் | 02 | - | - | - | - | 02 |
| 38 | மின் துளையிடும் சுத்தியல் | 01 | - | - | - | - | 01 |
| 39 | மல்டி மீற்றர் | 01 | - | - | - | - | 01 |
| 40 | துண்டுப் பிரசுரம் றாக்கை | 01 | - | 01 | - | - | 02 |
| 41 | டிஜிட்டல் கமரா | 01 | - | - | - | - | 01 |
| 42 | லப்றொப் கணினி | 05 | - | 01 | - | - | 06 |
| 43 | கட்டில் (தேக்கு) | 03 | - | - | - | - | 03 |
| 44 | மல்டி மீடியா புறொஜெக்டர் | 01 | - | - | - | - | 01 |
| 45 | பென் டிரைவ் | 14 | - | - | - | 03 | 11 |
| 46 | யூ.பீ.எஸ் இயந்திரம் | 37 | - | - | 10 | - | 27 |
| 47 | வரவேற்பறைக் கதிரை | 12 | - | - | - | - | 12 |
| 48 | சாப்பாட்டு மேசை (தேக்கு) | 01 | - | - | - | - | 01 |
| 49 | சாப்பாட்டு மேசைக் கதிரை | 20 | - | - | - | - | 20 |
| 50 | கிறைண்டர் | 02 | - | - | - | - | 02 |
| 51 | நிறைவேற்று கதிரை | 22 | - | 16 | - | 01 | 37 |
| 52 | நிறைவேற்று மேசை | 29 | - | 08 | - | - | 37 |
| 53 | சோபா செட் | 01 | - | - | - | - | 01 |
| 54 | மிட் பெக் கதிரை | 52 | - | - | - | - | 52 |
| 55 | வரவேற்பு கதிரைகள் | 86 | - | - | - | - | 86 |
| 56 | லோபி கதிரை | 20 | - | - | - | - | 20 |
| 57 | மின்னழுத்தி மேசை | 01 | - | - | - | - | 01 |
| 58 | தொலைக்காட்சிப் பெட்டி | 01 | - | - | - | - | 01 |
| 59 | டுப்லெக்ஸ் யுனிட் | 01 | - | - | - | - | 01 |
| 60 | நீள் கதிரை | 19 | - | - | - | - | 19 |
| 61 | கட்டில் | 22 | - | - | 01 | - | 21 |
| 62 | காஸ் சிலிண்டர் | 01 | - | 02 | - | - | 03 |
| 63 | LCD மொனிட்டர் | 02 | - | - | - | - | 02 |
| 64 | கண்ணாடி மேசை | 10 | - | 01 | - | - | 11 |
| 65 | மகோகனீ அலுவலக | 04 | - | - | - | - | 04 |
| 66 | Low back கதிரை | 115 | - | - | - | - | 115 |
| 67 | சுவர்க் கடிகாரம் | 02 | | 04 | - | 01 | 05 |
| 68 | ரெகியுலேட்டர் | 01 | - | - | - | - | 01 |
| 69 | சென்டா டைனிங்செட் | 05 | - | - | - | - | 05 |
| 70 | ஓய்வு எடுக்கும் கதிரைகள் | 03 | - | - | - | - | 03 |
| 71 | வைட்போட் | 01 | - | - | - | - | 01 |
| 72 | ஏணிகள் | 04 | - | - | - | - | 04 |
| 73 | ரவுட்டர் | 01 | - | 01 | - | - | 02 |
| 74 | கீ போட் | 01 | - | - | - | - | 01 |
| 75 | பொயிலர் | - | - | - | - | - | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 76 | பீங்கான் தட்டு | 01 | - | - | - | - | 01 |
| 77 | பிளாஸ்டிக் கதிரைகள் | 70 | - | 50 | 04 | - | 116 |
| 78 | ஸ்கனர் | 02 | - | - | - | - | 02 |
| 79 | நூலக அலுமாரிகள் | 02 | - | - | - | - | 02 |
| 80 | பை கட்டர் | 01 | - | - | - | - | 01 |
| 81 | உணவு பரிமாறும் மேசை | 02 | - | - | - | - | 02 |
| 82 | இரும்புச் சிறு அலுமாரி | 02 | - | - | - | - | 02 |
| 83 | ரீசாச்சபிள் டோச்லைட் | 02 | - | - | - | - | 02 |
| 84 | புத்தகக் கட்டு அலமாரி | 02 | - | - | - | - | 02 |
| 85 | லொபி ஸ்டூல் | 01 | - | - | | - | 01 |
| 86 | சலவை இயந்திரம் | 01 | - | - | - | - | 01 |
| 87 | சிறு அலுமாரி | 05 | - | - | - | - | 05 |
| 88 | துபாயத்தட்டு | 01 | - | - | - | - | 01 |
| 89 | . மர இழுக்கக் கூடிய | 12 | - | - | - | - | 12 |
| 90 | மெத்தை | 04 | - | 18 | - | - | 22 |
| 91 | . கோவைகள் வைக்கும் | 38 | - | 15 | - | - | 53 |
| 92 | பெண் டிரைவ் 8GB | 07 | - | 02 | - | - | 09 |
| 93 | TVஅண்டெனா | 01 | - | | - | - | 01 |
| 94 | கூரை விசிறி | - | - | 03 | - | - | 03 |
| 95 | நீர் இயந்திரம் | - | - | 01 | - | - | 01 |

### 7.3 களஞ்சிய முகாமைத்துவம்

களஞ்சிய முகாமைத்துவம், வருடாந்த இருப்பு ஏடுகள் பேணப்பட்டு களஞ்சிய மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. பிரதான அலுவலக மட்டத்திலும், உப அலுவலகங்கள் மட்டத்திலும் இப் பணிகள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**களஞ்சிய மதிப்பீடு**

| தொடர் இல. | அலுவலகம் | பொருள் மதிப்பீடு செய்யப்பட்ட அலுவலகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தலைமை அலுவலகம் | 01 |
| 02 | இரத்மலானை உலக உணவுக் களஞ்சியம் | 01 |
| 03 | மீப்பிலிமான சுற்றுலா விடுதி | 01 |
| 04 | அநுராதபுரம் பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 05 | அநுராதபுரம் சுற்றுலா விடுதி | 01 |
| 06 | அநுராதபுரம் உப அலுவலகம் | 32 |
| 07 | பொலநறுவை பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 08 | பொலநறுவை சுற்றுலா விடுதி | 01 |
| 09 | பொலநறுவை உப அலுவலகம் | 12 |
| 10 | திருகோணமலை பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |

| | | |
|---|---|---|
| 11 | திருகோணமலை உப அலுவலகம் | 08 |
| 12 | கந்தளாய் உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 13 | கந்தளாய் சுற்றுலா விடுதி | 01 |
| 14 | கந்தளாய் உப அலுவலகம் | 06 |
| 15 | தெபரவெவ பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 16 | கதிர்காம சுற்றுலா விடுதி | 01 |
| 17 | ஹம்பாந்தோட்டை சுற்றுலா விடுதி | 01 |
| 18 | தெபரவெவ உப அலுவலகம் | 04 |
| 19 | மஹியங்கனை பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 20 | மஹியங்கனை சுற்றுலா விடுதி | 01 |
| 21 | மஹியங்கனை உப அலுவலகம் | 16 |
| 22 | அம்பாறை பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 23 | அம்பாறை (உஹன) சுற்றுலா விடுதி | 01 |
| 24 | அம்பாறை உப அலுவலகம் | 16 |
| 25 | மொனறாகலை உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம் | 01 |
| 26 | மொனறாகலை சுற்றுலா விடுதி | 01 |
| 27 | மொனறாகலை உப அலுவலகம் | 04 |
| | **மொத்தம்** | **117** |

# 8 அத்தியாயம் - நிதி முகாமைத்துவம்

## 8.1 அறிமுகம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவம், நானாவித செலவினத் தலைப்புகளின் கீழ் செலவினங்களை மேற்கொள்ளல், வருமானம் ஈட்டல், செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், முற்பணக் கணக்குகளைப் பேணிச் செல்லல், பௌதீக வள முகாமைத்துவம், களஞ்சியசாலை மதிப்பீடு, கணக்காய்வு நடவடிக்கைகள் முதலான பிரிவுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 8.2 வரவு - செலவு முகாமைத்துவம்

திணைக்களத்திற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற மாகாணங்களுக்கிடையிலான காணி அபிவிருத்தித் திட்டங்களுக்காக திணைக்களத்தின் பொதுவான நிருவாக நடவடிக்கைகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்வது வரவு - செலவு முகாமைத்துவத்தின் பிரதான பணியாக இருப்பதுடன், இதற்கமைய, திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் நிதிஒதுக்கீடுகள் ஈடுபடுத்தப்படுதல் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

**இதற்கமைய நிறைவேற்றப்படுகின்ற முக்கிய பணிகள் வருமாறு:**

1. ரண்பிம அளிப்புப் பத்திரங்களைத் தயாரித்தல்.
2. காணிக் கச்சேரிகளையும் நடமாடும் சேவைகளையும் நடாத்தல்.
3. திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள், சுற்றுலா விடுதிகள், அலுவலகக் கட்டிடங்களை புனரமைத்தல்.
4. பௌதீக வளங்களின் கொள்முதல்.
5. பணியாட் தொகுதிக்கான பயிற்சியும் திறன் விருத்தியும்.

மேற்காட்டப்பட்ட தகவல்களுடன் தொடர்புடையதாக நிதி ஒதுக்கீடுகள் ஈடுபடுத்தப்பட்ட விதம் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு கீழ்க் காணும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

### வரவு - செலவு முகாமைத்துவம்

| 855-40-01 | 2014 | | | செல வினத் தின் வீதம் (%) | 2015 | | | செலவி னத்தின் வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) | | நிதி ஒதுக்கீடு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) | |
| **கருத்திட்டம் I** | | | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | **194,150,000** | **192,944,685** | **1,205,315** | **99.38** | **256,749,000** | **255,961,456** | **787,544** | **99.69** |
| ஏனைய மீண்டெழும் | 54,450,000 | 52,073,191 | 2,376,308 | 95.63 | 57,281,000 | 56,684,304 | 596,696 | 99.56 |
| **மூலதனம்** | 89,100,000 | 87,126,871 | 1,973,129 | 97.79 | 80,050,000 | 79,053,316 | 1,003,316 | 98.75 |
| 2001 | 48,500,000 | 48,440,562 | 59,438 | 99.88 | 30,000,000 | 29,988,061 | 11,939 | 99.96 |
| 2002 | 900,000 | 891,162 | 8,838 | 99.02 | 900,000 | 885,453 | 14,547 | 98.38 |
| 2003 | 5,000,000 | 4,980,419 | 49,581 | 99.61 | 5,150,000 | 5,106,865 | 43,135 | 99.16 |
| 2102 | 3,000,000 | 2,999,350 | 650 | 99.98 | 3,300,000 | 3,298,614 | 1,386 | 99.96 |
| 2104 | 1,000,000 | 926,630 | 73,370 | 92.66 | 10,000,000 | 10,000,000 | 00 | 100 |
| 2105-1 | 1,200,000 | 1,174,563 | 25,437 | 97.88 | 1,200,000 | 1,199,024 | 976 | 99.92 |
| 2105-2 | 4,000,000 | 3,994,287 | 5,713 | 99.86 | 3,500,000 | 3,098,491 | 401,509 | 88.53 |
| 2105-3 | 3,000,000 | 1,432,830 | 1,567,190 | 47.76 | 3,000,000 | 2,651,375 | 384,625 | 88.38 |
| 2401 | 2,500,000 | 2,398,679 | 101,321 | 95.95 | 3,000,000 | 2,987,889 | 12,111 | 99.60 |
| 2502-2 | 20,000,000 | 19,888,389 | 111,611 | 99.44 | 20,000,000 | 19,837,544 | 162,456 | 99.19 |
| **மொத்தம்** | **337,700,000** | **332,144,747** | **5,555,253** | **99.35** | **394,080,000** | **391,699,076** | **2,380,924** | **99.40** |

2014 ஆம் ஆண்டை விடவும் 2015 ஆம் ஆண்டில் மீண்டு வரும் செலவு அதிகரித்துள்ளதுடன் இதற்கான காரணம் பணியணியினரின் எண்ணிக்கை அதிகரித்ததினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியங்களில் உண்டான அதிகரிப்பு முக்கிய காரணியாகும். முன்னைய ஆண்டை சார்புபடுத்தும்போது, மூலதனச செலவினம் தொடர்பாகக் கிடைக்கப்பெற்றதும் செலவினம் தொடர்பாகக் ஏற்பாடுகள் உபயோகிக்கப்பட்டதும் சம்பந்தமாக சிறிய விகிதாசார அதிகரிப்பு காணக்கூடியதாக உள்ளது. திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக வளங்களின் சிறந்த முகாமைத்துவம் காரணமாக, குறித்த ஏற்பாடுகளின் மட்டத்தினுள் மூலதன செலவினத்தை வைத்துக் கொள்ள திணைக்களத்தினால் முடியுமாக இருந்தது.

## 8.3 அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு 'பி'

திணைக்களத்தில் பணி புரிகின்ற அலுவலர்களின் நிதித் தேவைகளுக்கு உதவும் வண்ணம், முற்பணம் மற்றும் கடன் வசதிகள் வழங்குதல். இந்தக் கணக்கின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ளவாறு கிடைக்கபெற்ற முற்பணம் மற்றும் கடன் தொடர்பான விண்ணப்பங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு 'பி'

| தொடர் இலக்கம் | கடன் வகை | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட எண்ணிக்கை | பணத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | விசேட முற்பணக் கடன் | 182 | 182 | 728,250.00 |
| 02 | விழாக்கால முற்பணம் | 678 | 678 | 4,345,200.00 |
| 03 | இடர் கடன் | 139 | 110 | 11,253,450.68 |
| 04 | துவிச்சக்கர வண்டிக் கடன் | - | - | - |
| | மொத்தம் | 999 | 970 | 16,326,900.68 |

குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைக்குள் வழங்கப்பட்ட முற்பணக் கணக்கு தொடர்பான விபரங்கள் கடந்த வருட ஒப்பீட்டுடன் கீழே அட்டவணை மூலம் தரப்பட்டுள்ளன.

### முற்பணக் கணக்கு செயற்படுத்தப்பட்ட விதம்

| எல்லை | 2014 | | | கூட்டுத் தொகை | 2015 | | | கூட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு A | உண்மையான | | B+C | மதிப்பீடு A | உண்மையான | | B+C |
| | | எல்லைக்கு தாக்கம் செலுத்தும் B | எல்லைக்கு தாக்கம் செலுத்தாத C | | | எல்லைக்கு தாக்கம் செலுத்தும் B | எல்லைக்கு தாக்கம் செலுத்தாத C | |
| செலவினத்தின் உச்ச எல்லை | 14,000,000.00 | 13,943,545.15 | 3,442,456.06 | 17,386,001.21 | 16,200,000.00 | 16,326,900.68 | 3,585,815.00 | 19,912,715.68 |
| ஆகக் குறைந்த வரவெல்லை | 12,000,000.00 | 12,049,330.99 | 3,432,773.00 | 15,482,103.99 | 14,200,000.00 | 15,758,861.80 | 4,664,350.00 | 20,423,211.80 |
| உச்ச பற்று எல்லை மீதி | 70,000,000.00 | 52,551,660.33 | 0.00 | 52,551,660.33 | 60,000,000.00 | 52,337,399.21 | 0.00 | 52,337,399.21 |

2015-01-01 ஆம் திகதியில், முற்பணக்கணக்கு 'பி' இல் தீர்த்துவைக்கப்பட்டிராத கடன் மீதியாக ரூபா. 475,708,35 தீர்த்து வைக்கப்படாமல் இருந்ததுடன், இந்த கடன் மீதியை மீதியாக உள்ள கடன் மீதியிலிருந்து தீர்த்துவைப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வாறான பிரச்சினைகள் மீண்டும் தோன்றுவதைத் தடுக்கும் நோக்குடன் கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

I. அலுவலர்கள் இடமாற்றங்கள் பெற்ற செல்லும்போது, அவர்களுடைய ஊதிய விபரங்களுடன் செலுத்தவேண்டிய கடன் மீதியைச் செலுத்தும் முறையையும் தெரிவித்து அனுப்புதல்.

II. குறித்த நிறுவனம் கடன் மீதியைச் செலுத்தாவிடத்து, 03 மாதங்களின் பின்பு மீண்டும் கடிதம் மூலமாக அறிவித்தல் செய்தல்.

III. தொடர்ந்தும் நினைவூட்டல்கள் அனுப்பி இருந்தும், குறித்த கடன் தீரத்துவைக்கப்பட வில்லையெனில் குறித்த நிறுவனத்திற்கு அறிவித்தல் வழங்கிக்கொண்டு, மாற்றம் செய்யும் பத்திரம் ஊடாகக் குறித்த திணைக்களத்திற்குக் குறித்த கடன் மீதியைச் 'செலவாக'த் தெரிவித்தல்.

IV. ஓய்வுபெற்றுச் செல்கின்ற அலுவலரின் கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்க்கு வேண்டிய ஏற்பாடுகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெற்றுத்தராதவிடத்து, ஓய்வூதியத் திணைக்களத்திற்குக் குறித்த தகவல்களை அறிவித்து, ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்க்கு நடவடிக்கைகள் எடுத்தல்.

### 8.4 கணக்காய்வு நடவடிக்கைகள்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தினாலும், திணைக்கள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுகளும், அரச கணக்காய்வுகளும் ஒப்பீட்டு ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விதம் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணைகளில் விளக்கப்பட்டுள்ளன.

**உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்**

| | 2014 | 2015 |
|---|---|---|
| நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை | 09 | 14 |
| அவற்றுள் வருடத்தில் பதிலளிக்கப்பட்ட எண்ணிக்கை | 08 | 14 |

2015 ஆம் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு முன்னேற்பாட்டில் உள்ள நடவடிக்கைகளின் பிரகாரம், உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் 20 மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் வருட இறுதியில் 14 உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ள முடியுமாக

இருந்தது. இந்தக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்ட அலுவலகங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பிராந்திய அலுவலகங்கள் -**

1. உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம் - கந்தளாய
2. பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - மஹியங்கன
3. நுவர எலிய சுற்றுலா விடுதி - நுவர எலிய
4. பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - தெபரவெவ
5. பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - அம்பாரை
6. இரத்மலான உலக உணவுக் களஞ்சியசாலை - இரத்மலான
7. பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - அனுராதபுரம்
8. பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகம் - பொலன்னறுவ

**தலைமை அலுவலகம் -**

9. தொழிநுட்பப் பிரிவு - தலைமை அலுவலகம்
10. ரண்பிம பிரிவு - தலைமை அலுவலகம்
11. தாபனப் பிரிவு - தலைமை அலுவலகம்
12. களஞ்சியசாலை - தலைமை அலுவலகம்
13. கணக்கீட்டுப் பிரிவு - தலைமை அலுவலகம்
14. போக்குவரத்துப் பிரிவு - தலைமை அலுவலகம்

**அரச கணக்காய்வு நடவடிக்கைகள்**

| | 2014 | 2015 |
|---|---|---|
| நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை | 11 | 07 |
| அவற்றுள் வருடத்தில் பதிலளிக்கப்பட்ட எண்ணிக்கை | 11 | 07 |

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளும்போது, அரச கணக்காய்வு பரிசீலனைகள் சம்பந்தமான விடைகள் உரியவாறு வழங்கப்பட்டுள்ளன.

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය,
නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 4/1/சுற்றறிக்கை

ඔබේ අංකය / உமது இல / YOUR NO:

දිනය / திகதி: 2015.01. 01

---

சுற்றறிக்கை இலக்கம் ;- 2015/ 01

இணைப்பு - 01

அனைத்துப் பிரதேச செயலாளர்கள் மற்றும்
பிரதிக் / உதவிக் காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)

**2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் முன்மொழிதல்களைச் செயற்படுத்துதல் நகரப் பிரதேசங்களின் வதிவிடத்திற்குக் காணிகள் வழங்கும் போது நிவாரணம் பெற்றுக் கொடுத்தல்**

அதிஉத்தம ஜனாதிபதி மற்றும் நிதி மற்றும் திட்டமிடுதல் அமைச்சர் அவர்களின் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட உரையில், இலக்கம் 35.1 இல் குறித்துரைக்கப்பட்ட முன்மொழிதலைச் செயற்படுத்தல் தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்கள் இந்தச் சுற்றறிக்கையின் மூலமாக விடுக்கப்படுகின்றன.

02. நகரங்கள் அல்லது அதிக அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்கள் என வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில், மக்களுக்கு அரச காணிகளை வழங்கும்போது, அவை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலக் குத்தகை முறி அல்லது அளிப்புப்பத்திரத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. இருப்பினும் இவ்வாறு காணிகளைப் பெற்றுக்கொள்ளும் போது குறைந்த வருமானம் பெறுகின்ற நபர்களினால் கூடிய குத்தகை வாடகை செலுத்த முடியாதுள்ளது என இதுவரையிலும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குப் பரிகாரமாக இவ்வாறான நபர்களுக்கு நிவாரணச்சலுகை வழங்கும் நோக்குடன் முன்வைக்கப்பட்ட முன்மொழிதலுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

03. இதன் பிரகாரம் 2015.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் நகரம் / அதிக அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களில், வதிவிடநோக்கத்திற்கான அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், நீண்ட காலக் குத்தகையில் காணிகள் வழங்கும்போது, கீழே தரப்பட்டுள்ளவாறு குத்தகை வாடகைக் அறிவிடப்படுதல் வேண்டும் எனத் தயவுடன் தெரிவிக்கின்றேன்.

i. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 300,000/= வரையிலுமுள்ள நபர்களிடமிருந்து பெயரளவிலான குத்தகை வாடகை அறவிடப்படும். பெயரளவிலான குத்தகை வாடகை ரூபா 1000/= அல்லது காணியின் அபிவிருத்தியடையாத பெறுமதியின் 0.5% க்கு எது குறைவோ அந்தத் தொகையாக இருக்கும்.

ii. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 300,000/- க்கு அதிகமாகவும் ரூபா 400,000/= வரையிலுமாக உள்ள நபர்களிடமிருந்து 0.5% குத்தகை வாடகை அறவிடப்படும்.

iii. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 400,000/-க்கு அதிகமாகவும் ரூபா 500,000/- வரையிலுமாக உள்ள நபர்களிடமிருந்து 1% குத்தகைவாடகை அறவிடப்படும்.

iv. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 500,000/-க்கு அதிகமாகவும் ரூபா 600,000/- வரையிலுமாக உள்ள நபர்களிடமிருந்து 2% குத்தகைவாடகை அறவிடப்படும்.

v. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 600,000/-க்கு அதிகமாக உள்ள நபர்களிடமிருந்து 4% குத்தகை வாடகை அறவிடப்படும்.

කාර්යාලය / பொது / General: 0112-797400
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0112-864051
ඊමේල් / ஈ-மெயில் / E-mail: info@landcom.gov.lk

காணியை வழங்குவதற்கு நபர் தெரிவுசெய்யப்பட்ட திகதியில் நிலவிய காணியின் அபிருத்தியடையாத பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குத்தகை வாடகை அறவிடப்படவேண்டும் எனத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

04. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களினால் குத்தகை அங்கீகரிக்கப்பட்ட திகதி வரையிலுமான இந்தக் காணிக்கான நிலுவையுலுள்ள குத்தகை வாடகைப்பணம் அறவிடப்படமாட்டாது. என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள். இங்கே பெறவேண்டியுள்ள தவணைப் பணமும் பதிவழித்தல் செய்யப்படும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள் இருபினும் அத்துமீறல் செய்யப்பட்டுள்ளவை எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட காணிகளுக்கான குற்றப்பணம் பதிவு அழித்தல் செய்யப்படமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள் இந்தச் சுற்றறிக்கை செயற்படுத்தப்படுகின்ற திகதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும், நீண்டகாலக் குத்தகை முறிகள் வழங்கப்பட்டிருக்காத இவ்வாறான காணிகள் தொடர்பாகவும் நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் அறவிடப்பட மாட்டாது. இருபினும் அதுவரையிலும் நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்குமானால், குறித்த பணத்தை எதிர்வரும் காலத்தில் செலுத்தப்படவிருக்கின்ற குத்தகைப் பணத்திற்காக எதிரீடு செய்ய முடியும். இந்தச் சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தல்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரிவுசெய்யப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக நபர்கள் தெரிசெய்யப்படும் போது இந்த நிவாரணச் சலுகை ஏற்புடைத்ததாக அமையாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

05. இந்தச் சுற்றறிக்கையின் கீழ் வருகின்ற காணிக்கு, இந்தச் சுற்றறிக்கை செயற்படுத்தப்படுகின்ற திகதிக்கு முன்னர், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் நீண்டகாலக்குத்தகை முறி வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தைப் பதிவு அழித்தல் செய்வதற்காக, மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஆகிய அலுவலர்களுக்குப் பிரதியிட்டு, விபரங்கள் அடங்கிய விதப்புரையுடன் எனக்குச் சமர்ப்பித்து, என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டபின்பு, குத்தகைக்கு எடுத்தவருக்கு நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தைப் பதிவு அழித்தல் செய்வதற்கு எடுத்த தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். இதுவரையிலும், நிலுவையில் உள்ள குத்தகைப்பணம் அறவிடப்பட்டு இருக்குமெனில், எதிர்வரும் காலத்தில் எதிரீடு செய்து கொள்வதற்காக என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கென இணைப்பு 1 இல் உள்ள படிவம் ஊடாகப் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ உதவிக் காணி ஆணையாளரினால் எனக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. இவ்வாறு நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தை பதிவு அழித்தல் செய்யும் போது, கட்டுப்பாட்டுக் கணக்குகளில் சரியான பதிவுகளைச் செய்தல் வேண்டும். நீண்ட காலக்குத்தகைக்கான கட்டுப்பாட்டுக் குத்தகைப் கணக்கில் 'வரவு' ப் பக்கத்தில் அறவிடவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பணத்தைப் பதிவுசெய்தல் வேண்டும். அது நிலுவையாக இருக்கும். போது, நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்குக் கொண்டு செல்லப்படாமல் இருந்தால், நிலுவையைக் குத்தகைப் பணக்கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவுசெய்துகொண்டு, நிலுவைக்கட்டுப்பாட்டுக் கணக்கின் 'வரவு' பக்கத்தில் உள்ளடக்குதல் வேண்டும். நிலுவைக்கட்டுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் 'வரவு' வைக்கப்பட்டுள்ள நிலுவையை, என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு பதிவு அழித்தல் செய்யும் போது, குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி ஆகியவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பதிவு அழித்தல் எனக் குறித்துக் கொண்டு, நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கில் 'செலவாக' உள்ளடக்கப்படவேண்டும். இருப்பினும் நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு கொண்டு செல்வதற்கு முன்பு உள்ள நிலைமையில், குத்தகைப் பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டுள்ள குத்தகைப் பணத்தைப் பதிவு அழித்தல், குறித்த கணக்கில் 'செலவுப்' பக்கத்தில் பதிவு செய்தல் வேண்டும். செலுத்தப்பட்டுள்ள குத்தகைப் பணத்தை எதிர்காலத்தில் எதிரீடு செய்யும்போது, குறித்த பணம் குத்தகைப் பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் ' செலவுக்கு' பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதால் குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்ட கடித்த்தின் இலக்கம் மற்றும் திகதியுடன் குறித்த கணக்கின் "செலவுக்கு" குறித்த எதிர்காலப்பகுதிக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் எனப்பதிவு செய்து, மீண்டும் பெறப்பட்டது எனக் குறித்த காலப்பகுதிக்கு ஏற்றவாறு 'செலவுப்' பதிவும் செய்தல் வேண்டும்.

07. இந்தச் சுற்றறிக்கை செயற்படுத்தப்படுகின்ற திகதிக்குப் பின்பு அங்கீகாரம் வழங்கப்படுகின்ற காணிகள் தொடர்பாக, இந்தச் சுற்றறிக்கையின் கீழ் குறித்த திகதியிலிருந்து குத்தகைப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்றவாறு அங்கீகாரம் வழங்கப்படுவதால், மேற்கண்டவாறு குத்தகைப் பணம் பதிவு அழித்தல் செய்தல் ஏற்புடைத்ததாக அமையமாட்டாது.

08. இங்கே ஆளொருவர் காணித்துண்டு ஒன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதன் பொருள் கோடல், காணிக்கச்சேரி, கேள்வி மனுக்கள், ஏலத்தில் விடுதல் அல்லது வேறு சட்டரீதியான ஆவணம் வழங்கப்படுதல், ஆகிய முறையில் தெரிவு செய்யப்பட்ட திகதியாகும். அத்துமீறல் செய்த வரையில் தெரிவு செய்யப்பட்டால், அதற்கான திகதி 1995-06-15 ஆகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

09. நகரங்கள் / அதிக அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களில் வதிவிடத்திற்கென, அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப்பத்திரம் பெறுவதற்குத் தகைமையுடைய நபர்களுக்கு, அவ்வாறு அளிப்புப் பத்திரங்கள் வழங்கும்போது, காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை முழுவதும் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். இங்கே நீண்டகாலக் குத்தகைப்பணம் என்ற வகையில் செலுத்தப்பட்டுள்ள பணத்தைக் கழித்துக் கொண்டு மிகுதிப் பணத்தை அறவிடுதல் வேண்டும்.

10. இந்த நிவாரணச் சலுகையை வழங்குவதன் மூலமாக, குத்தகை வாடகை செலுத்திக்கொள்ள இயலாமல் இருந்த காரணத்தால் வதிவிடத்திற்கான காணிளைப்பெற்றுக்கொள்ள முடியாது போன பெருந்தொகையான மக்களுக்குக் காணிகளின் ஆட்சியை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது ஆதலால் இந்த நிவாரணச் சலுகையைப் பெற்றுக்கொள்ளவதற்குத் தகைமையுடைய மக்களுக்கு இதுபற்றிய அறிவூட்டல்களை வழங்கி, அதிக அளவில் நீண்டகாலக் குத்தகை முறி மற்றும் அளிப்புப்பத்திரங்கள் வழங்கி முன்னோக்கிச் செல்வதற்கு தங்களுடைய செயற்பாடு பங்களிப்பை வழங்குமாறு மேலும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த நிவாரணச் சலுகையைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் பொய்யாகத் தங்களுடைய வருமானத்தைக் குறைத்துக்காட்டுகின்ற நபர்கள் குறித்து மிகவும் கவனமாக இயங்குமாறு வலியுறுத்துகின்றேன். நபர்களின் வருமானத்தை அத்தாட்சிப்படுத்துதல், பிரதேசச் செயலாளரின் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்துகின்றேன். அவ்வாறாகப் பொய்யான வருமான விபரங்கள் தெரிவுக்கப்பட்டுள்ளன என அறியப்பட்டால். பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

இந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைச் செயற்படுத்தும்போது, ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமானால் அவைபற்றி எனக்குத் தெரியுங்கள்.

**அர்.பி.ஆர். ராஜபக்ஷ**
காணி ஆணையாளர் நாயகம்

**பிரதிகள்**

1. ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக,
2. செயலாளர் - காணி அமைச்சு தயவுடன் தகவலுக்காக,
3. செயலாளர் - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தயவுடன் தகவலுக்காக,
4. செயலாளர் - பொதுநிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்களின் அமைச்சு தயவுடன் தகவலுக்காக,
5. பணிப்பாளர் நாயகம் - இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகார சபை உரிய நடவடிக்கைக்காக,
6. அனைத்து அரசாங்க அதிபர்கள் - தயவுடன் தகவலுக்காக,
7. அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள் - உரிய நடவடிக்கைக்காக

1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 13 மற்றும் 105 ஆம் பிரிவுகளின் பிரகாரம், 1949-09-02 ஆந் திகதிய 10,013 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிக்கையில், ஆளுநர் அவர்களினால் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஏற்ப, காணி ஆணையாளர் நாயகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, காணி ஆணையாளர் நாயகத்தின் 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், குத்தகைப் பணத்தைப் பதிவு அழித்தல் செய்தல்.

2015-01-01 ஆந் திகதிய 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு ஏற்ப, கீழே தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட, நீண்ட காலக் குத்தகைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஏற்றவாறு பதிவு அழித்தல் செய்வதற்கு உரிய குத்தகைப் பணம் மற்றும் அது தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. குத்தகைக்கு எடுப்பவரின் பெயர்
2. குத்தகைக்கு எடுப்பவரின் முகவரி
3. கிராம அலுவலர் பிரிவு
4. குத்தகைக்கு எடுப்பவரின் குடும்பத்தின் வருடாந்த வருமானம்
5. பிரதேசச் செயலாளர் அலுவலகத்தின்/ பிரதிக் காணி ஆணையாளரின் அலுவலகத்தின் குத்தகை விடயக் கோப்பு எண்.
6. மாகாணக் காணி ஆணையாளரின் அலுவலகத்தின் குத்தகை விடயக் கோப்பு எண்
7. காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் குத்தகை விடயக் கோப்பு எண்
8. குத்தகையை அறவிடுவதற்கு அடிப்படையாகக் கொண்டுள்ள திகதி
9. மாண்புமிகு அமைச்சர் அவர்களினால் குத்தகைக்கான அங்கீகாரத்தை வழங்கிய திகதி
10. குத்தகை அறவிட வேண்டிய திகதியிலிருந்து, குத்தகை அங்கீகரிக்கப்பட்ட திகதி வரையிலுமான உரிய குத்தகைப் பணம்

    i. வருடாந்தக் குத்தகைப் பணம்
    ii. ஏற்புடைத்தான வருடங்களின் எண்ணிக்கை
    iii. குறித்துரைக்கப்பட்ட குத்தகைப்பணம்
    iv. தவணைப் பணம்
    v. குறித்துரைக்கப்பட்ட மொத்தக் குத்தகைப் பணம்

11. தற்போது அறவிடப்பட்டுள்ள குத்தகைப் பணம்
12. சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு அழித்தல் செய்வதற்கு விதந்துரைக்கப்பகின்ற குத்தகைப் பணம்
13. சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் எதிரீடு செய்வதற்கு விதந்துரைக்கப்படுகின்ற குத்தகைப் பணம்
14. எதிர் காலத்தில் எதிரீடு செய்வதெனில், எதிரீடு செய்த்தற்கான காலப்பகுதி

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என அத்தாட்டசிப்படுத்துகின்றேன். மேலே உள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய / அறவிடப்பட்டுள்ள ரூபா ......................... குத்தகைப் பணத்தை பதிவு அழித்தல் செய்வதற்கு / எதிர் காலத்தில் எதிரீடு செய்வதற்கு விதந்துரைக்கின்றேன்

திகதி :

..........................................................................................................

பிரதேச செயலாளர்/ பிரதி / உதவிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடைப்பட்ட)

பிரதி : மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடைப்பட்ட)

**இணைப்பு - II**

**உரித்துப்பதிவு செய்யும் பணிக்காக , பகிர்ந்தளிக்கப்பட்ட ஆனால் பூரண உரிமை கையுதிர்த்தல் செய்யப்படாத அரச காணிகளின் விபரங்களை முன்வைத்தல்**

பிரதேசச் செயலாளர் பிரிவு.............................................................................................

| கிராம அலுவலர் பிரிவு | கா.அ.க. அனுமதிப்பத்திரம்/ நீண் காலக் குத்தமுறி/144 ஏ சான்றிதழ் இலக்கம் | அனுமதிப் பத்திரம்/ நீண்காலக் குத்தமுறி/144 ஏ சான்றிதழ் இலக்கம் | காணியின் விஸ்தீரணம் | காணி பெறுநரின் பெயர் | காணி பெறுநரின் முகவரி | பகிர்ந்தளிக்கு முன்பு நில அளவை செய்யப்பட்டதா ஆம் / இல்லை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இணைப்பு - III**

**உரித்துப்பதிவு செய்யும் பணிக்காக , கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகளின் விபரங்களை முன்வைத்தல்**

பிரதேசச் செயலாளர் பிரிவு ..............................................................................

| கிராம அலுவலர் பிரிவு | கா.அ.க. அளிப்புப்பத்திரமா/ அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் அளிப்புப்பத்திரமா/ ஆதனவளிப்புச் சாதனமா | அளிப்புப்பத்தர/ ஆதனவளிப்புச் சாதனத்தின் இலக்கம் | காணியின் விஸ்திர இல | காணி பெறுநரின் பெயர் | காணி பெறுநரின் முகவரி | கையுதிர்த்தல் செய்யவதற்கு முன்பு, நில அளவை செய்யப்பட்டதா ஆம்/ இல்லை | அனுமதிப் பத்திரம்/ நீண்காலக் குத்தகை முறி பெற்றுக் கொண்ட போது உரித்து பதிவு செய்யப்பட்டதா ஆம்/ இல்லை | அனுமதிப் பத்திரம்/நீண்காலக் குத்தகைமுறி பதிவு செய்யப்பட்டிருந்தால் அனுமதிப்பத்திரம் குத்தகை முறியில் இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
"මිහිකත මැදුර", ඉඩම් මහලේකම් කාර්යාලය, 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
"மிஹிகதமெதுர", காணிச் செயலகம், 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
"Mihikatha Medura", Land Secretariat, 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 4/1/சுற்றறிக்கை
ඔබේ අංකය / உமது இ இல / YOUR NO:
දිනය / திகதி / DATE: 2015.04.16

சுற்றறிக்கை இலக்கம்:-2015/01(1) இணைப்பு - 02

அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள் மற்றும்
பிரதி/உதவிக்காணி ஆணையாளர்கள்(மாகாணங்களுக்கிடைப்பட்ட)

**2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் முன்மொழிவுகளைச் செயற்படுத்துதல்.**
**நகரப்பகுதிகளில் வதிவிட நோக்கத்திற்காகக் காணிகளை வழங்கும்போது நிவாரணம் பெற்றுக்கொடுத்தல்**

மேலே உள்ள தலைப்பின் கீழ் விடுக்கப்பட்ட என்னுடைய 2015/01/01ஆந் திகதி 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

02. நகரப்பகுதிகளில் வதிவிட நோக்கத்திற்காக நீண்ட காலக் குத்தகை அடிப்படையின் கீழ்,காணித்துண்டு ஒன்றை வழங்குவதற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தப்போதிலும் இதுவரையிலும் நீண்டகாலக் குத்தகை முறி வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் குறித்தும் என்னுடைய 2015-01-01ஆந் திகதி 2015/01ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள புதிய குத்தகை விகிதங்கள் ஏற்புடைத்தனவையாக ஆக்கிக்கொள்ள முடியும். அதற்கு அமைவாக,குடும்பத்தின் வருடாந்த வருமானம் 600,000/=ரூபாவுக்குக் குறைவாக உள்ள நபர்கள் குறித்து உரிய வருமானக்குழுவிற்கு உரிய குத்தகை நிவாரனத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.இதற்கென,குத்தகைக்காரரின் குடும்ப வருமானம் தொடர்பாகப் பிரதேசச் செயலாளரின் சான்றிதழுடன்,ஏற்புடைத்த வருமானக்குழு மற்றும் இந்தக் குழுவிற்கு உரிய குத்தகை விகிதத்தை விதப்புரை செய்து,ஏற்புடைத்தவாறு பிரதேசச் செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர் எனக்குச் சமர்பித்து,அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.இதற்காக,இந்த திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 1 ஐ உபயோகிங்கள்.பின்பு,திருத்தம் செய்து வழங்கப்பட்ட குத்தகைப்பணத்தைக் கணக்கிட்டு,ஏற்றவாறு மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் எனக்கும் பிரதியுடன் குத்தகைக்காரருக்குத் தெரிவிக்க வெண்டும்.குத்தகைக்காரர் நடைமுறையில் உள்ள பொதுவான குத்தகை விகிதத்தின்கீழ் ஏற்கனவே குத்தகைப் பணம் செலுத்தி இருந்தால்,திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைக்கு ஏற்றவாறு கணக்கிடும்போது செலுத்தப்பட்டிருக்கும் மேலதிகக் குத்தகைப் பணத்தை,எதிர்வரும் வருடங்களில் அறவிடப்பட்டிருக்கம் குத்தகைப் பணத்திற்கு எதிரீடு செய்தல் வேண்டும்.அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட விகிதத்தை குறித்த மாகாணக் காணி ஆணையாளர் மற்றம் எனக்குக் பிரதியுடன் குத்தகைக்காரருக்குத் தெரிவித்தல் வேண்டும்.இவ்வாறு குத்தகைப்பணம் எதிரீடு செய்தல் சம்பந்தமாக இந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப கணக்குப்பதிவுகளைச் செய்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்

දුරකථනය / தொலைபேசி / Telephone: 011-2797400
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2864051
වෙබ් ලිපිනය / இணையம் / Web Address: www.landcommdept.gov.
ඊමේල් / ஈ-மெயில் / E-mail: landcom@landcommdept.gov.lk

03. மேலும்,2015/01ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 06ஆவது பந்தியில் உள்ள சில விடயங்கள் திருத்தப்பட வேண்டுமாதலால்,அந்தப் பந்தியை அகற்றிக்கொண்டு, அதற்குப்பதிலாக கீழே தரப்படுகின்ற பந்தி பதிலீடு செய்யப்படுகின்றது.

“இவ்வாறு நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தை வெட்டி நீக்குதல் செய்வதற்கு ஏற்றவாறாகக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியான பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.நிலுவையில் உள்ள கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவுப்பக்கத்தில் உள்ள நிலுவையை என்னடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு வெட்டி நீக்குதல் செய்யும் போது,குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதியுடன் வெட்டி நீக்கப்பட்டது என நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதிவு செய்தல் வேண்டும்.செலுத்தப்பட்ட நிலுவைப்பணம்,எதிர்வருகின்ற வருடங்களில் கிடைக்கப்பெற வேண்டிய குத்தகை வருமானத்திற்கு எதிரீடு செய்யும் போது,அவ்வாறு எதிரீடு செய்கின்ற குத்தகைப் பணத்தொகையை நிலுவையில் உள்ள வெட்டி நீக்குதல்/ எதிரீடு செய்தல் தொடர்பான அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதியுடன்,குத்தகைப்பேரேட்டில் குறித்த குத்தகை முறிப் பக்கத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது,அவ்வாறு நிலுவைக் குத்தகைப்பணத்தை வெட்டி நீக்கப்பட்ட குத்தகை முறி தொடர்பாக வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணத்தைக்(குத்தகைத் தவணைப்பணம்)கருத்தில் கொள்ளுதல் வெண்டும். எதிரீடு செய்யும்போது,குறித்த வருடத்திற்கான எதிரீடு செய்யப்பட்ட பெறுமதியை குறித்த நடப்பு வருடத்திற்கான கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதிவு செய்தல் வேண்டும்.இவ்வாறு வரவுப்பக்கத்தில் பதிவு செய்யும் போது,”குறித்த அங்கீகாரக் கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதிக்கு அமைய எதிரீடு செய்தல்”என வரவுப்பக்கத்தில் விபரமாகக் குறிப்பிடதல் வேண்டும்

04. இது தொடர்பாக ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டால்,அதற்காக மிக வருந்துகிறேன்.

ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ,
காணி ஆணையாளர் நாயகம்

**பிரதிகள்:**

01.ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக
02.செயலாளர்- காணி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
03.செயலாளர்- நிதி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
04.செயலாளர்- உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சு -தயவுடன் தகவலுக்காக
05.பணிப்பாளர் நாயகம்-இலங்கை மஹவெலி அபிவிருத்தி அதிகார சபை- தயவுடன் தகவலுக்காக
06.அனைத்து மாவட்டச் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக
07.அனைத்து மாகாணக் காணி ஆணையாளர் -உரிய நடவடிக்கைகளுக்காக

இணைப்பு 1

<u>நகரப் பகுதிகளில் வதிவிட நோக்கத்திற்காக,2015-01-01ஆந் திகதி முன்னர்,காணி விடயத்திற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சரினால்,நீண்ட காலக் குத்தகையில் பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட காணிகள் சம்பந்தமாகக் காணி ஆணையாளர் நாயகத்தின் 2015/01ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம்,குத்தகைப் பணத்தை திருத்தி அமைப்பதற்கான அங்கீகாரத்தை கோருகின்ற விண்ணப்பம்</u>

01.குத்தகைக்காரரின் பெயர் :

02.குத்தகைக்காரரின் முகவரி :

03.குத்தகைக்காரரின் வருடாந்த வருமானம் :

04.பிரதேசச் செயலாளர் அலுவலகம்/பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகக் குத்தகைக் கோப்பு இலக்கம் :

05.மாகாணக் காணி ஆணையாளர் அலுவலகக் குத்தகைக் கோப்பு இலக்கம் :

06. காணி ஆணையாளர் நாயகத்திணைக்களத்தின் குத்தகைக் கோப்பு இலக்கம் :

07.மாண்புமிகு அமைச்சரினால் குத்தகை அங்கீகரிக்கப்பட்ட திகதி :

08.வழங்கப்பட்டள்ள அங்கீகாரத்திற்கு ஏற்ப,குறித்துரைக்கப்பட்டுள்ள வருடாந்தக் குத்தகைத் தவணைப்பணம் :

09.2015/01ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய வருமானக்குழு மற்றும் குத்தகை நூற்றுவீதம் :

10.விதப்புரை செய்யப்படகின்ற திருத்திய வருடாந்த குத்தகைத் தவணைப்பணம் :

11.தற்போது அறவிடப்பட்டுள்ள குத்தகைப் பணம் :

12.எதிர்காலத்தில் எதிரீடு செய்ய வேண்டிய(மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள)குத்தகைப் பணம் :

மேலே தரப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை என உறுதி செய்கின்றேன்.குத்தகைக்காரரின் வருமானம் சம்பந்தப்பட்ட சான்றிதழ் இத்தடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவாறு குத்தகைப் பணத்தை திருத்தி அமைத்தல்/மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள குத்தகைப் பணத்தை எதிர்வரும் வருடங்கள் தொடர்பாக எதிரீடு செய்தல் பொருத்தமாகும் என விதப்புரை செய்கின்றேன்.

---------------------------------------------------------------------------------------

பிரதேசச் செயலாளர்/பிரதி/உதவிக் காணி ஆணையாளர்

---------------------------------------------------------------------------------------

பிரதி : மாகாணக் காணி ஆணையாளர்.

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT

"මිහිකත මැදුර", ඉඩම් මහලේකම් කාර්යාලය, 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
"மிஹிகதமெதுர", காணிச் செயலகம், 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
"Mihikatha Medura", Land Secretariat, 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 4/1/சுற்றறிக்கை
ඔබේ අංකය / உமது இ இல / YOUR NO
දිනය / திகதி / DATE: 2016.02. 19

சுற்றறிக்கை இலக்கம் : 2015/01 (II)

அனைத்துப் பிதேசச் செயலாளர்கள்,
பிரதிக்/உதவிக் காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)

இணைப்பு 03

**2015ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்டத்தின் முன்மொழிதல்களைச் செயற்படுத்துதல் நகரப்பிரதேசங்களில் வதிவிடத்திற்குக் காணிகள் வழங்கும்போது நிவாரணம்பெற்றுக்கொடுத்தல்.**

மேலே உள்ள தலைப்பினைக்கொண்ட எனது 2015.01.01 ஆம் திகதியில் சம இலக்க 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை தொடர்பாக.

02.அதில் 04 ஆவது பந்தி,கீழே தரப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது எனத்தயவுடன் அறியத்தருவதுடன்,இதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதற்குக் கவனத்தில் கொள்ளுமாறு மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்ட திகதியான 2015.01.01 ஆந் திகதி வரையிலும் இவ்வாறான காணிகள் தொடர்பாக நிலுவையில் உள்ள குத்தகைப்பணம் அறவிடப்படமாட்டாது எனவும் தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள். இங்கே குறிப்பிடப்பட்ட தவணைப்பணமும் வெட்டி அகற்றப்படும் எனவும் கருத்தில்கொள்ளுங்கள்.ஆனால்,அத்துமீறல் செய்யப்பட்டவை என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட காணிகள் தொடர்பாக அறவிடப்படுகின்ற தண்டப்பணம் வெட்டி அகற்றப்படமாட்டாது என்பதைக் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.இந்தச் சுற்றறிக்கை செயற்படுத்தப்படுகின்ற திகதி வரையிலும்,மாண்புமிகு அமைச்சு அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள,ஆனால் நீண்டகாலக்குத்தகை முறி வழங்கப்பட்டிருக்காத இவ்வாறான காணிகளுக்கும் நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் அறவிடப்படமாட்டாது என்ற நிவாரணம் ஏற்புடைத்ததாகும்.இருப்பினும் அப்போது வரையிலும்,அவ்வாறான நிலுவையில் உள்ள குத்கைப்பணம் செலுத்தப்பட்டிருந்தால்,குறித்த பணம் எதிர்வரும் காலப்பகுதியில் அறவிடப்பட்டிருக்கும் குத்தகைப் பணத்திற்கு எதிரீடு செய்ய முடியும்.இந்தச் சுற்றறிக்கை செயற்படுத்தப்படுகின்ற திகதிக்குப் பின்பு,நபர்கள் தெரிவுசெய்யப்படுகின்ற காணிகள் தொடர்பாக இந்த நிலுவையில் உள்ள குத்தகைப் பணம் அறவிடப்படாத நிவாரணச் சலுகை ஏற்புடைத்ததாகமாட்டாது எனக் கருத்தில்கொள்ளுதல் வேண்டும்."

ஆர்.பி.ஆர்.ராஜபக்ஸ,
காணி ஆணையாளர் நாயகம்.

பிரதிகள் :-

1.சனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக
2.செயலாளர்,காணி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
3.செயலாளர்,நிதி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
4.செயலாளர்,உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
5.பணிப்பாளர் நாயகம்,இலங்கை மஹவெலி அபிவிருத்தி அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக
6.அனைத்து அரச அதிபர்கள் - தயவுடன் தகவலுக்காக
7.அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள் - உரிய நடவடிக்கைக்காக

දුරකථනය / தொலைபேசி / Telephone: 011-2797400
ෆැක්ස් / பெக்ஸ்: 011-2864051
වෙබ් ලිපිනය / இணையம்: www.landcommdept.gov
ඊමේල් / ஈ-மெயில்: landcom@landcommdept.gov.lk

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය,
නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 3/7/பிம்சவிய/சுற்றறிக்கை
ඔබේ අංකය / உமது இல / YOUR NO:
දිනය / திகதி: 2015.03. 27

2015 / 02,
பிம்சவிய வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துகின்ற,
அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள் மற்றும்,
மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் / உதவிக்,
காணி ஆணையாளர்களுக்கும்.

இணைப்பு - 04

**உரித்து பதிவுசெய்தல் சட்டத்திகீழ் அரச காணிகளைப் பதிவு செய்தல் மற்றும் உரித்துச் சான்றிதழ்கள் வழங்குதல்**

I. **அரச காணிகளின் உரித்து நிர்ணயம் செய்கின்ற பணியில் உதவுதல் அரச காணிகளின் உரித்தை நிர்ணயம் செய்கின்ற பணி,**

உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பிரதேச்செயலாளர்கள்/ மாகாண காணி ஆணையாளர்கள் / பிரதி காணி ஆணையாளர்கள்/ உதவி காணி ஆணையாளர்களின் ஆகியோரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குறித்த காணிகள் உரித்து நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர், உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் , அரச வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரம் செய்தல், உரித்தை பதிவு செய்வதற்காக காணி பதிவாளருக்கு அனுப்புதல் ஆகிய பணிகள், பிரதேச மட்டத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் பிரதி/ உதவி உரித்து நிர்ணய ஆணையாளர்களின் உதவியுடன் உரித்து நிர்ணயம் செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அரச காணிகள் தொடர்பாக ஏற்புடைத்தான சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ், காணிகளை கையுதிர்த்தல் செய்தல், கையுதிர்த்தல் செய்யப்பட்டடுள்ள காணிகள்தொடர்புடைய பிரச்சினைகளை நிர்ணயம் செய்தல், கையுதிர்தல் செய்யப்பட்டிருக்காத காணிகள் தொடர்பான தகவல்களை பேணிக் கொள்ளுதல் ஆகிய பணிகள், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் தலைமையில், பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்படும்.

காணிகளை நில அளவை செய்து துண்டு பிரிக்கும் வரைப்படங்களை தயாரிப்பதற்கு முன்னர், பகிர்ந்தளிக்க படக் கூடிய அரச வெற்று காணிகள் மற்றும் அத்துமீறல் செய்து நபர்கள் ஆட்சிசெய்து கொண்டுடிருக்கின்ற காணிகள் ஆகியவற்றை என்னுடைய 2008/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணி கச்சேரிகள் நடாத்தி அனுமதி பத்திரங்கள்/ நீண்ட கால குத்தகை முறிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனில் ஒரே காணி இரண்டு முறைகள் நில அளவை செய்யப்பட மாட்டாது என்பதுடன், உரித்து பதிவு செய்கின்ற பணிகளில் அதிக முனேற்றத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

කාර්යාලය / பொது / General: 0112-797400
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0112-864051
ඊමේල් / ஈ-மெயில் / E-mail: info@landcom.gov.lk

இருப்பினும் இவ்வாறான காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னர், ஏற்கனவே துண்டுபிரிக்கும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டிருந்தால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்பு, மீண்டும் துண்டுபரிக்கும் வரைப்படங்களில் திருத்தங்கள் செய்யவேண்டி ஏற்படும்.

காணி நிள அளவை செய்யப்பட்டு துண்டுகளாகப் பிரிக்கப்படமல், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கிழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள காணுகள் பின்பு நில அளவை செய்யப்பட்டுத் துண்டு பிரிக்கும் வரைபடங்கள் தயாரிக்கும்போது, அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் விஸ்திரணம், மற்றும் நிள அளவை செய்யும் போது கண்டுகொண்டுள்ள ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணம் ஆகியவற்றில் வேறுபாடுகள் இருக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க்கண்டவாறு செயற்படுதல் வேண்டும்.

அ). ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணம், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்கு அதிகமாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில்

i. அவ்வாறு அதிகமாக உள்ள விஸ்தீரணம், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தின் 10% க்கு அதிகமாக இல்லாவிட்டால், மற்றும் அது 10 பேர்சஸ்களுக்கு அதிகமாக இல்லாத போது ஆட்சிசெய்யப்படுகின்ற விஸ்தீரணத்திற்கே நில அளவை செய்து துண்டுப்பிரிக்கும் வரைபடம் தாயாரிக்கப்பட வேண்டும்.

ii. அவ்வாறு அதிகமாக இருக்கின்ற விஸ்தீரணம் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரத்தின் 10%க்கு அதிகமாக இல்லாவிட்டால், மற்றும் அது 10 பேர்சஸ்களுக்கு அதிகமாக உள்ள போது, அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பிட்டுள்ள விஸ்தீரத்திற்குத் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்க வேண்டும். என்பதுடன் அதிகமாக உள்ள விஸ்தீரணத்தை வேறான ஒரு காணி துண்டாக நில அளவை செய்தல் வேண்டும்.

iii. அவ்வாறு அதிகமாக இருக்கின்ற விஸ்தீரணம் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தின் 10% க்கு அதிகமாக இருக்கிமெனில் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்கு மாத்திரம் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்க வேண்டும். என்பதுடன் அதிகமாக உள்ள விஸ்தீரணத்தை வேறான ஒரு காணி துண்டாக நில அளவை செய்தல் வேண்டும். இருப்பினும் , அவ்வாறு அதிமாக இருக்கின்ற விஸ்தீரணம், குறித்த உள்ளூர் ஆட்சி பிரதேசத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த பிரிவிடல் மட்டத்திற்குக் குறைவாக இருந்தால், ஆட்சி செய்கின்ற மொத்த விஸ்தீரணத்திற்கும் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும்.

**ஆ)** ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணம், அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்குக் குறைவாக உள்ள சந்தர்ப்பங்களில்:

i. அவ்வாறு குறைவாக இருக்கிற விஸ்தீரணம் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தின் 10%க்கு அதிகமாக இல்லாதபோது, ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரத்திற்குத் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்க வேண்டும். இங்கே விஸ்தீரணத்தை வேறான ஒரு காணி துண்டாக நில அளவை செய்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பிட்டுள்ள விஸ்தீரணம் திருத்தப்பட வேண்டியதில்லை.

ii. அவ்வாறு குறைவாக இருக்கின்ற விஸ்தீரணம், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தின் 10% க்கு அதிகமாக உள்ளபோது, ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணத்திற்குத் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். என்பதுடன், பிரதேசச் செயலாளர்/ பிரதிக்/உதவிக் காணியாளர் (மாகாணங்களுக் கிடைப்பட்ட) ஏற்புடைத்தவாறு, அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணம், ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரத்திற்குச் சமமாகும். வண்ணம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்பங்களில், அவ்வாறு திருத்தம் செய்வதற்கு இத்தால் தத்துவம் வழங்கப்படுகின்றது.

இ) மேலே 'அ' மற்றும் 'ஆ' கீழ் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், நீர்ப்பான வசதிகளைக் கொண்டுள்ள வயற்காணிகள் தொடர்பாகக் கருதப்படுகின்ற போது,கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு செயப்படுத்தப்பட வேண்டுமென கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

i. ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணம், அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்குக் அதிகமாக இருகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறான அதிகமாகவுள்ள விஸ்திரணம் 02 ரூட்களுக்குக் குறைவாக உள்ள போது, ஆட்சி செய்யப்படுகின்ற விஸ்தீரணத்திற்குத் துண்டுப் பிரிக்கும் வரைபடம் தாயாரிக்கப்பட வேண்டும்.

ii. ஆட்சி செய்யப்படுகின்ற காணியின் விஸ்தீரணம், அனுமதிப் பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்திற்கு அதிமாக உள்ள சந்தர்ப்பங்களில், அவ்வாறான அதிகமாகவுள்ள விஸ்திரணம் 02 ரூட்கள் இல்லது அதற்கு அதிகப்படுகின்ற போது, அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பிட்டுள்ள விஸ்தீரணத்திற்குத் துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு அதிகமாக இருக்கின்ற காணிக் துண்டை வேறான ஒரு காணித் துண்டாகக் கருதிக் கொண்டு, திடமான நீரப்பாசன வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவாறு நில அளவை செய்தல் வெண்டும்.

காணியை நில அளவை செய்து, துண்டு பிரிக்கும் வரைபடம் தயாரிக்கப்பட்ட பின்பு, காணிகளைப் பங்கிட்டு வழங்கி அனுமதிப் பத்திரங்கள் வழங்கவேண்டியுள்ள சந்தர்ப்பங்களில், அதுவரையிலும் அத்துமீறல்செய்து ஆட்சி செய்யப்படுகின்ற மற்றும் பெற்றக் காணிகளைச் சுற்றி நில அளவை சௌது ஒரு காணித்துண்டாகத் துண்டு பிரிக்கும் வரை படங்களில் காட்டப்படலாம். அவ்வாற்றான சந்தர்ப்பங்களில், அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்பு, அனுமதிப்பத்திரக் காணிகளுக்கான துண்டு பிரிக்கும் வரைபடங்கள் திருத்தப்படுவதற்காக நில அளவை வேண்டுகோள்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கிழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்ப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக அளிப்புப் பத்திரங்களைத் தயாரிக்கும் போது அவற்றிற்காக துண்டு பிரிக்கும் வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள வரி வரைப்படங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் விஸ்திரணம் மற்றும் அக்காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணம் ஆகியவற்றிகிடையே வேறுபாடுகள் இருக்குமெனில், மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு சமமான அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ள உன்னுடைய 2013-10-31 ஆம் திகதிய 2013/02 ஆம் இலக்கச் சுற்ற றிக்கை அறிவுறுத்தல்களை ஏற்புடைத்தவையாகக் கொள்ளுதல் வேண்டும்.

02. அரச காணிகளை வகைப்படுத்துதல் மற்றும் உரித்துப்பதிவு செய்தல்

உரித்துப் பதிவுகளை மேற்கொள்ளும் பணிகளுக்காக அரச காணிகள் பின்வருகின்றவாறு வகைப்படுத்தல் செய்யப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

i. கையுதிர்த்தல் செய்யப்படாத அரச காணிகள்

அ.) ஒதுக்கப்பட்டுள்ள காணிகள்,வீதிகள், ஆறுகள், கால்வாய்கள், அருவிகள், ஏரிகள், குணங்கள்,நீர் தொட்டிகள், களப்புக்கள், கடற்கரைகள் முதலியன

ஆ.) அரச நிறுவனங்களின் நிருவாகத்தின் கீழ் உள்ள காடுகள், பூங்காக்கள் முதலுயன

இ.) பிரதேசச் செயலாளர்களின் பொறுப்பில் உள்ள உபயோகிக்கப்படாத அரச காணிகள்

ஈ.) அரச திணைக்களம் மற்றும் அமைச்சுக்களுக்காக பயன்படுத்தப்படும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அரச காணிகள்

ii. கையுதிர்த்தல் செய்யப்பட்டபோதிலும் அரசின் சொத்துரிமையின் கீழ் உள்ள காணிகள்

அ. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் ஊடாகக் கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகள்

ஆ. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் ஊடாகக் குத்தகையில் வழங்கப்பட்டுள்ள அரச காணிகள்

இ. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் குத்தகை வழங்கப்பட்டுள்ள காணிகள்

ஈ. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உடமையாக்கல் கட்டளைகள் மூலமாகக் கையுதிரித்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகள் (உள்ளூர் ஆட்சி மன்றங்கள் மற்றும் முப்படைகள்)

(உ) காணிகள் உடைமை 1 கொள்ளல சட்டத்தின் கீழ் 44 அ பிரிவின் கீழ் சான்றிதழ் ஊடாகக் கையுதிர்த்தல் செய்யப்பட்ட அரச காணிகள்

(ஊ) வேறு ஏதேனும் சட்டபூர்வமான ஆவணங்கள் மூலமாகப் பூரணமான, உரிமை ஏற்படாதவாறு கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகள்

iii. சொத்துரிமையைக் கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணிகள்

அ.) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப்பத்திரம் ஊடாகச் கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணி

ஆ.) அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப்பத்திரம் ஊடாகச் கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள அரச காணி

இ.) காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆதனவளிப்புச் சாதனங்கள் மூலம் கையுதிர்த்தல் செய்யப்பட்ட அரச காணிகள்

மேலே ஒவ்வொரு வகையிலுமான வாணிகள் தொடர்பான விபரங்களை உரித்துப்பத்திவு செய்கின்ற பணிக்காக ஏற்புடைத்தான காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களுக்கு தாங்கள் அனுப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதேசச் செயலகத்திற்கும் ஏற்புடைத்த காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களின் பட்டியல் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது. பிரதேசச் செயலாளர் அல்லது உதவிப் பிரதேசச் செயலாளர், காணி உரித்து நிர்ணய பிரதி ஆணையாளராக அல்லது உதவி ஆணையாளராக குறித்த ஒரு பிரதேசத்திற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தால், இங்கே தரப்பட்டுள்ள காணி உரித்து நிர்ணயம் செய்யும் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த பிரதேசச் செயலாளர்/ உதவிப் பிரதேசச் செயலாளரினால் மேற்கொள்ளப்படவேண்டும். என்பதைத் தயவாகக் கருத்தில் கொள்ளுங்கள்.

மேலே இலக்கம் 1 அ தொடக்கம் 1 இ வரையிலுமான வகையைச் சேர்ந்த காணிகளை உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது " சொத்துரிமை அரசுக்குரியது" எனப்பதிவுசெய்யப்படும். இருப்பினும் உபயோகித்தல் தொடர்பான விபரங்களும் பதிவு செய்யப்படும். இவ்வாறான காணிகளைப் பதிவு செய்கின்ற பணிகள் தொடர்பாக , உரித்து நிர்ணயத் திணைக்களத்தினால் துண்டு பிரிக்கும் வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலே இலக்கம் "II அ" இருந்து II ஊ " வரையிலுமான வகையைச் சேர்ந்த அரச காணிகள், பல்வேறு முறைகளில் தற்காலிகமான உரிமையின் கீழ் கையுதிர்த்தல் செய்யப்பட்டிருப்பதால், உரிமையை "சொத்துரிமை அரசுக்குரியது" எனவும் காணி பெறுநர்களின் தற்காலிக உரிமையின் தன்மைக்கு ஏற்றவாறு இந்த விபரங்களும் உள்ளடங்கும் வண்ணம் உரித்து பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். காணி உரித்து நிர்ணயம் செய்யும் பிரதேச அலுவலகங்களுக்கு, இவ்வாறான காணிகள் தொடர்பான விபரங்களை அனுப்புவதற்கு, இணைப்பு II இல் உள்ள படிவத்தை உபயோகியுங்கள்.

மேலே இலக்கம் III அ தொடக்கம் III இ " வரையிலுமான வகையைச் சேர்ந்த அரச காணிகள், அரசினால் நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனைகள் இல்லாமல் உரிமையைக் கையுதிர்த்தல் செய்துள்ள காரணத்தால், குறித்த காணி பெறுநர்களின் உரிமை காணி உரித்து பதவி செய்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படும், இது தொடர்பாக, உரித்து பதவி செய்தல் சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப வேறான உலருத்துச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது என்பதுடன் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரம் உரித்துச் சான்றிதழாக க் கருதப்படும். குறித்த சட்டத்தின் கீழ், அளிப்புப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் இந்த உரித்துச் சான்றிதழ் பத்திரத்திற்கும் தொடர்ந்து ஏற்புடைத்தனவையாக இருக்கும் இவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட தகவல்களை காலணி உரித்து நிர்ணயம் செய்கின்ற பிரதேச அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கு இணைப்பு III இல் தரப்பட்டுள்ள படிவத்தை உபயோகியுங்கள் இவ்வாறான காணிகள் தொடர்பான விபரங்களைக் காணி உரித்து நிர்யணம் செய்யும் திணைக்களத்திற்கு அனுப்புவதனால், குறித்த திணைக்களத்தின் நிர்ணயம் செய்கின்ற பணிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள காணி மற்றும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நீண்ட காலக் குத்தகை முறியைக் கொண்டுள்ள காணி, உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள போது பின்னர், குறித்த சட்டங்களின் கீழ் அளிப்புப்பத்திரங்கள் வழங்கும் போது, அரசுக்கான சொத்துரிமை அளிப்புப் பெறுநரின் உரிமையாக மாற்றப்படவேண்டும். இதன் பொருட்டு அளிப்பு பத்திரம் வழங்கப் பட்டுள்ளமைக்கான விபரங்கள் உரித்து பதிவு செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட வேண்டும். இந்த விபரங்களை இணைப்பு III மூலமாக அனுப்பலாம்.

அரச காணிகள் தொடர்பாக, உரித்துப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற காணித்துண்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக, மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை அனுசரித்துக் கொண்டு, தங்களுடைய உதவி மற்றும் முதன்மையான பங்களிப்பை வழங்கிச் செயற்படுமாறு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நோக்கத்துடன் ஏற்புடைத்தவாறான காணி உரித்து நிர்ணயம் செய்யும் பிரதேச அலுவலகப் பிரதி / உதவி ஆணையாளர்களுடன் நல்ல ஒருங்கினைப்பை ஏற்படுத்திக் கொள்ளுமாறும் தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர்.பி. ஆர். ராஜபக்ஷ

காணி ஆணையாளர் நாயகம்

பிரதிகள்

01. செயலாளர் காணி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
02. ஆணையாளர் நாயகம், காணி உரித்து நிர்ணய திணைக்களம் அனைத்துப் பிரதேச அலுவலகங்களைச் சேர்ந்த பிரதி / உதவி காணி உரித்து நிர்ணய ஆணையாளர்களுக்கு தெரிவிப்பதற்காக
03. நில அளவையாளர் நாயகம் - திணைக்கள அலுவலர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக
04. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் - தயவுடன் தகவலுக்காக
05. அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள் - பிரதேசச் செயலாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்காக
06. காணி ஆணையாளர்கள் (அபிவிருத்தி) பிம்சவிய ஒருங்கிணைப்பாளர்: உரிய நடவடிக்கைக்காக
07. பதிவாளர் நாயகம் (உரித்து): உதவிமாவட்டப் பதிவாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக

## பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கு ஏற்படைத்த காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள்

| தொடர் இல | பிரதேசச் செயலாளர் பிரிவு | காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் |
|---|---|---|
| 01 | திஸ்ஸமஹாராம | |
| 02 | லுணுகம்வெஹெர | |
| 03 | ஹம்பந்தொட்ட | திஸ்ஸமஹாராம |
| 04 | வனாதவில்லு | |
| 05 | கல்பிட்டி | புத்தளம் |
| 06 | முந்தல் | |
| 07 | புத்தளம் | |
| 08 | தலாவ | |
| 09 | ராஜாங்கனய | |
| 10 | நகெனஹிர நுவரகம் பலாத | நகெனஹிர நுவரகம் பலாத |
| 11 | மத்தியம நுவரகம் பலாத | |
| 12 | தமன்கடுவ | |
| 13 | மெதிரிகிரிய | மெதிரிகிரிய |
| 14 | லங்காபுர | |
| 15 | ஹிங்குரக் கொட | ஹிங்குரக் கொட |
| 16 | நுவரஎலிய | கொத்மலே |
| 17 | கலேவெல | கலேவெல |
| 18 | தொளுவ | தொளுவ |
| 19 | உடபலாத | கம்போல |
| 20 | தம்புள்ள | தம்புள்ள |
| 21 | பல்லேபொல | பல்லேபொல |
| 22 | கராச்சி | |
| 23 | வவுனியா தெற்கு | |
| 24 | வவுனியா வடக்கு | நல்லூர் |
| 25 | கரையோரப்பற்று | |
| 26 | முசலி | |
| 27 | சியம்பளாண்டுவ | |
| 28 | வெள்ளவாய | சியம்பளாண்டுவ |
| 29 | மொணராகல | |
| 30 | ரிதிமாலியத்த | ரிதிமாலியத்த |
| 31 | மஹியங்கனய | மஹியங்கனய |
| 32 | இங்கிரிய | இல்லை |
| 33 | கடான | கடான |
| 34 | மீரிகம | மீரிகம |
| 35 | நிர்கொழும்பு | கடான |
| 36 | வத்தள | கம்பஹ |
| 37 | மதுகம | இல்லை |
| 38 | இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 39 | குருவிட்ட | குருவிட்ட |
| 40 | பலங்கொட | பலங்கொட |
| 41 | அம்பாரை | |
| 42 | தம்பலகம்ம | |
| 43 | கந்தளாய் | அண்மித்த |
| 44 | திருகோணமலை பட்டணம் மற்றும் சூழல் | அலுவலகம் இல்லை |
| 45 | மண்முனை வடக்கு | |

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය,
නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல: 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011-2864051
ඊමේල් / ஈ-மெயில் / E-mail - info@landcommdept.gov.lk

මගේ අංකය / எனது இல / MY NO - 1/1/ஷாப்ர/பொது/பிரதிபத்தி தீரண
ඔබේ අංකය / உமது இல / YOUR NO -
දිනය / திகதி / DATE - 2015.08. 28

சுற்றறிக்கை இலக்கம் 2015/05

இணைப்பு - 06

அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள்,
அனைத்து பிரதேசச் செயலாளர்கள்,
அனைத்துப் பிரதிக்/உதவிக்காணி ஆணையாளர்கள் (மாகாணகங்களுக்கிடைப்பட்ட)

**காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், காணித்துண்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்ற வருமான மட்டத்தைத் திருத்தி அமைத்தல்.**

1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ்,மேன்மைதகு ஜனாதிபதி அவர்களினால், இலங்கைப் பிரசை ஒருவருக்கு, ஆதனவளிப்பு சாதனம் ஊடாக காணித்துண்டொன்றைப் பராதீனம் செய்யும்போது எதிர்பார்த்த காணியை பெற்றுக்கொள்பவரின் குடும்பத்தின் வருமான மட்டத்தைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இதன் பிரகாரம், என்னுடைய 273 ஆம் இலக்கப் பணிப்புரை மற்றும் அது சார்ந்த திருத்திய சுற்றறிக்கை மூலமாகத் தற்போது விதிக்கப்பட்டுள்ள குடும்பத்தின் உச்ச வருமானம் மட்டத்தை நிகழ்கால நிலைமைகளுக்குப் பொருந்துகின்றவாறு திருத்தி அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இந்த சுற்றறிக்கையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வண்ணம், இந்த சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்குக் காணி பெற்றுக் கொள்பவரின் குடும்பத்தின் வருமானம் மட்டம் மாதமொன்றுக்கு ரூபாய் 13,000/= க்கு மேற்படக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

மேலும், இவ்வாறான காணித்துண்டொன்றைப் பெற்றுக் கொள்ளுகின்ற காணி பெறுனர் ஒருவர், குறித்த காணியை இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, மூன்றாம் திறந்தவருக்கு பாரதீனம செய்யும் போது, காணியைப் பெற்றுக்காள்கின்றவரின் குடும்பத்தின் மாத வருமானம் 12,000/= ரூபாவுக்கு மேற்படாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும். என்னுடைய 276 ஆம் இலக்க பணிப்புரையும் இதற்கேற்ப திருத்தப்படுகின்றது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

இந்த சுற்றறிக்கை கிடைத்தது பற்றித் தயவுசெய்து அறிவியுங்கள்

ஆர்.பி.ஆர். ராஜபக்ஷ
காணி ஆணையாளர் நாயகம்

பிரதிகள்

01. ஜனாதிபதியின் செயலாளர் – தயவுடன் தகவலுக்காக
02. செயலாளர் காணி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
03. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் - தயவுடன் தகவலுக்காக

කාර්යාලය / பொது - 011-2797400
ආයතන / நிர்வாகம்
ගිණුම් / கணக்கு
ඉඩම් / காணி
සංවර්ධන / அபிவிருத்தி

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය,
නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 3/சங்/1/ பிரதிபத்தி

ඔබේ අංකය / உமது இல / YOUR NO:

දිනය / திகதி / DATE: 2015.12.23

**சுற்றறிக்கை இலக்கம் 2015/06,**

இணைப்பு - 07

அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள்,
பிரதிக் / உதவிக் காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடைப்பட்ட,)

**<u>காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், கொள்விலையை அறவிட்டுக்கொண்டு அனுமதிப் பத்திரத்தை வழங்கும்போது, காணியைப் பெறுமதி மதிப்பீடு செய்தல்.</u>**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணிக் கச்சேரி நடத்தி கொள்விலையை அறவிடும் நிபந்தனைக்கு உட்பட்டு, அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ள நபர்களுக்கு, அவ்வாறு அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போது, குறித்த காணித்துண்டு தொடர்பாக அறவிடவேண்டிய கொள்விலையைத் தீர்மானிக்கும் பொருட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணித்துண்டை பெறுமதி மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும். இருப்பினும், பெறுமதி மதிப்பீடுகள் தாமதம் அடைவதால், அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளிலும் தாமதம் ஏற்படுகின்றது எனவும் இதனால் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதில் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கை அடைந்துகொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன எனவும் பிரதேசச் செயலாளர்கள் எனக்குத் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்துள்ளார்கள். குறித்த காணித்துண்டை பெறுமதி மதிப்பிடுவதற்காக வரைபடம் கேட்கப்படுவதினால், காணியை நில அளவை செய்வதில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் பெறுமதி மதிப்பீடுகள் வழங்குவதில் நீண்ட தாமதம் ஏற்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை வழங்கும் பொருட்டு, கீழே தரப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குகின்றேன்

I. இவ்வாறு பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள காணிதுண்டுகளுக்குக் கொள்விலையை அறவிடும் பொருட்டுப் பெறுமதி மதிப்பீட்டைப் பெறுவதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுதல் (வரைபடம் கேட்கப்பட்டால், நில அளவை வேண்டுகோளை அனுப்பி, காணியை நில அளவை செய்த பின்பு, அவ்வாறு செயற்படுதல் வேண்டும்.)

II. இதற்கிடையில், கிராம அலுவலரின் விதப்புரையைப் பெற்றுக் கொண்டு, பிரதேசச் செயலாளர், குறித்த காணியின் கொள்விலையை அறவிட்டுக் கொள்வதற்காக, அந்தக் காணியை அண்ணளவாகப் பெறுமதி மதிப்பீடு செய்தல்.

III. அவ்வாறு அண்ணளவாகப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு ஏற்ப, பணத்தை அறவிட்டுக் கொண்டு, அனுமதிப் பத்திரத்தில் கீழே தரப்படுகின்ற நிபந்தனையை வேறு நிபந்தனைகள் குறிப்பிடப்படுகின்ற இடத்தில் உட்படுத்திக் கொண்டு, அனுமதிப் பத்திரத்தைத் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
"இந்தக் காணிக்கு உரிய கொள்விலையைப் பிரதான மதிப்பீட்டாளர் பெறுமதி மதிப்பீடு செய்து தீர்மானிக்கும் வரையிலும், அண்ணளவாகப் பெறுமதி விதிக்கப்பட்டுள்ளது உரிய பெறுமதி மதிப்பீடு கிடைக்கப்பெற்றதன் பின்பு, விதிக்கப்பட்டுள்ள பெறுமதி மதிப்பீட்டில் அறவிடப்படவேண்டிய மீதி இருக்குமெனில், இந்த மீதியைச் செலுத்துவதற்கு அனுமதிப் பத்திரக்காரர் கடப்பாடு உடையவர் ஆவார். அவ்வாறு செயற்படுவதற்குத் தவறினால், இந்த அனுமதிப் பத்திரம் இல்லாதொழிக்கப்படும்"

කාර්යාලය / பொது / General: 0112-797400
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0112-864051
ඊමේල් / ஈ-மெயில் / E-mail: info@landcom.gov.lk

Iv. மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து உரிய கொள்விலை மதிப்பீடு செய்ததன் பின்பு, அனுமதிப் பத்திரக்காரரிடமிருந்து அறவிட்டிருந்த பணத்தொகையை விடவும் அதிகமெனில், அறவிடப்படவேண்டிய வேறுபடும் பணத்தொகையை அவருக்குத் தெரிவித்து அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செயற்படும்போது, மீதிப் பணத்தைச் செலுத்துவதற்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்பதுடன், குறித்த காலப்பகுதியினுள் கொடுப்பனவைச் செலுத்தத் தவறினால், அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுதல் என்பதன் கீழ் அனுமதிப் பத்திரத்தை இல்ல தொழிப்பதற்கு ஏற்புடைத்தான சட்டரீதியான நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். இவ்வாறு குறித்த வேறுபடுகின்ற குத்தகை பணத்தை அறவிட்டுக் கொள்ளும் போது, அனுமதிப்பத்திரக்காரரின் வேண்டுகோளுக்கு அமைய கொடுப்பனவைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை நீடிப்பதற்குப் பிரதேசச் செயலாளர்களுக்கு முடியுமாகும். கொள்விலையைத் தவணை முறை அடிப்படையில் 10 வருடங்களுக்குள் அறவிட்டுக் கொள்ள முடியும். இந்தக் காலப் பகுதிக்குள் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறுமதி மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாகையால், அண்ணளவாக விதிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆகியவற்கு இடையில் வேறுபாடு இருந்தால், அதை எஞ்சியுள்ள தவணைக் கொடுப்பனவுடன் சேர்த்துக் கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

V மீதிப் பணத்தை அறவிட்டுக் கொண்டதும் அனுமதிப்பத்திரப் பேரேட்டில் ஏற்றவாறு குறிப்பை இட்டுக்கொள்ள வேண்டும். மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணியைப் பெறுமதி மதிப்பீட்டு செய்யும் வரையிலும், பிரதேசச் செயலாளர்களினால் அண்ணளவான பெறுமதி மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும்போது, குறித்த தொகை, மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு மேற்படாதவாறு இருக்கும் வகையில், அண்ணளவான பெறுமதி மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரதேசச் செயலாளர்கள் முயலவேண்டும் எனவும் எவ்வகையிலும் குறித்த அண்ணளவான பெறுமதி மதிப்பீடு, மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி மதிப்பீட்டுக்கு மேற்படுமெனில், அதிகரித்த பணத்தை மீளச் செலுத்தக்கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

கொள்விலையை அறவிடுவதன் கீழ், அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டிய வகுப்பினர் குறித்துச் சில பிரதேசச் செயலாளர்கள் தவறான பொருள்கோடலைக் கொண்டுள்ளார்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகையால் கொள்விலையை அறவிட்டுக்கொண்டு, அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதற்குத் தகைமை உடைய வகுப்பினர் குறித்துத் தற்போது வலுவிலுள்ள 2014.01.03 ஆந் திகதிய 1843/50 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பிற்கு அமைய விவசாய வகுப்பினர் இல்லாமல் ஏனைய வகுப்பினர்களுக்கு எனத் தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள். மேலே தரப்பட்டுள்ள நடைமுறைகைளைச் செயற்படுத்திக் காணிகள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.பி.ஆர். ராஜபக்ஷ,
காணி ஆணையாளர் நாயகம்

பிரதிகள் –: 1. செயலாளர், காணி அமைச்சு – தயவுடன் தகவலுக்காக,
2. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் - தயவுடன் தகவலுக்காக,
3. அனைத்து மாகாணக் காணி ஆணையாளர் - தயவுடன் தகவலுக்காக,

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT

"මිහිකත මැදුර", ඉඩම් මහලේකම් කාර්යාලය, 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
"மிஹிகதமெதுர", காணிச் செயலகம், 1200/6, ராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
"Mihikatha Medura", Land Secretariat, 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>MY NO | 4/1/சுற்றிக்கை | ඔබේ අංකය<br>உமது இ இல<br>YOUR NO | | දිනය<br>திகதி<br>DATE | |

**சுற்றறிக்கை இல.:** 2015/07

இணைப்பு 08

**பிரதேச செயலாளர்கள்/,**

**பிரதி/ உதவிக் காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடையிலான) அனைவருக்கும்.**

## விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்

### 1. அறிமுகம்:

அபிவிருத்தித் திட்டங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிக்கும் கொள்கையினை அரசாங்கம் கடைப்பிடித்து வருவதுடன், இவ்வாறான கருத்திட்டங்களுக்காக பொருத்தமான அரசாங்கக் காணிகளை இனங் கண்டு, அவற்றைப் பெற்றுத் தருமாறு கோரும் கோரிக்கைகள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன. நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைவாக, இவ்வாறு காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் போது காணப்படுகின்ற வினைத்திறன் இன்மை மற்றும் குறிப்பாக இத் தொழிற்பாட்டிற்காக கூடிய காலம் எடுக்கின்றமை தொடர்பாக முதலீட்டாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் விசேட கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் தொழிற்பாட்டை வினைத்திறனாக்கி, துரிதப்படுத்தும் நோக்குடன், ஏற்கனவேயுள்ள நடைமுறையில் திருத்தங்களை மேற்கொண்டு, **2012.10.18** ஆம் திகதிய **2012/06** ஆம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் புதியதொரு நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அத் தொழிற்பாட்டை மேலும் விருத்தி செய்து, மிக வினைத்திறன் மிக்க நடைமுறையொன்றை அறிமுகம் செய்யும் வகையில் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. அதற்கமைய, இச் சுற்றறிக்கை அமுலுக்கு வரும் திகதி தொடக்கம் எனது **2012/06** ஆம் இலக்கச் சுற்றறிக்கை முற்று முழுதாகத் திருத்தப்பட்டதாகக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

### 2. விசேட முதலீட்டுக் கருத்திட்டங்கள்:

இச் சுற்றறிக்கை மூலம் உள்ளடக்கப்படுகின்ற விசேட முதலீட்டுக் கருத்திட்டங்கள் என்பதிலிருந்து கருதப்படுவது, கீழ்க் காட்டப்பட்ட வகையைச் சேர்ந்த முதலீட்டுக் கருத்திட்டங்களாகும்.

i. அமைச்சரவையினால் அல்லது அமைச்சரவை உப குழுவொன்றினால் அல்லது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்றினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்கள்.

ii. இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்கள் அல்லது இவ்வாறு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் ஏதேனுமொரு காணியைப் பெற்றுக் கொடுப்பதற்காக முதலீட்டுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்கள்.

| | | | |
|---|---|---|---|
| දුරකථනය<br>தொலைபேசி<br>Telephone | 011-2797400 | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | 011-2864051 |
| වෙබ් ලිපිනය<br>இணையம்<br>Web Address | www.landcommdept.gov. | ඊමේල්<br>ஈ-மெயில்<br>E-mail | landcom@landcommdept.gov.lk |

கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டு, அவ் அமைச்சின் கீழ் அமுல் செய்யப்படுகின்ற கைத்தொழில் வலயங்கள் அல்லது கைத்தொழில் பேட்டைகளில் முன்னெடுக்கப்படுகின்ற முதலீட்டுக் கருத்திட்டங்கள்.

iv. இலங்கை நிலைபேறுதகு சக்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற சிறியளவிலான மின் உற்பத்திக் கருத்திட்டங்கள்.

## 3. விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் முறை:

1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவே முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கக் காணிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் இரண்டு முறைகள் காணப்படுகின்றன. அதாவது,

(அ) நீண்டகாலக் குத்தகையின் கீழ் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
(ஆ) அளிப்புப் பத்திரமொன்றின் மூலம் காணியின் முழு உரித்தையும் பெற்றுக் கொடுத்தல்.

நீண்டகாலக் குத்தகையின் கீழ் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் போது, நடைமுறையிலுள்ள கொள்கைகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப, முதலீட்டுக் கருத்திட்டத்தின் தன்மை, பெறுமதி என்பவற்றின் பிரகாரம் 30 வருடங்கள் தொடக்கம் 99 வருடங்கள் வரையிலான காலப்பகுதிகளுக்கு நீண்டகாலக் குத்தகைப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். இங்கு, குத்தகைத் தொகையை அறவிடல் தொடர்பாக சட்டத்திலுள்ள ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நடைமுறையிலுள்ள கொள்கைகள் என்பன ஏற்புடையதாகும்.

அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எழுத்து மூல அங்கீகாரத்துடன் மட்டுமே பூரண உரித்துடனான அளிப்புப் பத்திரமொன்றின் மூலம் அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். எனினும், அமைச்சரவையின் அங்கீகாரத்தினூடாகவும் அவ்வாறான கோரிக்கைகள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்குக் கட்டுப்பட்டு அமுல் செய்யப்படும்.

அளிப்புப் பத்திரங்கள் மூலம் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் போதும், அமுலிலுள்ள சட்ட திட்டங்கள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் என்பவற்றிற்கு அமைவாக காணியின் பெறுமதி அறவிடப்படும்.

## 4. விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கக் காணிகளைப் பராதீனப்படுத்துவதற்கான திருத்தப்பட்ட தொழிற்பாடு:

கீழ்க் காட்டப்பட்ட வேலைக் கட்டங்களையும், அதனுடன் தொடர்புடைய விடயங்களையும், நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலும், பூரண உரித்துடனான அளிப்புப் பத்திரமொன்றின் மூலமும், இச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இத் தொழிற்பாட்டினுள் அந்தந்த வேலைக் கட்டத்திற்காக செலவழிக்க வேண்டிய உச்ச காலப்பகுதி வழிகாட்டியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏதேனும் மிக முக்கிய காரணம் மீது தவிர, இக் காலப்பகுதியைத் தாண்டிச் செல்லாதிருப்பதற்கு உரிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் விசேட கவனம் செலுத்திச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற ஏதேனுமொரு பணியை, குறித்துரைக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கான பதில் கிடைக்காத பட்சத்தில்,

தேவையற்ற கால தாமதங்களைத் தவிர்க்கும் வகையில் குறித்த இணக்கம் கிடைக்கப் பெற்றதாகக் கருதி, அடுத்த கட்டம் கடைப்பிடிக்கப்படும்.

அரசாங்கக் காணிகள் தகவல் முகாமைத்துவ முறைமை **(e-slims)** அமுல் செய்யப்படுகின்ற பிரதேச செயலகங்களுடன் செயற்படும் போது, அந் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய தொழிற்பாட்டைக் கடைப்பிடித்து இவ் வேலைக் கட்டத்தை அதற்குப் பொருத்தமானவாறு ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

| | வேலைக் கட்டம் | பணி | பணி ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்/ நிறுவனம் | எதிர்பார்க்கப்பட்ட உச்ச காலப்பகுதி | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டம் 01 | முதலீட்டாளரினால் காணி ஆணையாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைத்தல். | விண்ணப்பதாரி | - | கோரிக்கையுடன் கீழ்க் காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>i. கருத்திட்ட அறிக்கை.<br>ii. கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதி.<br>iii. நிறுவனமொன்றாக இருப்பின் அந் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதுடன் தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகள். |
| 2. | கட்டம் 02 | கோரிக்கையை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல். | காணி ஆணையாளர் நாயகம் | 01 நாள் | அறிவுறுத்தல் கடிதமொன்றையும், கோரிக்கைக் கடிதத்துடன் பிற இணைப்பு ஆவணங்களையும் அனுப்புதல் வேண்டும். |
| 3. | கட்டம் 03 | சிபாரிசு அறிக்கைகளை வழங்க வேண்டிய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவைக் கூட்டி இணைந்த வெளிக்களப் பரிசோதனையொன்றை நடாத்தல். | பிரதேச செயலாளர் | 01 வாரம் | இக் குழு தொடர்பான விபரங்களும், அதன் பணிகளும் பந்தி 5 இல் காட்டப்பட்டுள்ளது. |
| 4. | கட்டம் 04 | குறித்த நிறுவனங்களிடமிருந்து சிபாரிசு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்.<br>காணிக்காக சுவடு வரைபடமொன்றைப் பெற்றுக் கொள்ளல். | பிரதேச செயலாளர் | 01 வாரம் | மாகாண சபையின் சம்மதம் தவிர, பிற நிறுவனங்களின் உரிய சிபாரிசுகளையும், நில அளவைத் திணைக்களத்தின் பிரதிநிதியினால் விநியோகிக்கப்படுகின்ற சுவடு வரைபடத்தையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>**e-slims** நிகழ்ச்சித் திட்டம் அமுலில் இருப்பின் காணி உத்தியோகத்தர்/ குடியேற்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உத்தியோகத்தரினால் உரிய தகவல்களை அதிலுள்ள நடவடிக்கை முறைக்கு அமைவாகப் பெற்றுக் கொண்டு தரவுத் தளத்தில் உட்சேர்த்தல் வேண்டும். |
| 5. | கட்டம் 05 | பிரதேச செயலாளரின் சிபாரிசுடனான அறிக்கையை, உரிய பிற ஆவணங்களுடன் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல்.<br><br>அவ் அறிக்கையின் முழுமையான பிரதியொன்றை மாகாணக் காணி ஆணையாளருக்கு அனுப்புதல் (மாகாண சபையின் சம்மதத்தை காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பெற்றுத் தருமாறு கோருகின்ற)<br><br>சுவடு வரைபடத்தின் படி காணியை மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுபுதல். | பிரதேச செயலாளர் | 03 நாட்கள் | பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டிய பிற ஆவணங்கள் தொடர்பான விபரங்கள் இங்கு பந்தி 6 இல் காட்டப்பட்டுள்ளது.<br><br>காணியை விலை மதிப்பீடு செய்வதற்கு அனுப்பும் போது சுவடு வரைபடத்தையும், கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியையும் அனுப்புதல் வேண்டும். விலை மதிப்பீட்டு அறிக்கையை பிரதேச செயலாளர் பெற்றுக் கொள்ளல் வேண்டும். **e-slims** நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்ற பிரதேச செயலகங்கள் அந் நிகழ்ச்சித் திட்டத்தின் வேலைக் கட்டத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். |
| 6. | கட்டம் 06 | மாகாண சபையின் சம்மதத்தை காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல். | மாகாணக் காணி ஆணையாளர் | 02 வாரங்கள் | |
| 7. | கட்டம் 07 | காணி அளக்கப்பட்டில்லையெனில், காணியை அளந்து அண்ணளவான மாதிரிப் படமொன்றை **(Sketch)** காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்காக நில அளவைக் கட்டளையொன்றை அனுப்புதல். | பிரதேச செயலாளர் | 02 நாட்கள் | நில அளவைக் கட்டளையுடன் சுவடு வரைபடத்தினதும், கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தினதும் பிரதிகளை அனுப்புதல் வேண்டும். |
| 8. | கட்டம் 08 | பிரதேச செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசு அறிக்கையை விசேட முதலீட்டுக் கருத்திட்ட அலகில் பதிவு செய்தல்.<br><br>மாகாண சபையின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளல். | காணி ஆணையாளர் நாயகம் | 03 நாட்கள் | இவ் வேளையாகும் போது மாகாணக் காணி ஆணையாளரின் சிபாரிசு கிடைக்கப் பெற்றில்லையெனில், காலக்கிரமத்தில் பெற்றுக் கொள்வதற்குக் கட்டுப்பட்டு அமைச்சிற்கு கோப்பைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சிபாரிசுக் கடிதத்தைத் தயாரித்து, கோப்புடன் காணி அமைச்சிற்கு அனுப்புதல். | | | e-slims நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படாத பிரதேச செயலகப் பிரிவொன்றிற்குரிய கருத்திட்டமொன்றாக இருப்பின், இவ் அலகின் மூலம் அந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளையும், ஆவணங்களையும் உட்சேர்த்து அடுத்த கட்டப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். |
| 9. | கட்டம் 09 | காணி அமைச்சின் செயலாளரினால் மாண்புமிகு காணி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று, அதனை கோப்புடன் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல். | காணி அமைச்சின் செயலாளர் | 01 வாரம் | இவ் விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக, காணி அமைச்சில் விசேட முன்னுரிமை வேலைத் திட்டமொன்று அமுல் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>மாண்புமிகு காணி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் போது, வர்த்தமானி அறிவித்தல்களை பிரசுரிக்காதிருப்பதற்குக் கட்டுப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படும். |
| 10. | கட்டம் 10 | மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதாகவும், அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் அடங்கிய | காணி ஆணையாளர் நாயகம் | 02 நாட்கள் | குத்தகை அறவிடல், காணியின் உடைமையை ஒப்படைத்தல் மற்றும் குத்தகை உடன்படிக்கையை தயாரித்தல் என்பவற்றுடன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கடிதமொன்றை, மாகாணக் காணி ஆணையாளருக்கும், விண்ணப்பதாரிக்குமான பிரதிகளுடன் பிரதேச செயலாளருக்கு அனுப்புதல். | | | தொடர்புடைய அறிவுறுத்தல்கள் இக் கடிதத்தில் அடங்கியிருத்தல் வேண்டும். |
| 11. | கட்டம் 11 | விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல், குத்தகைத் தொகையை மதிப்பீடு செய்தல், ஆரம்ப கட்டத்தில் அறவிட வேண்டிய குத்தகை/ விலை மதிப்பீட்டுப் பெறுமதியை அறவிட்டுக் கொள்ளல்.<br><br>காணியின் உடைமையை ஒப்படைத்தல் (காணி ஆணையாளர் நாயகத்திற்கு அதன் பிரதியொன்றை அனுப்புதல்)<br><br>குத்தகை/ விலை மதிப்பீட்டுப் பெறுமதி செலுத்தப்பட்டதாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல். | பிரதேச செயலாளர் | 01 வாரம் | |
| 12. | கட்டம் 12 | அண்ணளவான மாதிரிப் படமொன்றைப் பெற்றுக் கொள்ளல்.<br><br>குத்தகை உடன்படிக்கையை/ அளிப்புப் பத்திரத்தைத் தயாரித்தல்.<br><br>அளிப்புப் பத்திரதாரர்/ குத்தகைக்காரரை வரவழைத்து உடன்படிக்கையில்/ அளிப்புப் பத்திரத்தில் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளல்.<br><br>குத்தகை உடன்படிக்கையை/ அளிப்புப் பத்திரத்தை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்புதல். | காணி ஆணையாளர் நாயகம் | 01 வாரம் | |
| 13. | கட்டம் 13 | கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையை/ அளிப்புப் பத்திரத்தை நேரடியாகப் பெற்றுக் கொள்ளல்.<br><br>அதனை பதிவிற்காக நேரடியாக உரிய காணிப் பதிவாளருக்கு அனுப்புதல். (பதிவு செய்து உரிய பிரதேச செயலாளருக்கு அனுப்புமாறு அறிவித்தல்) | காணி ஆணையாளர் நாயகம் | 03 நாட்கள் | குத்தகை உடன்படிக்கையை பதிவு செய்வதற்காக காணிப் பதிவாளருக்கு அனுப்பப்படுகின்ற முகப்புக் கடிதத்தின் பிரதிகளை, மாகாணக் காணி ஆணையாளருக்கும், பிரதேச செயலாளருக்கும் அனுப்புதல் வேண்டும். |
| 14. | கட்டம் 14 | பதிவு செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கையை/ அளிப்புப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல். | பிரதேச செயலாளர் | 01 வாரம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | குத்தகை உடன்படிக்கையை/ அளிப்புப் பத்திரத்தை குத்தகைக்காரருக்கு/ அளிப்புப் பத்திரதாரிக்கு முறையாக ஒப்படைத்தல்.<br><br>இவ்வாறு முறையாக ஒப்படைத்ததாக காணி ஆணையாளர் நாயகத்திற்கும், மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்திற்கும் அறிவித்தல். | | | |

## 5. சிபாரிசு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்:

விசேட முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் அல்லது அளிப்புப் பத்திரமொன்றின் மூலம் அரசாங்கக் காணியொன்றைப் பெற்றுக் கொடுக்கும் போது, இதனுடன் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களினதும் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளல், குறித்த மாகாண சபையின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளல் (மாகாணங்களுக்கிடையிலான பிரதேசமாக இருப்பின் உரிய பிரதி/ உதவிக் காணி ஆணையாளரின் சிபாரிசு ஏற்புடையதாகும்), நில அளவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவர் மூலம் காணிக்கான சுவடு வரைபடமொன்றைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றின் போது அந் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவாகச் செயற்பட்ட வண்ணம் ஒரே நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் தேவையற்ற கால தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும், நிறுவனங்களுக்கிடையில் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்த்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் குழுவின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பிரதேச செயலாளர் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இப் பணிகளுக்காக பிரதேச செயலாளர் தமது பிரதிநிதியாக பொருத்தமான உத்தியோகத்தரொருவரை நியமித்துக் கொள்ளலாம். இக் குழுவானது, குழுவில் நிரந்தரமாக அங்கம் வகிக்க வேண்டிய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும், கருத்திட்டத்தின் தன்மை, காணியின் அமைவிடம் என்பவற்றிற்கு ஏற்ப அந்தந்த கருத்திட்டத்துடன் தொடர்புடையவாறு வேறுபடக் கூடிய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

**குழுவில் நிரந்தரமாக அங்கம் வகிக்க வேண்டிய பிரதிநிதிகளின் விபரம் வருமாறு:**

1. பிரதேச செயலாளர் (அல்லது அவரது பிரதிநிதி)
2. பிரதேச செயலகத்தின் காணி உத்தியோகத்தர்/ குடியேற்ற உத்தியோகத்தர்/ வெளிக்களப் போதனாசிரியர்
3. உரிய காணி உபயோக திட்டமிடல் உத்தியோகத்தர்
4. சுற்றாடல் உத்தியோகத்தர்
5. மாகாணக் காணி ஆணையாளரின் பிரதிநிதி/ மாகாணங்களுக்கிடையிலான பிரதிக் காணி ஆணையாளரின் பிரதிநிதி
6. உரிய சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் அல்லது அவரது பிரதிநிதி
7. உரிய உள்ளூராட்சி நிறுவனத்தைப் பிரதிநிதிப்படுத்தும் பிரதிநிதி

**கருத்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப சந்தர்ப்பத்திற்கேற்றவாறு குழுவின் பிற பிரதிநிதிகளின் விபரம் வருமாறு:**

1. நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி
2. இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிநிதி
3. கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சின் பிரதிநிதி
4. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு அதிகார சபையின் பிரதிநிதி

5. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிநிதி
6. தொல்பொருள் திணைக்களத்தின் பிரதிநிதி
7. வன பரிபாலனத் திணைக்களத்தின் பிரதிநிதி
8. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிநிதி
9. நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி
10. மத்திய சுற்றாடல் அதிகார சபையின்/ உரிய மாகாண சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி
11. இலங்கை நிலைபேறுதகு சக்தி அதிகார சபையின் பிரதிநிதி
12. கருத்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய பிற அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள்.

இக் குழுவுடன் தொடர்புடைய நிரந்தர அங்கத்தவர்கள் தவிர ஏனைய அங்கத்தவர்களை தொடர்புபடுத்திக் கொள்ளும் போது, குறித்த கருத்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப தேவையான உத்தியோகத்தர்களை மட்டும் அழைப்பதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மாகாணக் காணி ஆணையாளரின் பிரதிநிதி குழுவுடன் தொடர்புபடுவதன் மூலம், மாகாண சபையின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் அல்லது அவரது பிரதிநிதி குழுவுடன் தொடர்புபடுவதன் மூலம் ஆரம்ப நடவடிக்கைகளுக்குத் தேவையான காணியின் சுவடு வரைபடமொன்றைத் தயாரித்துக் கொள்வதற்கும், அண்ணளவான மாதிரிப் படமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான ஆயத்தங்களைச் செய்விப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த காணிகள் வன பரிபாலனத் திணைக்களத்தின் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகளாக இருப்பின், உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அக் காணிகளை விடுவித்துக் கொள்வது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிப்பது, அத் திணைக்களங்களின் பிரதிநிதிகள் இக் குழுவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் தொடர்புடைய காணிகள் தொடர்பில், அத் திணைக்களத்தின் இவ்வாறான கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் குழுவிற்கு தீர்மானங்களை வழங்குவதற்காக தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வது இக் குழுவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

மாகாண சபைகளின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வது, சுற்றாடல் ரீதியில் புறத்தூண்டுதல் மிக்க காணிகள் தொடர்பானதாயின், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அல்லது மாவட்ட காணி உபயோக திட்டமிடல் குழுவின் சிபாரிசையும், முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டம் தொடர்பானதாக இருப்பின் முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தை அல்லது சிபாரிசையும், வன பரிபாலனத் திணைக்களம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய காணியாக இருப்பின் அத் திணைக்களங்களின் சம்மதத்தையும் கட்டாயம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அது தவிர பிற தொடர்புடைய நிறுவனங்களின் சிபாரிசுகளை கேட்கப்பட்ட காலப்பகுதியினுள் (அறிவிக்கப்பட்ட விசேட காரணம் இருப்பின் தவிர) பெற்றுத் தராதிருப்பின் அல்லது பிரதேச செயலாளரின் கடிதங்களுக்கு அமைய உரிய காலப்பகுதியில் குழுவில் கலந்து கொள்வதிலிருந்து தவிர்ந்து எந்தவித பதிலும் காட்டாதிருப்பின், அந் நிறுவனங்களினால் சம்மதம் அல்லது சிபாரிசு வழங்கப்பட்டதாகக் கருதி பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறித்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடமிருந்து சிபாரிசுகளைப் பெற்றுத் தருமாறு கோரும் போது அல்லது குழுவிற்கு அழைக்கும் போது, அவ்வாறு செயற்படுவதாக பிரதேச செயலாளர் ஆரம்பத்தில் அறிவித்தல் வேண்டும்.

## 6. பிரதேச செயலாளரினால் சிபாரிசு அறிக்கைகளை அனுப்புதல்:

சிபாரிசு அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக பிரதேச செயலாளரினால் உரிய குழுவை ஒருங்கிணைப்புச் செய்து, இணைந்த வெளிக்கள விசாரணைகளை மேற்கொண்டு, உரிய சிபாரிசு அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்று, பிரதேச செயலாளரின் சிபாரிசு சகிதம் மாகாணக் காணி ஆணையாளருக்கு எல்லா இணைப்புகளினதும் பிரதிகளுடன் அறிக்கையின் பிரதியொன்றை அனுப்பி, மூலப் பிரதியை உரிய காலப்பகுதிக்குள் எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மாகாணக் காணி ஆணையாளர் மாகாண சபையின் சம்மதத்தைப் பெற்று தனியாக எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சிபாரிசு அறிக்கைகளை அனுப்பும் போது பிரதேச செயலாளர் கீழ்க் காணும் ஆவணங்களை எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக, மீண்டும் மீண்டும் சரி செய்வதற்கு எடுக்கும் அநாவசியமான கால தாமதங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டுமாகையால், இவ் ஆவணங்களை மிகச் சரியாகவும், பூர்த்தியானதாகவும் ஒரே தடவையில் அனுப்பி வைப்பதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**சிபாரிசு அறிக்கையுடன் அனுப்ப வேண்டிய ஆவணங்கள்:**

1. 19 வது அனுபந்தம்
2. காணியின் நிலை பற்றி அறிக்கை
3. 17 வது அனுபந்தம்
4. காணியின் சுவடு வரைபடம்
5. கம்பனியொன்றாயின் கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ்
6. கருத்திட்ட அறிக்கை
7. கம்பனியொன்றாயின் பங்குரித்து தொடர்பான ஆவணங்கள்

இச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள நடைமுறைகள் பொதுவாக பௌதீக ஆவணங்களைப் பரிமாறிக் கொள்ளும் தொழிற்பாட்டினூடாக மேற்கொள்வதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், **e-slims** நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்ற பிரதேச செயலகங்கள் மூலம் செயற்படும் போது குறித்த வேலைக் கட்டங்களுக்காக அந்த **e-slims** நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய வேலைக் கட்டம் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

07. இக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் தொடர்பில் முன்னுரிமையுடன் செயற்பட்டு துரிதமாகக் காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இத் திணைக்களத்தில் காணிப் பிரிவின் கீழ் விசேட முதலீட்டுக் கருத்திட்டப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவிற்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தராக உதவிக் காணி ஆணையாளர் (காணி) திருமதி எஸ்.ஏ. கலானி எம். தனசேக்கர அவர்கள் இணைக்கப்பட்டுள்ளார். இப் பிரிவினைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் வருமாறு.

தொலைபேசி இல.: **011-2797427, 077-6499164**

பெக்ஸ் இல.: **011-2873110**

மின்னஞ்சல்: kalani.madara@gmail.com

இச் சுற்றறிக்கையை அமுல் செய்யும் போது ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றும் பட்சத்தில் தாமதியாது உடன் என்னைத் தொடர்பு கொள்ளவும்.

***ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ***
**காணி ஆணையாளர் நாயகம்**

*பிரதி:*

01. ஜனாதிபதி செயலாளர் - தயவுகூர்ந்து தகவலுக்காக.
02. பிரதமர் செயலாளர் - தயவுகூர்ந்து தகவலுக்காக.
03. செயலாளர், காணி அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக.
04. செயலாளர், கொள்கைத் திட்டமிடல் அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக.
05. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக.
06. செயலாளர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக.
07. செயலாளர், கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக.
08. மாகாண பிரதம செயலாளர்கள் - தயவுகூர்ந்து தகவலுக்காக.
09. நில அளவையாளர் நாயகம் - எல்லா சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்களையும் தெளிவூட்டும் பொருட்டு.
10. பிரதான விலை மதிப்பீட்டாளர் - உரிய உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் பொருட்டு.
11. பணிப்பாளர் நாயகம், காணி உபயோக, கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் - தயவுகூர்ந்து தகவலுக்காக.
12. பதிவாளர் நாயகம் - மாவட்ட காணிப் பதிவாளர்களை அறிவுறுத்தும் பொருட்டு.
13. வன பரிபாலகர் நாயகம் - உரிய நடவடிக்கைக்காக.
14. வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம் - உரிய நடவடிக்கைக்காக.
15. தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக.
16. தொல்பொருள் ஆணையாளர் நாயகம் - உரிய நடவடிக்கைக்காக.
17. பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் - உரிய நடவடிக்கைக்காக.
18. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக.
19. தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை - உரிய நடவடிக்கைக்காக.
20. தலைவர், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக.
21. தலைவர், நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக.
22. பணிப்பாளர் நாயகம், இலங்கை நிலைபேறுதகு சக்தி அதிகார சபை - உரிய நடவடிக்கைக்காக.
23. மாவட்டச் செயலாளர்கள் - உரிய நடவடிக்கைக்காக.
24. மாகாணக் காணி ஆணையாளர்கள் - உரிய நடவடிக்கைக்காக.

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය,
නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல: 1200/6, ராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011-2864051
ඊමේල් / ஈ-மெயில் / E-mail - info@landcommdept.gov.lk

මගේ අංකය / எனது இல / MY NO - 5/2/6 ரண்பிம சுற்றறிக்கை
ඔබේ අංකය / உமது இல / YOUR NO -
දිනය / திகதி / DATE - 2015.12.30

சுற்றறிக்கை இல : 2015/08

இணைப்பு 09

அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள்
பிரதிக்/ உதவிக்காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரங்கள் தொடர்பான பின் நடவடிக்கைகள்.

மேலே தரப்பட்டுள்ள விடயம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள என்னுடைய 2007.09.19 ஆந் திகதிய 2007/03 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் அதில் திருத்தம் செய்யப்பட்ட சுற்றறிக்கைகளுக்குத் தங்களுடைய கவனத்தை வேண்டுகிறேன்.

மேற்கூறிய சுற்றறிக்கைகளின் பிரகாரம், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரின் மரணத்தின் போது, வாழ்க்கைத் துணைக்கு உரித்தாகின்ற ஆயுள் நலஉரித்து உரிமையைத் தகுதிச் சான்றுபடுத்திப் பதவுசெய்வதற்கும் அதேபோன்று, பின் உரிமையைப் பெயர் குறிப்பிட்டிருக்காத சந்தர்ப்பத்தில், உரிமையாளர் மற்றும் வாழ்க்கைத் துணை ஆகியோரின் மரணத்தின் பின்பு, அளிப்புப்பத்திரத்தின் உரிமை, கட்டளைச் சட்டத்தின் III ஆம் அட்டவணைக்கு ஏற்பத் தகைமை பெறுகின்ற நபருக்கு உரிமையாகும்போது, குறித்த உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்திப் பதிவுசெய்வதற்கும் நிருவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பதிவுசெய்வதற்கெனக் காணிப் பதிவாளருக்கு அனுப்பவேண்டிய ஆவணங்கள் குறித்துப் படிவங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் போது, பிரதேசச் செயலாளர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பத் தகைமை உள்ள நபர்களுக்குக் குறித்த உரிமையைத் தகுதிச் சான்றுபடுத்துவதற்குப் பதிலாக பிழையான முறையில் வேறு நபர்களுக்குக் குறித்த உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்திப் பதிவு செய்யப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்கள் தற்போது வரையிலும் அறிக்கை இடப்பட்டுள்ளன. அவ்வாறு பிழையாகப் பதிவு செய்துள்ளமையை திருத்துவதற்கான வழிமுறை அறிவுறுத்தல்களை வழங்குமாறு பிரதேசச் செயலாளர்களும் மாகாணக் காணி ஆணையாளர்களும் என்னிடம் வேண்டி உள்ளனர். அதற்கமைய, இவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழே தரப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிழைகளை திருத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

கீழே தரப்பட்டுள்ள உரிமைத் தகுதி சான்றுப்படுத்தல், உரிய தகைமையைப் பெற்றிருக்காத நபர்களுக்கு பிழையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அவை தொடர்பான பூரண விபரங்களை மாகாணக்காணி ஆணையாளர்கள்/ பிரதிக்காணி ஆணையாளர்கள் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஆகியோருக்கு பிரதிகள் இட்டு எனக்கு அனுப்பிவைத்து திருத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

I. ஆயுள் நலஉரித்தைச் சான்றுப்படுத்தல்
II. III ஆம் அட்டவனையின்படி மரபுரிமையாளர் உரித்தாளிக்குக் கிடைத்த உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்தல்.

කාර්යාලය / பொது / General - 011-2797400
ආයතන / நிர்வாகம் / Establishment
ගිණුම් / கணக்கு / Accounts
ඉඩම් / காணி / Land
සංවර්ධන / அபிவிருத்தி / Development

இவ்வாறாக என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு, இங்கே இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 'அ' படிவத்திற்கு ஏற்ப முன்பு செய்யப்பட்ட ஆயுள் நல உரித்தின் பிழையான பதிவு செய்தலை திருத்துவதற்கான ஆவணங்களை குறித்த காணிப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும். அதற்கேற்ப, காணிப் பதிவாளரினால் அந்தப் பிழையைத் திருத்தி குறித்த இருமடித் தாளில் சரியான நபருடைய ஆயுள் நலஉரித்தி உரிமை பதிவுசெய்யப்படும்.

III ஆவது அட்டவணைப்படி மரபுரிமை உரித்தாளிக்குப் பிழையாக உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்தி பதிவுசெய்துள்ளதைத் திருத்துவதற்காக, இணைப்பு 'ஆ' படிவத்தை உபயோகித்து, மேலே கூறியவாறே செயற்பட வேண்டும்.

இவ்வாறாகப் பிழையாக ஆயுள் நலஉரித்து அல்லது மரபுரிமை பதிவு செய்ததன் பின்பு மேலும் பின்உரிமை குறித்துப் பெயரிடுதல், உரிமையைக் கைமாற்றம் செய்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து அவ்வாறன பிழைகள் வெளிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றைத் திருத்துவதன் மூலமாகச் சில திறந்தவர்களுக்கு அதிக வேதனை உண்டாகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகையால் இவ்வாறான சந்தர்ப்பங்களில், குறித்த திறந்தவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அனைத்து திறந்தவர்களும் திருப்தி அடையும் வண்ணம் தீர்வுகளை வழங்குவதற்கு முடிந்த மட்டும் முயற்சிகள் எடுத்தல் வேண்டும். ஆகையால் பிழைகளைத் திருத்துவதற்காக என்னுடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பூரணமான விபரங்களை அனுப்பிவைக்க வேண்டியது பிரதேசச் செயலாளர்களின் பொறுப்பாகும்.

ஆர்.பி.ஆர். ராஜபக்ஷ
காணி ஆணையாளர் நாயகம்

பிரதிகள்

01. செயலாளர், காணி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
02. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
03. பதிவாளர் நாயகம் - அனைத்துக் காணி பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்குவதற்காக
04. அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள் - உரிய நடவடிக்கைக்காக

இணைப்பு 'அ'

எனது இலக்கம் ..............................

.............................................. அலுவலகம்

.............................................. ஆந் திகதி

காணி மற்றும் மாவட்டப் பதிவாளர்

..................................................................................

1969 ஆம் ஆண்டிண் 16 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டிண் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்திச் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தில் பிழையாக பதிவுசெய்யப்பட்டுள்ள ஆயுள் நலவுரித்துக்குரிய தகுதிச் சான்றளிப்பைத் திருத்துதல்

.............................................. மாகாணசபையில் .............................................. பிரதேசச்செயலாளர் பிரிவின் பிரதேசச்செயலாளர் /பிரதிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)ஆகிய .............................................. ஆகிய நான், 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டிண் 27 ஆம் இலக்கக் காணி அபிவிருத்திச் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட, காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் (464ஆம்அத்தியாயம்) ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு .............................................. என்பவரின் பெயரில் வழங்கப்பட்டிருக்கும் கீழே அட்டவணையில் விபரங்கள் தரப்பட்டுள்ள .............................................. ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் அளிப்புப்பத்திரம் பெறுநரான மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் மரணத்தின் பின்பு, குறித்த அளிப்புபெறுநரின் சட்டமுறையான வாழ்க்கைத்துணை எனக் கருதி .............................................. என்பவரின் பெயரில் அளிப்புப்பத்திரத்தின் ஆயுள் நலவுரித்தினைக் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 48 மற்றும் (48அ) பிரிவுகளின் கீழ், தகுதிச் சான்றளிப்புச் செய்யப்பட்டுப் பதிவுசெய்வதற்காக அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், குறித்த அளிப்புப் பத்திரம் பதிவுசெய்யப்பட்டுள்ள இருமடித்தாளில் குறித்த ஆயுள் நலஉரித்து தகுதிச் சான்றளிப்புச் செய்யப்பட்டமை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், இருப்பினும் குறித்த ஆயுள் நலஉரித்தைத் தகுதிச் சான்றளிப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் பிழையானவை என வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினால், குறித்த ஆயுள் நலஉரித்து தகுதிச் சான்றளிப்புச் செய்யப்பட்டமை பிழை எனவும் இதன் பிரகாரம் குறித்த பிழையைத் திருத்துமாறு, காணி ஆணையாளர் நாயகம், .............................................. ஆந் திகதிய .............................................. ஆம் இலக்கக் கடிதத்தில் எனக்கு அறிவித்திருப்பதினால், குறித்த ஆயுள் நல உரித்து தகுதிச் சான்றளிப்புப் பதிவு செய்யப்பட்டுள்ளமை இரத்து செய்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர், குறித்த அளிப்புப்பத்திரத்தின் ஆயுள் நலஉரித்துக்கு உரிமை கொண்டுள்ளவர் எனச் சான்று படுத்தப்பட்டுள்ளமையினால், குறித்த நபரை ஆயுள் நலஉரித்து உரிமையாளர் எனப் பதிவு செய்யுமாறு தயவுடன் தெரிவிக்கின்றேன்.

குறித்த அட்டவணை

வடக்கில் ..............................................................................................

கிழக்கில் ..............................................................................................

தெற்கில் ..............................................................................................

மேற்கில் ..............................................................................................

இந்த அளிப்புப்பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கான விபரங்கள்

| அளிப்புப்பத்திரத்தின் இலக்கம் | பதிவுசெய்த இலக்கம் | பதிவுசெய்த திகதி |
|---|---|---|
| .............................. | .............................. | .............................. |

சரியான ஆயுள் நலஉரித்து உரிமையாளர் (அளிப்புப்பத்திரம் பெறுநரின் வாழ்க்கை துனை) பற்றிய விபரங்கள்

I. சரியான வாழ்க்கை துனையின் பெயர் ..............................................................................................

II. முகவரி ..............................................................................................

இந்தக் கடிதத்தின் 3 பிரதிகளை இத்துடன் அனுப்புகின்றேன்.

பிரதேசச்செயலாளர்/ பிரதிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)

..............................................................................................

இணைப்பு 'ஆ'

எனது இலக்கம் ..................
.................... அலுவலகம்
.................... ஆந் திகதி

காணி மற்றும் மாவட்டப் பதிவாளர்

..................................................

1969 ஆம் ஆண்டிண் 16 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டிண் 27 ஆம் இலக்கக் காணி அபிவிருத்திச் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தில் பிழையாக பதிவு செய்யப்பட்டுள்ள ஆரம்ப உரிமைக்கான தகுதிச்சான்றளிப்பைத் திருத்துதல்.

.................... மாகாண சபையில் .................... பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேசச் செயலாளர் / பிரதிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஆகிய ....................

ஆகிய நான், 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டிண் 27 ஆம் இலக்கக் காணி அபிவிருத்திச் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் (464 ஆம் அத்தியாயம் ) ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு, ....................
என்பவரின் பெயரில் வழங்கப்பட்டிருக்கும் கீழே அட்டவனையில் விபரங்கள் தரப்பட்டுள்ள .................... ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் அளிப்புப் பத்திரம் பெறுநரின் மரணத்தின் பின்பு, குறித்த அளிப்புப் பத்திரத்தின் மரபுரிமையாளர் உரித்தாளியாக்க கருதப்பட்டு .................... என்பவருக்கு குறித்த அளிப்புப் பத்திரத்தின் ஆரம்ப உரிமையைத் தகுதிச்சான்று செய்து, குறித்த அளிப்புப் பத்திரத்தைப் பதிவு செய்துள்ள இருமடித்தாளில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், அதற்கேற்ப குறித்த இருமடித்தாளில் அது பதிவுசெய்யப்பட்டுள்ளது எனவும் இருப்பினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் பிழையானவை என வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், குறித்த ஆரம்ப உரிமையைத் தகுதிச் சான்றளிப்புச் செய்யப்பட்டமை பிழை எனவும், இதன் பிரகாரம் குறித்த பிழையைத் திருத்துமாறு, காணி ஆணையாளர் நாயகம் .................... ஆந் திகதிய .................... ஆம் இலக்கக் கடிதத்தில் எனக்கு அறுவித்திருப்பதினால், குறித்த ஆரம்ப உரிமையை தகுதிச் சான்றளிப்புச்செய்து பதிவு செய்யப்பட்டுள்ளமையை இரத்துசெய்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர், குறித்த அளிப்புப்பத்திரத்தின் சரியான மரபுரிமையாளர் உரித்தாளி எனச் சான்று படுத்தப்பட்டுள்ளமையால், குறித்த நபருடைய பெயரில் ஆரம்ப உரிமையைத் தகுதிச் சான்றுப்படுத்திப் பதிவுசெய்யுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரிமையைத் தகுதிச் சான்றுபடுத்திப் பதிவுசெய்யுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறித்த அட்டவணை
வடக்கில் ....................
கிழக்கில் ....................
தெற்கில் ....................
மேற்கில் ....................

சரியான மரபுரிமையைத் தகுதிச் சான்றுபடுத்துவதற்கு உரித்துடைய நபர் பற்றிய விபரங்கள்
I. மரபுரிமையாளர் உரித்தாளியின் பெயர் ....................
II. முகவரி ....................
III. மரபுரிமையாளர் உரித்தாளியின் உறவுமுறை ....................

இந்த அளிப்புப்பத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளமைக்கான விபரங்கள்

| அளிப்புப்பத்திரத்தின் இலக்கம் | பதிவுசெய்த இலக்கம் | பதிவுசெய்த திகதி |
|---|---|---|
| .................... | .................... | .................... |

இந்தக் கடிதத்தின் 3 பிரதிகளை இத்துடன் அனுப்புகின்றேன்.
பிரதேசச்செயலாளர்/ பிரதிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட)

..................................................

ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
"මිහිකත මැදුර", ඉඩම් මහලේකම් කාර්යාලය, 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
"மிஹிகதமெதுர", காணிச் செயலகம், 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
"Mihikatha Medura", Land Secretariat, 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය / எனது இல / MY NO: 4/1/சுற்றறிக்கை
ඔබේ අංකය / உமது இ இல / YOUR NO:
දිනය / திகதி / DATE: 2015. 12. 30

சுற்றறிக்கை இலக்கம் : 2015/09

இணைப்பு 10

அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள்,
பிரதி/உதவிக்காணி ஆணையாளர்கள்(மாகாணங்களுக்கிடைப்பட்ட),

**அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வதிவிட நடவடிக்கைக்கென காணிகள் வழங்கும்போது அதே சமயத்தில் அளிப்புப்பத்திரங்கள் வழங்குதல்.**

வதிவிட நடவடிக்கைக்கென அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணிகள் உரியவாறு அபிவிருத்தி செய்யப்பட்டு,ஆட்சி செய்யப்படுகின்றதெனில்,மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிட்டக்கொண்ட பின்பு இலவச அளிப்புப்பத்திரங்கள் வழங்கப்படுதல் தற்போதைய கொள்கையாகும்.விண்ணப்பதாரருக்கு முதலில் நீண்ட காலக்குத்தகை முறி ஒன்றை வழங்கிய பின்பு,அளிப்புப்பத்திரம் வழங்குதல் இது வரையிலும் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ள நடைமுறையாகும்.இருந்தபோதிலும்,இந்த நடைமுறையைச் செயற்படுத்தும்போது,வதிவிட நடவடிக்கைக்கென காணி வழங்குவதில் நீண்ட காலம் எடுக்கப்படுகின்ற காரணத்தினால்,சேவைபெறுனர்கள் கஷ்டத்திற்கு உள்ளடக்கப்படுவதுடன்,ஒரே விடயத்திற்குச் சிக்கலான இரண்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதினால் நிருவாக மட்டத்திலும் இடைஞ்சல்கள் ஏற்படுகின்றதெனவும் இனங்காணப்பட்டுள்ளது.

காணிகள் வழங்கும்போது, ஏற்படுகின்ற சிரமங்களைக் குறைத்துக்கொள்ளும் குறிக்கோளுடன், எதிர்காலத்தில் அரசகாணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வதிவிட நடவடிக்கைக்கென காணிகள் வழங்கும்போது,கீழே தரப்பட்டுள்ள கொள்கை அளவிலான தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி அமைச்சின் செயலாளரின் 4-1/28(iv) தொகுதி,இலக்க 2015-12-10 ஆம் திகதி கடிதம் முலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதற்கு ஏற்றவாறு,அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய,கீழே தரப்பட்டுள்ள வகுப்பினர்களுக்கு ஏற்றவாறு வதிவிட நடவடிக்கைக்கெனக் காணித் துண்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ள நபர் ஒருவருக்குக் குறித்த காணியை அபிவிருத்தி செய்து,நிரந்தரமாக வசித்து வருகின்றார் எனில்,குறித்த காணியின் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதித்தொகை மற்றும் தவணைப் பணத்தைச் செலுத்திய பின்பு,அதே சமயத்தில் அளிப்புப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

i.இதுவரையிலும் நீண்ட காலக் குத்தகைக்கான அங்கீகாரம் வழங்கப்படாமல்,ஆனால் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் உள்ள நபர்களுக்கு

ii.நீண்டக்காலக்குத்தகைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு மற்றும் குத்தகை செயற்படுத்தப்பட்டுள்ள திகதியிலிருந்து 10 வருடங்கள் கடந்துள்ள நபர்களுக்கு

iii.நீண்டக் காலக் குத்தகைமுறி ஒன்று வழங்கப்பட்டு,குத்தகை செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 05 வருடங்கள் கடந்துள்ள நபர்களுக்கு

දුරකථනය / தொலைபேசி / Telephone: 011-2797400
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2864051
වෙබ් ලිපිනය / இணையம் / Web Address: www.landcommdept.gov.
ඊමේල් / ஈ-மெயில் / E-mail: landcom@landcommdept.gov.lk

இவ்வாறு,அதே சமயத்தில் அளிப்புப்பத்திரங்கள் பெற்றுக்கெள்வதற்கு எதிர்பார்கின்ற நபர்களுக்கு,அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுதல்,மதீப்பீட்டுப் பணத்தைச் செலுத்தி நிறைவு செய்த பின்பு ஆகும்.மேலும்,தற்பொழுது மேற்கூறியவாறு அளிப்புப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு தகைமை இருந்தும், அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்காத நபர்களுக்கு,நீண்டகாலக் குத்தகை முறியைப் பெற்றுக் கொள்ள முடியும்,என்பதுடன் அவர்கள் எதிர்பார்ககின்ற பின்பு வருகின்ற திகதியொன்றில் மேற்கூறியவாறு அளிப்புப்பத்திரம் ஒன்றிற்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ்வாறாக,அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ்,வதிவிட நடவடிக்கைக்கென காணியை வழங்கும் போது,மேலே தரப்பட்டுள்ள வகுப்புக்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஏற்புடைத்தவாறு,அதே சமயத்தில் அளிப்புப்பத்திரங்கள் வழங்குதல் சம்பந்தமாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தித் தகைமை பெற்றுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் பெற்றுக்கொண்டு,தொடர் நடவடிக்கைகளை எடுக்கத் தாங்கள படிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ
காணி ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :-

01.செயலாளர்,காணி அமைச்சு
02.அனைத்து மாகாணக் காணி ஆணையாளர்கள்
03.தலைமை அலுவலக அனைத்துப் பதவி நிலை அலுவலர்கள்
04.காணிப்பிரிவைச் சேர்ந்த அனைத்து அலுவலர்கள்
05ஆவணக் காப்பாளர்